விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

Registered as a Newspaper in Srilanka

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 மாசி 26 ஞாயிற்றுக்கிழமை (10.03.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 081

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# கடும் நிபந்தனைகளுடன் புதிய பிரேரணை தேவை

## கனடா, ஐரோப்பிய நாடுகள் வலியுறுத்து

(ஜெனிவா)

**இலங்கை மீதான அமெரிக்காவின் புதிய பிரேரணை வலிமையற்றது எனவும், இதனால் கடுமையான நிபந்தனைகளை உள்ளடக்கி இந்தப் பிரேரணை கொண்டு வரப்பட வேண்டும் என்றும் கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.** (23ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனிவா விவாதத்திற்கான இந்தியக் குழு நியமனம்

(புதுடில்லி)

ஜெனிவாவில் இடம்பெறுகின்ற மனித உரிமைகள் மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவுள்ள இலங்கைக்கு எதிரான பிரேரணையின் விவாதத்தில் கலந்து கொள்வதற்கான இந்தியக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவிற்கு சமாஜ்வாடி கட்சியின் தலைவர் முலாயம் சிங் யாதவ் தலைமை வகிக்கின்றார்.

இந்தியவெளியுறவுத்துறைஅமைச்சர் சல்மான் குர்ஷித் இதனைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவினால் தயாரிக்கப்பட்ட இந்தப் பிரேரணைக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று தமிழகக் கட்சிகளும், இந்திய எதிர்க்கட்சிகளும் இந்தியாவிற்கு அழுத்தம் கொடுக்கின்றன.

எனினும் தாம் தமிழர்களையோ அல்லது இலங்கை அரசாங்கத்தையோ நேரடியாகப் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை என்று சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் இந்தப் பிரேரணை மீதான வாக்கெடுப்பில், முலாயம் சிங் யாதவ் சிறந்த தீர்மானத்தை மேற்கொள்வார் என்ற நம்பிக்கை இந்தியமத்திய அரசாங்கத்துக்கு இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினைக்குத் தீர்வு கோரி சென்னை லயோலா கல்லூரி மாணவர்கள் 8 பேர் நேற்று முன்தினத்திலிருந்து சாகும்வரையான உண்ணா விரதப் போராட்டத்தை தொடங்கினர். இவர்களை ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ நேற்று ஆதரவு தெரிவித்து பார்வையிட்ட போது...



## கிணற்றில் விழுந்து குடும்பப் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றினுள் தவறி வீழ்ந்ததில் குடும்பப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்றுக் காலை கோப்பாய் தெற்கு கட்டப்பிராய் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில்அதேயிடத்தினைச்சேர்ந்த சுந்தரலிங்கம் விமலாதேவி (வயது -59) என்ற குடும்பப் பெண்ணே உயிரிழந்தவராவார்.

வீட்டில் தனித்திருந்த பிரஸ்தாப பெண் நீர் எடுப்பதற்காக சென்ற போது கிணற்றினுள் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-17)

## ராகுல் காந்தி மனதை கலங்க வைத்த பாலகன்



(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் இளையமகன் பாலச்சந்திரன் படுகொலை உலகத்தை உலுக்கியது போலவே காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தியின் மனதையும் பாதித்து விட்டது என டில்லி அரசியல் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இலங்கையில் லட்சக்கணக்கான மக்கள் அந்த நாட்டு இராணுவத்தால் ஈவு இரக்கம் இன்றி படுகொலை செய்யப்பட்டனர்.

தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். சுதந்திரமான பன்னாட்டு விசாரணை வேண்டும் என்று தமிழகத்தைச் சேர்ந்த பல்வேறு அரசியல் கட்சிகள் ஐ.நாவுக்கு கோரிக்கை விடுத்து வருகின்றன.

இதே போல உலக நாடுகளில் உள்ளதமிழர்கள் பலர் குரல்கொடுத்து வருகின்றனர். இந்த நிலையில் விடுதலைப்புலிகள் இயக்க தலைவர் பிரபாகரனின் 12 வயது பாலகன் பாலச்சந்திரன்டுகொலைசெய்யப்பட்ட காணொளி மற்றும் புகைப்படங்கள் வெளியானது. (23 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழர்கள் தற்கொலை செய்யவில்லை

### சவேந்திர சில்வா

(கொழும்பு)

2009-ம் ஆண்டுயுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது முதல் இது வரையில் போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணையை வலியுறுத்தி இலங்கைத் தமிழர் எவரும் தற்கொலை செய்து கொள்ளவில்லை என ஐக்கியநாடுகள் அமைப்பிற்கான இலங்கை பிரதி வதிவிடப் பிரதிநிதிசவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் போர்குற்றம் தொடர்பில் விசாரணை நடத்து மாறு கோரி இலங்கைத் தமிழர்கள் உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ ஒரு போதும் தற்கொலை செய்து கொள்ளமாட்டார்கள்.

புலிகளின் பிடியிலிருந்த போது பல்வேறுநெருக்கடிகளை அனுபவித்து வந்த (23ஆம் பக்கம் பார்க்க)

## பொதுநலவாய மாநாட்டை மகாராணி தவிர்க்க வேண்டுமாம்

(கொழும்பு)

கொழும்பில் இவ்வருட இறுதியில் இடம்பெறவுள்ள பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டில் பிரித்தானிய மகாராணி கலந்து கொள்ளக்கூடாது என அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் சைமன் டான்சக் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் பிரித்தானிய மகாராணிக்கு எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

2011ஆம் ஆண்டு நத்தார் பண்டிகையின் போது கொல்லப்பட்ட பிரித்தானிய பிரஜை சுரம் ஷேக்கின் படு கொலை தொடர்பான விசாரணையின் தற்போதைய நிலைமை குறித்து கண் (23ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களின் பிரச்சினையை சர்வதேசம் அங்கீகரிப்பு

(கொழும்பு)

இலங்கைப் போரின் இறுதிக் கட்டத்தில் நடந்ததாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ.நா. மன்ற மனித உரிமைகள் கவுன்சிலின் தற்போதைய அமர்வில் அமெரிக்கா கொண்டுவரவுள்ள தீர்மானத்தின் வரைபை புலம் பெயர் இலங்கைத் தமிழர்களின் அமைப்பான நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் ஓரளவு வரவேற்றிருக்கிறது.

இந்த தீர்மானங்களின் மூலம் இலங்கைதமிழர்களின்பிரச்சினையை சர்வதேச சமூகம் அங்கீகரித்துள்ளதாக தாம் பார்ப்பதாகக் கூறும், அந்த அமைப்பின்ஜெனிவாமனித உரிமைகள் பேரவை அமர்வுகள் குறித்த விடயங்களுக்கான இணைப்பாளரான முருகையா சுஜிந்தன், ஒன்றுமே இல்லாத நிலையில் இப்படியான தீர்மானங்களாவது வருவது வரவேற்கத்தக்கதே எனக்கூறியுள்ளார்.

நாடுகடந்த அரசாங்கத்தைப் பொறுத்த (02ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்தவை போர்க் குற்றவாளியாக அறிவியுங்கள்-கலைஞர்

(சென்னை)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சர்வதேச போர்க்குற்றவாளியாக அறிவிக்க வேண்டும் என தமிழகத்தின் முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளார்.

மகிந்தவால் நடத்தப்பட்டதெல்லாம் தமிழினப் படுகொலையே. அவர் அடுக்கடுக்காகச் செய்ததனைத்தும் போர்க் குற்றங்களே. அவர் தனது மனச்சாட்சியை நசுக்கி அழித்து விட்டு மீறியதெல்லாம் மனித உரிமைகளையே. எனவே அவரைச் சர்வதேசப் போர்க் குற்றவாளி என்று அறிவிக்கவேண்டும்.

இலங்கையில் நடத்தப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பாக நம்பகத்தன்மையுடன் கூடிய சுதந்திரமான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும். விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் 12-வயது மகன் பாலச்சந்திரனைச்சுட்டுக்கொலை செய்தது உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கான சிறுவர்களையும், பெண்களையும், முதியோர்களையும் கொன்றழித்த சரித்திரம் காணாத கொடுமைகளுக்கு மகிந்த சர்வதேசச் சட்டப்படி பொறுப்பேற்று, உலக நாடுகளுக்குப்பதில் சொல்லியே தீர வேண்டும்.

அத்துடன் இலங்கையில் நடைபெற்ற இனப் படுகொலையைக் (02ஆம் பக்கம் பார்க்க)

சித்திரைப் புத்தாண்டு
SALE
விசேட விலைக்கழிவு
சர்வதேச தரத்தில்...
சாதாரண விலையில்...
Ranjanas
CERAMIC
# 212, Palaly Road, Jaffna.
021 2.. 0033 / 021 222 4777 / 021 226 2000

# தாக்கப்பட்ட வலம்புரி செய்தியாளர் தொடர்ந்தும் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

வலம்புரி பத்திரிகையின் அலுவலக செய்தியாளர் உதயராசா சாளின் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

நேற்று முன்தினம் சுமார் 6 பேர் கொண்ட இனம்தெரியாத கும்பலினால் வலம்புரி அலுவலகத்திற்கு அண்மையில் வைத்து மூர்க்கத்தனமாக தாக்கப்பட்ட இவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்நிலையில் யாழ் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் இந்து கருணாரத்ன நேற்றைய தினம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் சாளினை சந்தித்து நிலைமைகளை கேட்டறிந்துள்ளார்.

தாக்கப்பட்ட ஊடகவியலாளருக்கான பொலிஸ் பாதுகாப்பினை நேற்றும் நேற்று முன்தினமும் யாழ் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் சிகேரா வழங்க ஏற்பாடு செய்திருந்தார். (செ)

# சுதந்திரக் கட்சி உறுப்பினர்களை சந்திரிகா சந்திக்கத் திட்டம்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பேச்சுவார்த்தை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு தேர்தல் தொகுதி வாரியாக இந் தப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. தேசிய அரசாங்கமொன்றை அமைக்கும் நோக்கில் இவ்வாறான பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுவதாகக் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாத இறுதியில் குருநாகலில் முதல் கட்டப் பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவரே இந்த கூட்டங்களை ஒழுங்கு செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் இரண்டு சிரேஷ்ட அமைச்சர்களை தொடர்புபடுத்திக் கொள்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. (அ-2)

# துமிந்தவுக்கு பாராளுமன்றில் மூன்று மாத கால விடுமுறை



துமிந்த சில்வாவுக்கு பாராளுமன்றில் மேலும் மூன்று மாத கால விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 22ஆம் திகதி முதல் இந்த விடுமுறை அமுலுக்கு வரும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2011 ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி முல்லேரியாவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவ நாள் முதல் துமிந்த சில்வாவிற்கு பாராளுமன்றில் தொடர்ச்சியாக விடுமுறை வழங்கப்பட்டு வருகிறது.

மூன்று மாத காலத்திற்கு ஒரு தடவை அவருக்கான விடுமுறை புதுப்பிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சிங்கப்பூர் மவுண்ட் எலிசபெத் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த துமிந்த சில்வா அண்மையில் நாடு திரும்பியிருந்தார்.

நாடு திரும்பிய அவர் தற்போது கொழும்பு தனியார் வைத்தியசாலையொன்றில் பொலிஸாரின் பாதுகாப்பின் கீழ் சிகிச்சை பெற்று வருகின்றார்.

நாடு திரும்பிய துமிந்தவை நீதிமன்ற உத்தரவிற்கு அமைய பொலிஸார் கைது செய்துள்ளனர். துமிந்தவின் உடல் நிலையை கருத்திற்கொண்டு அவருக்கு பிணை வழங்குமாறு அவரது தந்தை நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார். (அ-2)

# பெண்ணிடம் சேஷ்டை ஒருவர் கைதானார்

(புங்குடுதீவு)

வீதியில் நின்ற பெண்ணை பலாத்காரத்திற்கு உட்படுத்த முற்பட்ட நபரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இச்சம்பவம் புங்குடுதீவு மடத்துவெளிப் பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது.

பிரஸ்தாப பெண் பஸ்ஸிற்காக அப்பகுதியில் காத்துநின்ற வேளை அவ்வழியே மது போதையில் வந்து நபரொருவர் குறித்த யுவதியிடம் சேஷ்டை புரிந்துள்ளார். [illegible] அருகிலிருந்து ஆளரவமற்ற வீட்டுப் பகு[illegible] யுவதிவை இழுத்துச்செல்ல முற்பட்[illegible]

இதனையடுத்து அப்பெண் கூக்கு[illegible]டுள்ளனர்.

உடனடியாக அங்கு திரண்ட அயலவர்கள் பெண்ணிடம் சேஷ்டை விட்ட நபரை மடக்கிப் பிடித்து நையப்புடைத்துள்ளனர்.

சம்பவஇடத்திற்கு வந்திருந்த ஊர்காவற்துறை பொலிஸார் சேட்டை புரிந்த நபரை கைது செய்து அழைத்துச் சென்றுள்ளனர். (செ-11)

# இளைஞர் கழக நிர்வாக தெரிவு

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனத்தின் புதிய நிர்வாக தெரிவு அண்மையில் இடம்பெற்றது. இதில் தலைவராக கோ.சசிபாலன், செயலாளராக செ.உதயமோகன், பொருளாளராக சி.மயூரன், அமைப்பாளராக வ.யசோதன், உபதலைவராக ச.மதியுகன், உப செயலாளராக சு.கேமினி, உப அமைப்பாளராக ம.சடகோவன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். விளையாட்டுக்குழு செயலாளராக செ.கேதீஸ்வரன், கலாசாரம் ச.சயந்தன், தொழில் முயற்சி ந.பிரகாஷ், ஊடகம் மற்றும் தகவல் ந.ஜெகதீஸ், தேசிய சேவை நா.ரகுந்தினி, கல்வி யு.நிறோஜினி, சூழல் பாதுகாப்பு இ.தர்மேந்திரா, நிதி க.கலீபன், கணக்கு பரிசோதகர் ந.கவிதரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (அ-3-37)

## மகிந்தவை...

கண்டிக்கும் வகையில் ஐ.நா. மனித உரிமைக் கவுன்சிலில் கொண்டுவரும் தீர்மானத்தை இந்திய அரசு ஒரு நொடியும் தாமதிக்காமல் முழுமனதோடு ஆதரிப்பதாக அறிவிக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்ததுடன், இந்திய அரசே, ஈழத்தமிழர்களைக் காப்பாற்றும் பொது வாக்கெடுப்புக்கென தக்கதொரு தீர்மானத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பவைகளுக் காக கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் ஜனநாயகநெறி பிறழாமல் அமைதியான முறையில்12ம் திகதி நடைபெறவுள்ள ஒரு நாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டும்.

இது நம்முடைய தொப்புள் கொடிச் சொந்தங்களான ஈழத்தமிழர்களுக்காக நாம் கட்டாயம் கடைப்பிடித்தே தீர வேண்டிய அடிப்படைக் கடமை என்ற உணர்வோடு அனைவரும் பங்கேற்க வேண்டுமென்ற எனது வேண்டுகோளை முன் வைக்கிறேன் என அவர் விடுத்துள்ள அறிக்கையில் கோரிக்கை விடுத்துள்ளார். (செ-11)

## தமிழர்களின்...

வரை, இலங்கைப்போர் குற்றங்கள் தொடர்பில் ஒரு சர்வதேச பொறிமுறையும், சர்வதேச சுயாதீன விசாரணையுமே தமது கோரிக்கையாக இருப்பதாகக் கூறும் அவர்,

ஆனால் இந்த பிரேரணையில் அவை இடம்பெறவில்லை என்று கவலை வெளியிட்டார்.

அதே வேளை, இலங்கை அரசாங்கம் கொடுக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்குரிய ஐ.நா மனித உரிமை பேரவை ஒரு கால எல்லையை நிர்ணயிக்க வேண்டும் என்றும் கூறினார்.

இது தொடர்பாக தொடர்ச்சியாக தாம் குறிப்பிட்ட நாடுகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தி வருவதாகவும் அவர் கூறினார்.


**நாய்க்குட்டி விற்பனைக்கு**

ஒன்பது மாதம் நிரம்பிய பெண் நாய்க்குட்டி (ஜேர்மன் சப்போர்ட்) விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 0773920797 (2115)

**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் சாவகச்சேரிக்கும் மீசாலைக்கும் இடையில் A9 வீதியில் 45 பேச்சில் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு அல்லது நீண்டகால குத்தகைக்கு. வங்கிகள், தொண்டர் நிறுவனங்களுக்கு ஏற்றது.

தொடர்புக்கு- 077 9773252 (த-2645)

**காணி விற்பனைக்கு**

கோப்பாய் உரும்பிராய் வீதியில் 6 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 077-3967334 (2126)

**வீடு வாடகைக்கு உண்டு**

யாழ். பிரதான வீதிக்கண்மையில் சுண்டுக்குளியில் வீடு வாடகைக்கு உண்டு. அலுவலக பாவனைக்கும் உகந்தது.

தொடர்பு:- 0714285739, 0714797357 (2125)

**இலவச அழகுகலை பயிற்சி**

200/= பதிவுக்கட்டணத்துடன் 3 பிரிவுகளாக facial, Gold facial, Threading, Pedicure, Manicure, Hair Style, Hair Cut, Make-up என பயிற்சிகள் அனைத்தும் செய்முறை விளக்கத்துடன் இடம்பெறும். பயிற்சியின் முடிவில் சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்.

அறிமுக வகுப்பில் கலந்து கொண்டு உங்களது பதிவுகளை மேற்கொள்ளலாம்.

அன்றைய தினம் இணைபவர்கள் 1990/= தொடக்கம் 14870/= வரை பெறுமதியான பொருட்களை 300/= க்கு பரிசாக பெற்றுக்கொள்ள முடியும்.

திகதி:-12.03.2013

நேரம்:-10.00 மணி

இடம்:-ஒறிபிளேம் யாழ் கிளை நிறுவனம்

187/30, யூனியன் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சத்திரசந்தி அருகாமை கொட்டடி வீதி)

நிபந்தனைக்கு உட்பட்டது. தொடர்புகளுக்கு:-0772288243 (2128)

(வவுனியா, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களிலும் பயிற்சிகள் நடைபெறுகின்றன.)








**தேவை**

கொழும்பு சுற்றுப்புறம்/ யாழ். போன்ற பிரதேசங்களில் கட்டட நிர்மாணத் துறையில் உடனடியான வேலைவாய்ப்புக்கள்.

மேசன்/ கைவுதவியாளர் பெயின்டர்/ பிளம்பர்/ இலக்றிசன்/ செடலின் பாஸ்/ தேவை 18-50 வயதினர் உணவு, தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் தொழில் அடிப்படையில் 18000, 45000,

தொடர்பு: 077561883 வவுனியா.

0775561883 உங்களுக்கு தொழில் இல்லாத பிரச்சினையா? எம்மிடம் நிரந்தர தொழில்கள் உண்டு. ஏற்றுமதி தொழிற்சாலைகளான (கொழும்பு பகுதியில்) ஜேம் / பிஸ்கட்/ சோஸ்/ கிளவுஸ்/PVC/Fram/ஆடைத்தொழிற் சாலைகள் போன்றவற்றுக்கு உற்பத்தி/ லேபல் / பொதியிடல் பிரிவுக்கு ஆண்-பெண் 17-50 வயதினர் சம்பளம் 18000, 20000, 25000, 32000 உணவு தங்குமிடம் சகாய விலைகளில். வருகை தரும் நாளன்றே வேலை (நண்பர்கள்/குழுக்கள்/ தம்பதியினர்) ஒரே தொழிற்சாலைகளில்.

தொடர்பு: 0775561883

துறைமுகம் (தனியார்), விமான நிலையம் (தனியார்) / கனரக சாரதிகள்/ மென்ரக சாரதிகள்/ சாரதி உதவியாளர்கள்/ தனியார் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்/ ஹோட்டல், ரெஸ்டூரண்டர் போன்றவற்றிற்கு 18-50 வயதினர் தேவை. (கொழும்பை அண்டிய பிரதேசங்களில் வேலை) தொழில் அடிப்படையில் 18,000/= - 45,000/=, சம்பளம் உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.

தொடர்பு: 0775561883 வவுனியா

**படிவம் விற்பனையாகிறது**

வளிமண்டல உதவியாளர் தரம் III

கல்வித்தகைமை க.பொ.த (சா/த) மட்டுமே

கிடைக்குமிடம் :- பூபாலசிங்கம் புத்தகசாலை

ஏனைய பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும்

எஞானம் பிரிண்டர்ஸ்

கந்தர்மடம் சந்தி, யாழ்ப்பாணம்.

முடிவுத்திகதி:- 15.03.2013 (2132)

**Personal Class**

உங்கள் வீட்டிற்கு வந்து ஆங்கிலம் அடிப்படையில் இருந்து பேச, வாசிக்க, எழுத கற்பிக்கப்படும்.

Spoken with Grammer

தொடர்புகளுக்கு:-0776393868 (சி-2642)

**பணிப்பெண் தேவை**

வீட்டு வேலைக்கும், குழந்தை பராமரிப்பிற்கும் பணிப்பெண் தேவை.

தொடர்புகளுக்கு:- 0772224913 (2129)

**யாழ்ப்பாணம் -வடமராட்சி மாலிசந்தி அல்வாயில் காணிகள் விற்பனைக்குண்டு**

பருத்தித்துறை கரவெட்டி நெல்லியடி நகர்ப்புற சூழலில் மாலி சந்தியை 5 நிமிடத்தில் அண்மித்த அல்வாய் தெற்கில் ஒரே அடைப்பினுள் 12 பரப்பளவான 2 காணிகள் விற்பனைக்குண்டு. 4 1/4 பரப்புக்குள் நல்ல குடிநீர்க் கிணறு, 14 அடி சொந்தப் பிரத்தியேக ஒழுங்கை, மின் சாரம் உண்டு.

நல்ல தோட்டமண். தேவையான வசதிகள்,சேவைகள்உண்டு. அண்மையில் கடல், துறைமுகம் உள்ளன. தேவைக்கு ஏற்ப காணிகளை உபயோகிக்கலாம். பிரித்தோ சேர்த்தோ கொடுக்கவும் முடியும். தரகர்சேவை தவிர்க்கப்படுகிறது.

தொடர்பு: 0094-021-226-4685
0094-077-967-2385

**சித்தா மருத்துவம்**

வாதம், பாரிசவாதம், அழல்வாதம், சிறு நீரக அழற்சி, சூதக வலி பாலியல் குறைபாடு, வெள்ளைபடுதல், அதி இரத்த அமுக்கம், நெஞ்சுக்குத்து, நரம்புத் தளர்ச்சி, உடல் மெலிவு, பருமன், சோரியாசிஸ், கிரந்தி கரப்பன், குளோகோமா, இளநரை, பொடுகு, கண்நோய் சம்பந்தப்பட்ட நோயாளர்களைப் பார்வையிடுவதற்காக பேரறிஞர், சிறப்பு ஆலோசகர் டாக்டர்.கே. பாலசுப்பிரமணியம் அவர்களை 10-03-2013 அன்றிலிருந்து 15-03-2013-ம் திகதி வரையுமுள்ள நாட்களில் சுன்னாகத்தில் சந்திக்கலாம்.

சந்திப்பதற்கு தொலைபேசி: Dr. K.சிவானந்தன்

077704371 ஆனந்தா வைத்திய நிலையம்

0757390195 காவல்துறை அருகாமை

0771005971 ஸ்ரேசன் றோட், சுன்னாகம்.

# பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடப்பது உறுதி

2013 ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு இலங்கையைத் தவிர வேறெந்த நாட்டிலும் நடத்தப்படாது. இலங்கையில்தான் நடத்தப்படும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லையென பொது நலவாய வர்த்தக கவுன்சிலின் தலைவர் கலாநிதி மொஹான் கவுல் தெரிவித்தார்.

கொழும்பு சினமட் கிராண்ட் ஹோட்டலில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட போதே இவ்வாறு கூறியுள்ளார். இங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

இலங்கையைத் தவிர வேறெந்த நாட்டிலும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென்றும் அவர் கூறினார்.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு இலங்கையில் நடத்தப்படவிருக்கும் நிலையில் இதனை முன்னிட்டு பொது நலவாய வர்த்தக சம்மேளனம் கொழும்பில் கூடவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக கலாநிதி மொஹான் கவுல் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இலங்கையில் முன்னெடுக்கப்பட்டிருக்கும் அபிவிருத்திப் பணிகள் திருப்தி அளிக்கும் வகையில் அமைந்திருப்பதாக அவர் கூறினார்.

பொதுநலவாய தலைவர்கள் மாநாடு 2013 இலங்கையிலேயே நடத்தப்படும். அதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அண்மையில் இலங்கைக்கு வருகை தந்திருந்த பொது நலவாய செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மாவும் இதனை வலியுறுத்தி சென்றிருந்தார்.

இலங்கையில் உச்சி மாநாடு நடத்துவது தொடர்பில் சில உறுப்பு நாடுகளும் அரச சார்பற்ற நிறுவனங்களும் தமது கருத்துக்களை தெரிவித்து வருகின்றன. இலங்கையில் நடைபெறும் உச்சி மாநாட்டில் பொது நலவாய நாடுகளின் அரச தலைவர்கள் கலந்து கொள்வார்கள்.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதாக பலநாடுகளின் தலைவர்கள் உறுதி செய்துள்ளனர். நான் பல நாடுகளின் தலைவர்களைச் சந்தித்த போது இதனை அவர்கள் என்னிடம் உறுதி செய்தார்கள்.

இலங்கையில் அனைத்துப் பகுதிகளிலும் அபிவிருத்தி ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்துக்காகவே பொதுநலவாய உச்சி மாநாட்டு மற்றும் வர்த்தக சம்மேளன மாநாட்டை இலங்கையில் நடத்துகின்றோம். எனவே பேச்சுவார்த்தைகள் மற்றும் கலந்துரையாடல்கள் மூலம் சில விடயங்களைப் பேசித் தீர்க்க முடியும்.

இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகள் திருப்தியளிக்கும் வகையில் அமைந்துள்ளன. எதிர்வரும் நவம்பர் 12 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதிவரை நடைபெறவிருக்கும் பொதுநலவாய வர்த்தக சம்மேளன மாநாட்டின் மூலம் இலங்கையில் 2 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு இடம்பெறும் என நம்புகிறோம். இதனை இலக்கு வைத்தே நாம் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றாம் என்றார். (அ-2)

## மகா சிவராத்திரி விழா

(சித்தங்கேணி).

சித்தங்கேணி சிவகாமி சமேத சிதம்பரேஸ்வர தேவஸ்தான மகா சிவராத்திரி தினத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை விசேட பூஜை, அபிஷேக ஆராதனைகள் இடம்பெறவுள்ளது.

இதில் முதலாம் சாமப் பூஜை பிற்பகல் 5 மணிக்கும் இரண்டாம் சாமப்பூஜை இரவு 8.30 மணிக்கும் லிங்கோற்சவர் பூஜை இரவு 10 மணிக்கும் 3 ஆம் சாமப்பூஜை இரவு 12.30 மணிக்கும் 4 ஆம் சாமப்பூஜை நாளை திங்கட்கிழமை அதிகாலை 3 மணிக்கும் தொடர்ந்து காலை 5 மணியளவில் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (அ-3-17)

# வாரம் ஒரு தகவல்

## தலைமைத்துவம்

ஒரு ஊரிலே தொண்டு செய்பவர் ஒருவர் இருந்தார். இவருக்கு வழிகாட்டுவதற்கு ஒரு வழிகாட்டி தேவையாகவிருந்தது. எனவே ஒரு தலைவரை நாடி சென்றார்.

அவர் ஒரு குருவிடம் சென்று " ஐயா என்னை உங்கள் தொண்டனாக ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்றார்.

அவனது கருத்தை ஏற்றுக்கொண்டு அவரை அருகில் வரவழைத்து அவர் காதோடு காதாக ஒரு புனிதமான மந்திரத்தை உச்சரித்தார்.

"அவரும் அதை கவனமாக செவிமடுத்தார். பின்னர் குரு அவரிடம் இந்த மந்திரத்தை இரகசியமாக வைத்துக்கொள்... வேறுயாருக்கும் சொல்லி விடாதே!" என்று கூறினார்.

அதற்கு அவர், சொன்னால் என்ன ஆகும் என்று கேட்டார்.

அதற்கு குரு நீ இந்த மந்திரத்தை சொல்லும் போது அது யார் காதில் விழுகிறதோ... அவர் துன்பத்திலிருந்து விடுதலை பெறுவார்... அறியாமையிலிருந்து விடுதலை பெறுவார்... அதன் பின்னர் நீ தொண்டராக இருக்கமாட்டாய்... வெளியேற்றப்படுவாய்...!" என்றார்.

அவரும் அதை ஏற்றுக்கொண்டு வெளியே தன் பயணத்தை தொடர்ந்தார்...

அவர் வரும் வழியில் மக்கள் கூட்டம் நின்று கொண்டிருந்தது. அவர்களை கண்டதும் அவர் உயரமான இடத்தில் ஏறி நின்று கொண்டார்.

பின் எல்லோருடைய காதிலும் கேட்கும்படியாக அந்த புனித மந்திரத்தை உரக்கக் கூறினார்.

இவர் இவ்வாறு குருவின் சொல்லை மீறியதை ஏனைய தொண்டர்கள் பார்த்துவிட்டனர்.

அவர்கள் உடனே ஓடிப்போய் குருவிடம் " தலைவா! அவர் உங்கள் சொல்லை மீறி நடந்து கொள்கிறார்! உடனே அவரை வெளியேற்றுங்கள்!" என்றனர்.

அதற்கு அக் குரு "வெளியேற வேண்டியது அவரல்ல... நான்தான் என்றார்.

திகைத்துப்போன அவர்கள் "என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டனர்.

குரு தன் பதிலை தொடர்ந்தார். இந்தத் தலைமைப் பதவி இனி அவனுக்குத்தான்... அதற்கான தகுதி அவனுக்கு வந்துவிட்டது என்று கூறி தலைமைத்துவத்தின் பண்பை விளக்கிக் கூறினார்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## நிறுத்தல் அளவை கருவிகள் முத்திரையிடல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்ற எல்லைக்கு உட்பட்ட வியாபாரிகளது நிறுத்தல் அளவை கருவிகள் முத்திரையிடும் நடவடிக்கைகள் சாவகச்சேரி நகராட்சி மன்ற வளாகத்தில் நாளை திங்கட்கிழமையும் நாளை மறு தினம் செவ்வாய்க்கிழமையும் எதிர்வரும் 14,15 ஆம் திகதிகளிலும் நடத்தப்படவுள்ளது. யாழ். மாவட்ட செயலக அளவீட்டு அலகுகளும் நியமங்களும் சேவைகளும் பகுதியினரால் கருவிகள் பரிசோதிக்கப்பட்டு முத்திரையிடும் பணிகள் நடைபெறும் எனவும் குறிப்பிட்ட தினங்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை தங்களது கருவிகளுக்கு முத்திரை இடுமாறும் நகராட்சி மன்ற செயலாளர் சு.புத்திசிகாமணி அறிவித்துள்ளார். (அ-3-29)

# இராசி பலன்

10.03.2013
(மாசி 26, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.20 மணிவரை
சதுர்த்தசி பின்னிரவு 2.58 மணிவரை
அவிட்டம் பிற்பகல் 1.15 மணிவரை
இராகுகாலம் 4.53-6.23 மணிவரை
சுபநேரம் 9.23-10.53 மணிவரை
மகா சிவராத்திரி

**மேடம்** நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், கௌரவமான நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்** சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம், தொழிலில் இருந்த குழப்பங்கள் அகலும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**மிதுனம்** வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய .நாள், பகையொன்று நட்பாகலாம், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், திடீர் பயணங்களால் நன்மையுண்டு.

**கடகம்** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், ஆரோக்கியம் குறைந்து உற்சாகம் குறைவடையலாம், நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம்.

**சிங்கம்** உடல்நலம் சீராகி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், மனதிற்கினிய சம்பவமொன்று நடைபெறலாம், சிவாய நமக என்று சொல்லி சிறப்படைய வேண்டிய நாள், பால்ய நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கன்னி** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும், மருத்துவச் செலவுகள் குறையும், ஆலய வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள்.

**துலாம்** கோரிக்கைகள் நிறைவேற் கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், பொருளாதார முன்னேற்றத்திற்கு பெண்வழி ஒத்துழைப்பு கிடைக்கும், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்** விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**தனுசு** உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்பால் உற்சாகம் அடைவீர்கள், நேற்றைய பிரச்சினை இன்று நல்ல முடிவுக்கு வரும், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடக்கலாம்.

**மகரம்** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், பணவரவு திருப்திதரும், சில விவாதங்கள் ஏற்படலாம்.

**கும்பம்** புதிய பொறுப்புக்களால் வேலைப்பளு அதிகரிக்கும், உறவினர் நலன் கருதி ஒரு தொகையை கொடுத்து உதவ வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம், மனச் சஞ்சலங்கள் அதிகரிக்கும்.

**மீனம்** ஆனந்த வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், உறவினர்களின் அன்புத் தொல்லைகளுக்கு ஆளாகலாம், ஆதாயம் இல்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், சுப செலவுகள் அதிகரிக்கும்.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 150 | 180 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 250 | 200 |
| தக்காளி | 40 | 80 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 40 | 40 |
| கோவா | 60 | 40 | 60 | 60 |
| கரட் | 120 | 80 | 160 | 160 |
| பூசணி | 70 | 60 | 60 | 60 |
| புடோல் | 50 | 70 | 80 | 50 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 80 | 60-100 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 100 | 90 |
| பாகற்காய் | 120 | 120 | 140 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 70 | 70 | 80 |
| பயற்றங்காய் | 70 | 80 | 80 | 160 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 90 | 80 | 100 | 100 |
| கறிமிளகாய் | 120 | 120 | 160 | 140 |
| முருங்கைக்காய் | 600 | 500 | 600 | -- |
| போஞ்சி | 200 | 90 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 100 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 40 | 50 | 60 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 45 | 42-50 |
| இராசவள்ளி | 120 | 100 | 120 | 100 |
| வெங்காயப்பூ | 100 | 120 | 160 | 160 |

## மகாசிவராத்திரி விழா

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகம் ஏற்பாடு செய்துள்ள சிவராத்திரி உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை மேற்படி ஆலயத்தில் இடம்பெறவுள்ளது. இச் சிவராத்திரி உற்சவத்தில் நான்கு சாம பூசைகளும் இரவு 11 மணிக்கு ஸ்நபன அபிஷேகமும் நடைபெறவுள்ளது. (அ)

* * *

ஊரெழு சக்திபுரம் சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலை நடத்தும் மகா சிவராத்திரி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணிக்கு நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அறநெறிப் பாடசாலை அதிபர் ந.து.ஜெயதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக லண்டன் சட்டத்தரணி க.செவ்வேள் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக ஊரெழு கிராம அலுவலர் ஐ.ஜி.ஜெயந்திரன், முன்னாள் கிராம அலுவலர் ஏ.ரி.வரதராஜன், யாழ்ப்பாணம் ஜெகதா மொபைல் உலக உரிமையாளர் தெ.நிஷாகரன், யாழ்.மத்திய கல்லூரி தமிழ் ஆசிரியர் நா.தமிழிந்திரன், லண்டன் அ.றசிகரன், ஊரெழு இராணுவ முகாம் பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இவ்விழாவில் பலகலை நிகழ்ச்சிகளாக வேட்டையன், காலத்தின் கோலம், நகைச் சுவை நாடகம் போன்ற மூன்று நாடகங்கள் அரங்கேறவுள்ளன.(அ)

* * *

காரைநகர் மணிவாசகர் சபையின் ஆதரவில் நடைபெறும் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் திண்ணபுரம் சிவன் கோயில் சிவராத்திரி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான வசந்த மண்டபத்தில் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் வே.முருகமூர்த்தி தலைமையில் நடைபெறவள்ளதென காரைநகர் மணிவாசகர் சபை செயலாளர் து.நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இன்று பிற்பகல் 4.30 மணியிலிருந்து ஆரம்பித்து நாளை அதிகாலை 4.30 மணி வரை இடம்பெறும் இச் சிவராத்திரி விழா நிகழ்வுகளில் நான்கு சாம அபிஷேக பூசைகளும் திருமுறை ஓதல், மூலமூர்த்தி லிங்கோற்பவர் அபிஷேகம், தேவாரம், திருவாசகம் ஓதல் என்பனவும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (அ-5)

* * *

கீரிமலை நகுலேஸ்வரர் ஸ்ரீ நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரர் ஆலய மகாசிவராத்திரி விழாவும் தேர்த்திருவிழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இன்று அதிகாலை 4 மணிக்கு 1008 சங்காபிஷேகமும் விசேட அலங்கார பூசையும் நடைபெற்று முற்பகல் 7 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் தொடர்ந்து 10.35 மணிக்கு இரதோற்சவமும் நடைபெறுகிறது. மேலும் சிவராத்திரி இரவில் இந்து கலாசார அமைச்சின் கீழ் விசேட நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. 12ஆம் திகதி செவ்வாய் பிற்பகல் 4 மணிக்கு விசேட அபிஷேகமும் பூஜையும் நடைபெற்று நடராஜப் பெருமானின் திருநடனம் இடம்பெறும் என நகுலேஸ்வரர் ஆதீனம் இராஜராஜ ஸ்ரீ கு.நகுலேஸ்வர குருக்கள் தெவித்துள்ளார்.(அ-5)

* * *

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய மகாசிவராத்திரி உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணி முதல் நடைபெறவுள்ளது.

இன்று பிற்பகல் 4.30 மணிக்கு ஆரம்பமாகும் இவ் உற்சவத்தில் நான்கு சாமமும் அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று மறுநாள் அதிகாலை திருவூஞ்சல் உற்சவமும் தொடர்ந்து பெருமானின் வீதியுலாவும் தீர்த்த உற்சவமும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபை மற்றும் தொண்டர் சபையும் அறிவித்துள்ளது. சிவராத்திரி விழாவில் ஆலய அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (அ-5)

* * *

சீரடி சாயி மந்திரின் 5 ஆம் வருட மகா சிவராத்திரி விழாவும் பாபாவின் 9 ஆவது ராஜபவனியும் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளதென ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.

இன்று பிற்பகல் 4.30 மணிக்கு ஸ்ரீநவசக்தி கணபதியின் அபிஷேக பூசையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன. தொடர்ந்து மாலை 6 மணி தொடக்கம் அதிகாலை 4.30 மணி வரை நான்கு சாம பூசைகள் இடம்பெறவுள்ளன. இரவு 8.30 மணிக்கு பாபாவின் ராஜ பவனியும் இடம்பெறவுள்ளது. (அ-5)

## மோ.சை.விபத்தில் இருவர் படுகாயம்

(கரவெட்டி)

எழுதுமட்டுவாழ் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்து சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் கடந்த 7 ஆம் திகதி இரவு 9.30 மணிக்கு எழுதுமட்டுவாழ் சந்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வடமராட்சி துன்னாலையை சேர்ந்த இருவர் தொழில் நிமிர்த்தம் கிளிநொச்சிக்கு சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தவேளை மாடுகளின் கூட்டத்திற்குள் வேகமாக சென்று மோட்டார் சைக்கிள் மோதியதிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. துன்னாலை வடக்கைச் சேர்ந்த பரமசிவம் ரவிக்குமார்(வயது 34), ஞானலிங்கம் தர்சன் (வயது 28) ஆகிய இரு இளைஞர்களுமே காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ-3-24)



நன்றி: மிரர்

## அமைதியை சீர்குலைக்கவே செய்தியாளர் மீது தாக்குதல்

### – ஈ.பி.டி.பி

வலம்புரி பத்திரிகையின் அலுவலச் செய்தியாளர் உதயராசா சாளின் தாக்கப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்துள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் யாழ். ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது கண்டன அறிக்கையை மேலும் குறிப்பிடுகையில்,

அமைதிச்சூழலை விரும்பாத, குடாநாட்டை எப்போதும் பதற்ற நிலையில் வைத்திருக்க விரும்பு தீய சக்திகளின் நடவடிக்கையே



வலம்புரி ஊடகவியலாளர் மீதான தாக்குதலாகும். ஜனநாயக விரோத சக்திகளின் வன்முறைத் தாக்குதலாகவும், கருத்துச் சுதந்திரத்திற்கும் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகவும் இதனை நாம் கருதுகின்றோம்.

ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் நீடிக்கின்ற போதும் பொலிஸார் குற்றவாளிகளை இனம்காணுவதில் காட்டிவரும் அசிரத்தையும், யாழ். குடாநாட்டில் புற்றீசலாக தலையெடுத்துள்ள கோஷ்டி மோதல்களினை தடுக்காது செயற்படுவதன் மறுவிளைவாகவும் இதனைக் கொள்ளமுடியும்.

இவ்வாறு தாக்குதல்கள் நீடிக்கின்றபோதும் வெறுமனே கண்டனங்கள் மட்டும் ஆரோக்கியமான விளைவுகளை தந்துவிடப் போவதில்லை. எனவே சம்பந்தப்பட்டவர்களை கைது செய்து சட்டத்தின் முன்னிறுத்த வெளிப்படையாக செயற்படுவதுடன், ஊடகவியலாளர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தல் வேண்டும் எனக் கோருவதுடன் இக் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றதுஎன அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ)

## சிறப்பு பட்டிமன்றம்

சொல்வேந்தர் பொன் சுகந்தனின் தலைமையில் யாழ்.பட்டிமன்றக்குழு வழங்கும் சிறப்பு பட்டிமன்றம் இன்று ஞாயிற்றுக் கிழமை இரவு 8 மணியளவில் பண்டத்தரிப்பு பிரான்பற்று முருகமூர்த்தி ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (அ-3)

## பட்டிமன்ற போட்டி

யாழ்.மாவட்ட செயலகமும் பால் நிலை வன்முறைக்குஎதிரானசெயற்குழுவும் இணைந்து பட்டிமன்ற போட்டியை நடத்த திட்டமிட்டுள்ளது.

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான இப்போட்டியில் பிரதேச செயலகங்கள் ஊடாக பட்டிமன்ற போட்டிகள் நடத்தப்பட்டு ஒரு பிரதேச செயலகத்தில் இருந்து ஒரு பட்டிமன்ற குழு தெரிவு செய்யப்பட்டு யாழ்.மாவட்ட செயலகமும் பால்நிலை வன்முறைக்கு எதிரான செயற்குழுவும் இணைந்து நடத்தவுள்ள பட்டிமன்ற போட்டிக்கு அனுப்புதல் வேண்டும்.

இதில் பெண்களின் பாதுகாப்பு, பெண்களை வலுவூட்டல் மற்றும் பெண்களுக்குரிய சமகால பிரச்சினைகளை குறைத்தல் ஆகிய தலைப்புக்களில் பட்டிமன்றம் இடம்பெற வேண்டும். இப்பட்டிமன்ற அணியில் ஆண், பெண் உட்பட மூன்று பேர் பங்குபற்றுதல் வேண்டும். மாவட்ட மட்ட போட்டி எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-3-19)


**தேவை**

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள வைத்திய நிறுவனம் ஒன்றுக்கு ஓய்வு பெற்ற RMP or MD தேவை.

தொடர்பு:- 0779465467 (2078)

**வீடு விற்பனைக்கு**

சுண்டுக்குளி பகுதியில் இரண்டு பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-077-6181216 (2089)

**பிள்ளையார் இன்**

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை. மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

(C-1560) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

**புத்தம் புதிய வீடு விற்பனைக்குண்டு**

இல 77/A சம்பியன் வீதி கொக்குவிலில் அமைதியான சூழலில் நன்னீர் கிணறு சுற்றுமதிலுடன் கூடிய புத்தம் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0772470590, 0778543106 (2109)

**பாரஊர்தி (லொறி) உடன் விற்பனைக்கு**

ஆரியகுளத்தடி (குட்டிகராச்) பருத்தித்துறை வீதி, கராச்சில் மிகவும் நல்ல நிலையில் உள்ள 41 சிறி/27 சிறி Isuzu

LEYLAND HG XXXX

உடன் விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு:- 0774829542 , 0779722621 (2118)


## மரண அறிவித்தல்

### திருமதி கோபாலசாமி பொன்னம்மா

வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கோபாலசாமி பொன்னம்மா 07.02.2013 வியாழக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கோபாலசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கார்த்திகேசு-முத்துப்பிள்ளை தம்பதியின் மகளும், காலஞ்சென்ற அருணாசலம், மாணிக்கம் தம்பதிகளின் மருமகளும், மோகனாம்பாள், தனகாம்பிகை, கனகாம்பிகை(ஜேர்மனி), பாலாம்பிகை(ஆசிரியை-கொக்குவில் இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற செல்வச்சாமி மற்றும் வீமராசா, யோகேந்திரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற உதயகுமார் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அகிலா, மாலதி (பொறியியலாளர் நீர் வழங்கல் வடிகால் அமைப்புச்சபை-யாழ்ப்பாணம்), தக்ஷாயினி(வங்கி உதவியாளர்-தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற மாதுமையாள், இன்பயோகி (ஜேர்மனி) கோபி(ஜேர்மனி),நிதர்சன்( A/L 2011-கணிதப் பிரிவு-யாழ் இந்துக்கல்லூரி), சரண்யா(A/L2014-கணிதப் பிரிவு-யாழ் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), சித்தசிலன் (விளையாட்டு உத்தியோகத்தர்-வவுனியா), ஜெயதேவன்(தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்- வடமராட்சி வலயம்) ஆகியோரின் பேர்த்தியும், திவ்வியன், அபினுஷா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 10.03.2013 ஞாயிற்றுக் கிழமை 12 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 2.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

81/A, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்

(2106)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



சிவத்தமிழ் செல்வி அம்மையாருக்கு வலது கரம் போன்று ஆலய வளர்ச்சிப் பணியில் பெரும் திருப் பணியின் முக்கிய பங்காற்றிய எனது நீண்ட கால நண்பரும் அன்பருமான

**திரு.ச.ஆறுமுகநாதன்**

அவர்கள் தேசிய ரீதியில் வழங்கப்பட்ட தேசமானி, லங்கா புத்திர விஸ்வகீர்த்தி பட்டம் பெற்றமையினையிட்டு பெருமகிழ்வடைகின்றோம். அவரின் பணி மென்மேலும் சிறக்க எல்லாம் வல்ல துர்க்கை அம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கா.சிவபாலன்**

**திரு.ச.ஆறுமுகநாதன்**
அவர்கள்
(உப.தலைவர் துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

(கு-2635)

## தேவை

1. 21,000–25,000 வரை சம்பளம் வெளிநாட்டு ஏற்றுமதி கிளவுஸ், வோசின் பிலானக்கு நிரந்தரமான வேலைக்கு 18–40 வயது வரையான ஆண்கள் தேவை. சாப்பாடு தங்குமிட வசதி உண்டு (6 மாத காலத்திற்கு பின் டுபாய் செல்ல முடியும்)
**077 252 324 1, 077 303 200 4**

2. 25, 000– 30,000 வரை சம்பளம் எமது தனியார் துறைமுகத்திற்கு கப்பலில் நிரந்த வேலை செய்வதற்கு 18–50 வயது வரை ஆண்கள் தேவை உணவு தங்குமிட வசதி உண்டு
**077 303 380 3**

3. 18,000–22,000 வரை சம்பளம் எமது கொழும்பில் இருக்கும் ஜெம், கோடியல், தேயிலை தொழிற்சாலைக்கு உற்பத்திற்கு உதவியாளர்கள் 17–55 வயது வரையான பெண்கள் தேவை. தங்குமிடம் சாப்பாடு வசதி உண்டு வரும் அன்றே வேலைக்கு செல்ல முடியும். (210) **077 252 324 1**

வலம்புரி விளம்பரத் தொடர்பு களுக்கு:
T.P : 021 321 0815,
021 567 1540

# சேவைநலன் பாராட்டு



திருமதி
**சின்னமணி பூரணானந்தன்** S.L.T.S. I

40 ஆம் ஆண்டு கால ஆசிரிய சேவையை 09.03.2013 வரை கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் சேவையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் ஆசிரியையை ஓய்வு காலத்தில் வளமுடன் வாழ வாழ்த்துவதுடன் இன்று அவரது பிறந்த நாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யாழ்.அல்வாய் வடக்கு இ.த.க. பாடசாலை, அல்வாய்.

(கு-2634)


## வெளிநாட்டு பட்டக்கல்வி & தொழில்வாய்ப்பு

**பிரித்தானியா, அவுஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா, மலேசியா**

- பல்கலைக்கழக பட்டக்கல்வி வாய்ப்புக்கள்
- 50,000/= வருமானத்துடனான தொழிற்கல்வி
- 100,000/= உடனான தொழில்வாய்ப்புக்கள்

| பட்டக்கல்வி வாய்ப்புக்கள் | தொழிற்பயிற்சி & தொழில்வாய்ப்பு |
|---|---|
| மார்ச் 14 வியாழன் 10 மணி<br>யாழ்.ஞானம்ஸ் ஹொட்டேல்<br>(A/L 3C யுடன் 3 வருடத்தில் பட்டக்கல்வி<br>O/L 5Cயுடன் 4 வருடத்தில் பட்டக்கல்வி) | மார்ச் 16 சனி 10 மணி<br>வவுனியா நெல்லி ஸ்ரார் ஹொட்டேல்<br>மார்ச் 17 ஞாயிறு 10 மணி<br>யாழ்.ஞானம்ஸ் ஹொட்டேல்<br>(O/L தேர்ச்சி இல்லாதவர்களும் இணையலாம்) |

பல்கலைக்கழக பிரதிநிதிகள் Kumara Raj மற்றும் Ryan Kok ஆகியோரை நேரில் சந்தித்து அனுமதி பெற வாருங்கள்

**முற்பதிவுகளுக்கு : 077 36 16 798**

பல்கலைக்கழக அனுமதி முதல் பட்டம், தொழில் பெறும் வரையில் கூடவே இருந்து வழிகாட்டும் ஒரே நிறுவனம்

**சிகரம்** SIKARAM
MEDIA & EDUCATION
கல்வி - தொழில் வழிகாட்டி

இல.221, பலாலி வீதி, சுந்தர்மடம், யாழ்ப்பாணம். தொ.பே.: 021 300 80 60, நேரடி: 0773 616 798
Email: edusikaram@gmail.com
www.sikaram.lk

(கு-2636)

## SHAKTHY microtec
Hotline : 077 9120842
Computer wholesaler

**இப்பொழுது யாழ்ப்பாணத்தில்...**

அனைத்து வகையான Branded கணனிகள், மடிக்கணனிகள் மற்றும் கணனி உதிரிப்பாகங்களை மிகவும் குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.




இல.170, V.M.K. கட்டிட மேல்மாடி, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1974 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>உயரம்: 5'11"<br>கி.பா: 77, 8 இல் செவ்.<br>தகைமை/தொழில்: A/L, (கடை)<br>தொ.இ: B -1387 | பிறப்பு: 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ஆயிலியம் 1<br>உயரம்: 5'3"<br>கி.பா: 13.75<br>தகைமை/ தொழில்: BA Dip in Edu (புவியியல் ஆசிரியை)<br>தொ.இ: G -1393 |
| பிறப்பு: 1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தரம் 1<br>கி.பா: 10.5<br>தகைமை/தொழில்: A/L, (நகைக்கடை)<br>தொ.இ: B -1389 | பிறப்பு: 1974 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ரேவதி 2<br>உயரம்: 5'6"<br>தகைமை/ தொழில்: CIMA, MBA<br>தொ.இ: G-1394 |
| பிறப்பு: 1985 இந்துவேளாளர்<br>நட்சத்திரம்: பூரம<br>கி.பா.:- 16<br>தகைமை/ தொழில்: A/L, (கட்டடத்துறை) UK Student Visa)<br>தொ.இ: B -1390 | பிறப்பு: 1971 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: ரேவதி<br>உயரம்: 5'2"<br>கி.பா:48.5<br>தகைமை/ தொழில்: பயிற்றப்பட்ட ஆசிரியை<br>தொ.இ: G -1397 |
| பிறப்பு: 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 8 இல் செவ்<br>தகைமை/தொழில்: BSc MSc (Computer Eng.), (Londan Student To visa<br>தொ.இ: B -1392 | பிறப்பு: 1987 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அத்தம்<br>உயரம்:-.5'3"<br>தகைமை/ தொழில்: BSc, Studying<br>தொ.இ: G -1377 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)

ஊடக அனுசரணை வலம்புரி


WESTERN UNION

MMBL Money Master

வெளிநாடுகளிலிருந்து வரும் பணத்தினை மிக விரைவாய் பெற்றுக்கொள்ள....

(கு-2632)

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

விரைவு / பாதுகாப்பு / நம்பகத்தன்மை

- சகல நாடுகளுக்குமான கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது
- கடல் உணவு, மருத்துவப் பொருட்கள், எண்ணெய் வகை என்பனவும் ஏற்றுக்கொள்ளப்படும்
- பொதிகள் 3-5 நாட்களில் குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.

கனடாவுக்கான சாதாரண கட்டணம் 550 ரூபாய்



11 கிலோ மேற்பட்ட பொதிகளுக்கு 1 கிலோ கட்டணம்

இல.46. ஆடியபாதம் வீதி. திருநெல்வேலி. (பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் முன்பாக) | இல.18. பிரதான வீதி. நெல்லியடி (H.N.B அருகாமையில்) | TCN EXPRESS 2 B, நெல்சன் பிளேஸ், கொழும்பு. 06. (Nolimit அருகாமையில்)

**திருமுருகன் கொம் நெற்**
எமது நிறுவனம் பழைய இடத்திற்கு முன்பாக (ஆல் சிலோன் புத்தகசாலை அருகிலுள்ளது)

இல. 208 A. கே.கே.எஸ்.வீதி. யாழ்ப்பாணம். T.P:: 021 222 7835

UK - 700/-, France - 800/-
Germany - 800/-, Australia- 850/-
Canada - 975/-, Swiss - 900/-





# நிகழ்வின் நிழல்கள்

மல்லாவி மத்திய கல்லூரியின் மாணவிகளின் விடுதி அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இதன்போது...





யா/வல்லை சிவகுரு வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் பாண்ட் வாத்திய சகிதம் மாலை அணிவித்து அழைத்து வரப்படுவதையும் மாண வர்களின் இடைவேளை உடற்பயிற்சி நிகழ்வினையும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் ச.சர்வா ணந்தன் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கிய பின் அருகில் நிற்பதையும் படங் களில் காணலாம்.





மருதங்கேணி கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நேற்று முன்தினம் மருதங்கேணி கல்விக்கோட்ட மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மாலை அணிவித்து அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் இடைவேளை உடற்பயிற்சி நிகழ்வினையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் வெற்றியீட்டிய மாணவருக்கு பரிசில் வழங்கியபின் அருகில் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)



சங்கானை *"Butterfly International School"* பாடசாலையில் சிறார்களுக்கான இணைப் பாடவிதான செயற்பாடான மாலை கட்டுதல் போட்டி அண்மையில் நடைபெற்றது. இப்போட்டியில் வெற்றி பெற்ற சிறார்களைப் படத்தில் காணலாம்.




அமெரிக்க உயர் ஸ்தானிகராலயத்தின் அரசியல் விவகார உத்தியோகத்தர் ஜக்கோப் கிறிக் அண்மையில் வவுனியாவிற்கு விஜயமொன்றை மேற்கொண்டார். இதன்போது வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இமானுவேல் செபமாலை, உறுப்பினர்கள் ஆகியோர் ஜக்கோப் கிறிக்குடன் கலந்துரையாடுவதையும் காணாமல் போனோரின் உறவினர்களில் ஒருவர் மகஜர் ஒன்றினை அதிகாரியிடம் கையளிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்டச் செய்தியாளர்)

*எம்.சுவாத்திகா, தாவடி*

வியாசேர்!

அதிகமாக கோபம் கொள்கின்ற பெண்களைப் பற்றியும் அதிக ஆசை பிடித்த ஆண்களைப் பற்றியும் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

*வாழ்க்கையில் நல்லா வாழ்ந்ததா சரித்திரமே கிடையாது. அதைத்தான் படையப்பாவில் ரஜினி சொல்லிட்டாரே?*

*சொ. அருள்ஜோதி, யாழ்ப்பாணம்*

அன்பின் வியா!

உங்களுக்கு திருமணம் ஆகிவிட்டதா? அப்படியாயின் மனைவியின் பெயர் என்ன?

*ஆயிரம் பொய் சொல்லி ஒரு திருமணம் நடத்தலாம். அதனால ஒரு பொய் சொல்லப் போறன்... இத்தால் சகலருக்கும் அறியத் தருவது எனக்கு திருமணம் ஆகவில்லை.*

*சு.ஜெயரூபன், பருத்தித்துறை*

அன்பின் வியாசர்!

தாயன்பு- தாரத்தின் அன்பு இவற்றில் தாங்கள் எதற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பீர்கள்?

*தாயன்பிற்கு உவமை கூற முடியாது. ஒரு தாயினால் நல்ல தாயாய் இருக்க முடியும். ஒரு மனைவி நல்ல நண்பனாக, தாயாக ,காதலியாக, மனைவியாக பல் பரிமாணங்களில் இருக்கக் கூடியவள்.*

*வே.வே.அகிலேஸ்வரன், மருதங்கேணி*

உழைத்தும் உயராத மனிதனுக்கு நீங்கள் கூறும் அறிவுரையாது?

*ஊதாரித்தனத்தை நிறுத்து. சாதாரண மனிதனாய் வாழப்பழகு.*

*பா.அனு, கொற்றையூர்*

அன்பின் வியாசரே! இன்றைய உலகில் வாழ்பவர்கள் உண்மையாக இருப்பவர்களை விட பொய்யாக நடிப்பவர்களை அதிகம் நேசிக்கின்றார்கள். இது பற்றி நீங்கள் என்ன கருதுகின்றீர்கள்?

*உண்மை, நேர்மை என்பதெல்லாம் இறந்து விட்டதம்மா. பொய் சொன்ன வாய்க்கு பொரியும் கிடையாது என்பது அந்தக்காலம். பொய் சொல்லா வாய்க்குள் பொரிவிழாது என்பதுதான் இந்தக்காலம்.*

## மறதிக்கு மருந்துண்டா?




*சுசீலா,*

கிட்டாதாயின் வெட்டென மற என்ற பழமொழிக்கு ஒரு கருத்து கூறுவீர்களா?

*நாம் நினைத்தது நமக்கு கிடைக்காது எனத் தெரிந்தால் உடனேயே அதை மறந்துவிட வேண்டும். நம் இளைஞர்களுக்கு நல்லாவே பொருந்தும்.*

## தாயன்பு- தாரத்தின் அன்பு இவற்றில் தாங்கள் எதற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பீர்கள்?

*பொ.இளவரசி, பருத்தித்துறை*

அன்பின் வியாசர் அண்ணா!

பதில் அளிப்பது இலகு எனின் பரீட்சையில் சித்தி வீதம் குறைய, காரணம் என்ன?

*படித்ததை எழுதுவதுதானே பிரச்சினை. பன்பலாய் எழுதி பாஸ்பண்ண முடியுமென்றால் அனைவரும் பாஸ்பண்ணி விடுவார்களே?*

*ரி.எம்.ரூபன், சுழிபுரம்*

பாடசாலைக் காலத்தில் ஏற்படும் பிரச்சினைகளை தீர்க்க வழி என்ன?

*உங்கள் பாடசாலையில் நான் அதிபராக இருக்க வேனும். ஓட ஓட வெழுக்கிற வெழுவயில... படிக்கிற வயசில படிக்க வேணும் அதென்ன பிரச்சினை?*

*மரியதாஸ், மன்னார்*

மறதிக்கு மருந்துண்டா?

*இளவயசில்:- மறதிக்கு மருந்து மாஸ்ரர்ட பிரம்பு.*

*திருமணத்தின் பின்:- மறதிக்கு மருந்து மனைவியின் நினைவு.*

*முது மையில்:- மறதிக்கு மருந்து....?*

*த.மோகனரூபன், சுழிபுரம்*

காதல் எனும் பாதாளத்தில் விழாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?

*மனித இனத்தில் க (பெ)ண்கள் இல்லாத உலகத்தில் போய் வாழ்ந்தால் அந்த பாதாளத்தை பார்க்கத் தேவையில்லை.*

### வாய்விட்டுச் சிரிச்சால் நோய்விட்டுப் போகும்....

மனைவிக்கு அஞ்சாதோர் சங்கம் அமைக்கப்பட்டு இரண்டாவது ஆண்டு நிறைவு விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேடையில் தலைவர் உரையாற்றி விட்டு அமர்ந்திருக்கிறார். தொண்டர் ஒருவர் தலைவர் அருகில் வந்து

தொண்டர்: சேர் மனைவிக்கு அஞ்சாதோர் சங்கத்தில் இருந்து இன்றுடன் நான் சுய விரும்புடன் விலகிக் கொள்கின்றேன்.

தலைவர்: ஏனப்பா இந்த திடீர் முடிவு...!!?

தொண்டர்:- அதுவந்து....

எனக்கு கல்யாணம் நிச்சயமாச்சு சேர் அதுதான்...!!

### அன்பு வாசகர்களே....!

உங்கள் கேள்விகளை

ஆசிரியர், வியாசர் பதில்கள்

இல.3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி , யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு அனுப்பி
வைக்கவும்

# பிரிட்டன் பிரஜை கொலை விசாரணைகளில் திருப்தியில்லை

(பிரிட்டன்)

பிரிட்டன் பிரஜை படுகொலை சம்பவம் தொடர்பில் அரசாங்கம் நடத்தி வரும் விசாரணைகள் திருப்தி அடையும் வகையில் இல்லை என அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர் சைமன் டென் சேக் தெரிவித்துள்ளார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகையன்று தங்காலை பிரதேச சுற்றுலா விடுதியொன்றில் சாக்கீ குர்ஹாம் என்ற பிரிட்டன் பிரஜை படுகொலை செய்யப்பட்டார்.

இவர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பணியாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கொலை தொடர்பிலான விசாரணைகள் எவ்வாறு நடைபெறுகின்றது என்பதை கண்காணிக்கும் நோக்கில் குர்ஹாமின் சகோதரர் நசீருடன் நாடாளுமன்ற உறுப்பினர் சைமன் டென் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

சம்பவம் குறித்த விசாரணைகள் திருப்தி அடையும் வகையில் இல்லை என அனைத்து நாடாளுமன்ற ஒன்றியத்தில் சைமன் டென் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என அனைத்து நாடாளுமன்ற ஒன்றியத்தின் இலங்கைக் கிளை அறிவித்துள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட தங்காலை பிரதேச சபைத் தலைவர் சம்பத் சந்திர புஸ்வ விதான பத்திரன உள்ளிட்ட எட்டு பேர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (அ-2)

# வவுனியா கோட்டமட்ட உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

வவுனியா கோட்ட பாடசாலைகளுக்கிடையில் அண்மையில் உதைபந்தாட்டப்போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் விபரங்களை வவுனியா நகர கோட்டக்கல்வி அதிகாரி எம்.பி. நடராஜ் வெளியிட்டுள்ளார். அதன் விபரம் வருமாறு,பெண்களுக்கான பிரிவில் நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம் முதலாமிடத்தினையும் சைவப்பிரகாச மகளிர் கல்லூரி இரண்டாம் இடத்தினையும் பெரிய கோமரசன் குளம் மகா வித்தியாலயம் மூன்றாமிடத்தினையும் பெற்றுள்ளன.

19 வயதின் கீழ் ஆண்கள் பிரிவில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் முதலாமிடத்தினையும் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயம் இரண்டாமிடத்தினையும் பண்டாரிக்குளம் விபுலானந்தா கல்லூரி மூன்றாமிடத்தினையும் பெற்றுள்ளன.

17 வயது ஆண்கள் பிரிவில் மூன்று முறிப்பு அ.த.க. பாடசாலை முதலாமிடத்தினையும் நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம் இரண்டாமிடத்தினையும் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயம் மூன்றாமிடத்தினையும் பெற்றுள்ளன.

15 வயது ஆண்கள் பிரிவில் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயம் முதலாமிடத்தினையும் அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயம் இரண்டாமிடத்தினையும் மூன்று முறிப்பு அ.த.க. பாடசாலை மூன்றாமிடத்தினையும் பெற்றுள்ளன. (அ-2-266)







யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நீண்ட காலமாக சேவையாற்றியவர்களுக்கு விருது வழங்கும் வைபவம் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தலைமையில் கைலாசபதி அரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் .... (படங்கள்:-எஸ்.ஆர்.கரன்)

# புகலிடம் நிராகரிக்கப்பட்டவர்களை திருப்பியனுப்ப சுவிஸ் அரசு நடவடிக்கை

## ஆர்ப்பாட்டத்திற்கு தயாராகிறது தமிழர் பேரவை

(கொழும்பு)

சுவிட்சர்லாந்து நாட்டில் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட ஈழத்தமிழர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கு எதிராக ஜெனீவா நகரில் ஐ.நா முன்றலிலே கண்டன ஆர்ப்பாட்ட நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வார்ப்பாட்டம் நாளை திங்கட்கிழமை காலை முதல் மாலை வரை இடம் பெறவுள்ளது.

ஆர்ப்பாட்ட நிகழ்வை ஒட்டி ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளது. குறித்த மகஜரை மனித உரி மைகள் பேரவையின் சிவில் பாதுகாப்பு பிரிவுத் தலைவி யூன்ரே அம்மையாரிடம் கையளிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கை அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தம் முடிவிற்கு வந்ததை அடுத்து நாட்டில் மோதல் முடிவடைந்து விட்டதாக கருதும் சுவிஸ் அரசாங்கம் புகலிடக் கோரிக்கையாளர்களின் விண்ணப்பங்களை நிராகரித்து வருவதுடன் அவர்களை திருப்பி அனுப்பும் நடவடிக்கையும் மேற்கொண்டு வருகின்றது.

ஆதாரங்களாக வழங்கும் தகவல்களை ஏறெடுத்தும் பாராமல் தங்களது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு வருவதாக புகலிடக் கோரிக்கையாளர்கள் வேதனையுடன் தெரிவித்து வருகின்றார்கள். தமது கோரிக்கைகளும் மேன்முறையீடுகளும் உதாசீனம் செய்யப்படும் நிலையில் விடயத்தை சர்வதேச மட்டத்தில் எடுத்துச் செல்ல அவர்கள் முடிவு செய்துள்ளனர்.

இதேவேளை புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டவர்கள் இலங்கையில் பாலியல் ரீதியாகவும் வேறு விதமாகவும் துன்புறுத்தப்படுவதாக அண்மையில் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தனது 140 பக்க அறிக்கையில் சுட்டிக் காட்டியிருந்தது.

சுமார் 3 ஆயிரம் பேர் வரையான தமிழர்களை தாம் திருப்பி அனுப்ப உத்தேசித்துள்ளதாக 2011 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அரசாங்கம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழப்பு

புகையிரதத்தில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார். ஆராய்ச்சிக் கட்டு நல்லதரன்கட்டு பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளத்திலிருந்து கொழும்பு நோக்கி நேற்றுக் காலை சென்று கொண்டிருந்த புகையிரதத்திலேயே குறித்த நபர் மோதுண்டு பலியாகியுள்ளார்.

புகையிரதத்தில் மோதுண்டு படுகாயமடைந்த நிலையில் சிலாபம் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று அனுமதித்த போதும் அவர் அச்சமயம் உயிரிழந்திருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# சூடானைப் போன்று இலங்கையை பிளவுபடுத்த அரசாங்கம் முயற்சி

## கிரியெல்ல எம்.பி. தெரிவிப்பு

சூடானைப் போன்றே இலங்கையிலும் பிளவினை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சித்து வருகிறது. மேலும் சூடானைப் பின்பற்றி ஆட்சி நடத்தி வருகிறது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கத்திடம் உரிய வெளியுறவுக் கொள்கைகள் கிடையாது. இதன் காரணமாகவே ஏனைய நாடுகள் இலங்கை விவகாரங்களில் தலையீடு செய்து வருகின்றன.

கடந்த காலங்களில் ஆட்சி செய்த எந்தவொரு அரசாங்கத்தின் மீது ஐக்கிய நாடுகள் அமைப்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதில்லை.

தற்போது ஆட்சி நடத்திவரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் இயலாமை காரணமாகவே ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இரண்டாம் தடவையாகவும் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.

சூடானில் இடம்பெற்றதாகவும் கிறிஸ்தவ முஸ்லிம் மக்களிடையே மோதல்கள் இடம் பெற்றன.

இந்த உள்நாட்டு யுத்தத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பு தலையீடு செய்து வடக்கு, தெற்கு என இரண்டு சூடான்களாக நாட்டைப் பிளவுபடுத்தியது. இலங்கையில் இதே நிலைமையை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்கின்றது என்றார். (அ-2)


# INVITATION FOR BIDS

(அ-2630)

सत्यमेव जयते

INDIA
India-Sri Lanka Friendship

## High Commission of India
## Colombo, Sri Lanka

**Invites bids from qualified ICTAD registered contractors to undertake the following construction work.**

| Bid No | Description of Work | Estimated Cost /(Rs in millions) | Contract Period | Required Grade |
|---|---|---|---|---|
| Col/Com/228 /8/2011 | Construction of Centre for Skill Development Faculty of Agriculture, University of Jaffna at Ariviyal Nagar, Kilinochchi | 259 | 12 months | C2 or above / Equivalent (Buildings) |

Tender documents can be collected from the office of High Commission of India 36-38, Galle Road, Colombo-03 for a fee of Rs.10,000/- per document on any working day from 09.30 AM to 4.00 PM from 11 March – 22 April 2013. Tender Document can be seen at the Mission's website www.hcicolombo.org before purchase of the tender documents.

The last date for submission of sealed tenders with all prescribed documents is 3.00 PM on April 23, 2013. Tenders will be opened immediately thereafter.



# UNIVERSITY OF JAFFNA
# INVITATION FOR BIDS

## Completion of Construction of Boys' Hostel at Ariviyal Nagar Complex, Kilinochchi, Faculty of Agriculture.

1. The Chairman, Procurement Committee of University of Jaffna, now invites sealed bids from eligible and qualified bidders for "Completion of Construction of Boys' Hostel" as described below and at an estimated to cost of Rupees Forty Two Million (Rs 42,000,000/=) with VAT.

   This shall be a measure and pay contract and the construction period is Two Hundred and Eighty (280) Calendar Days.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for grade C5 or above with the Institute for Construction Training and Development (ICTAD).
4. Interested bidders may obtain further information from the Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, Thirunelvely, Jaffna. and view the Bidding Documents at the same address on any working day from 9:00 hrs to 16:00 hrs. Contact numbers are: Phone.021 2219201, Facsimile: 021 2219201.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, Thirunelvely, Jaffna. from the 11th March, 2013 until 28th March, 2013 from 9:00 hrs to 15:00 hrs and upon payment of a non-refundable fee of Rupees Five thousand (Rs.5,000/-).
6. Sealed Bids shall be delivered or sent by registered post to the **The Chairman, Procurement Committee of University of Jaffna, Thirunelvely, Jafna P.O Box 57,** to reach on or before 14.00 hrs on the 1st April, 2013. Bids will be opened soon after closing, at 14.15 hrs on the 1st April, 2013 at the same venue in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid at least for a period of 91 Days from the date fixed for receiving of Bids or any extended date.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Section 09 in the Bidding document.
   - In favour of "*Vice Chancellor, Chairman, Procurement Committee, University of Jaffna.*"
   - For a amount of Rs. 500,000/=
   - Issued by one of the agencies indicated in the clause 16.0 of the Schedule.9
9. Pre bid meeting will be held at Ariviyal Nagar Complex, Kilinochchi, at 10.30 hrs on 22nd March, 2013.

**Vice -Chancellor**
**Chairman, Procurement Committee,**
**University of Jaffna, Thirunelvely,Jaffna.**
**09.03.2013**

(c-2631)

# சிவராத்திரியை முன்னிட்டு பண்டைக்கால ருத்ர பூஜை

தவத்திரு ஸ்ரீ ரவிசங்கர் குருஜி அவர்களின் ஆசியுடன் வாழும் கலை அமைப்பு சிவராத்திரியை முன்னிட்டு நாடு முழுவதும் பண்டைய கால பூஜை முறையான ருத்ர பூஜையினை ஏற்பாடு செய்துள்ளது. இதற்காக குருதேவின் சீடர்கள் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ளார்கள்.

முதன்முறையாக கிளிநொச்சி, முல்லைத்தீவிலும் மேலும் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு, கண்டி ஆகிய இடங்களிலும் நடைபெற உள்ளது.

ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜி இப்பூஜை பற்றி குறிப்பிடும் போது இவ்வாறு குறிப்பிடுகின்றார். பூ என்றால் முழுமை என்றும் ஜா என்றால் முழுமையில் இருந்து பிறந்த நன்று என்றும் அர்த்தம். முழுமையாகவும் நன்றியுள்ளவராகவும் பூரண பூஜை. பூஜை எப்படி செய்யப்படுகின்றது.

குறுகிய மனதுடன் செய்வது அல்ல பேரண்டம், பற்பரசுரங்கள், ஆன்மா, மெய்மை, மனம் இவைகளின் உதவியுடன் செய்வது தான் பூஜை. சகலத்தையும் முழுமையாக சமர்ப்பிப்பது தான் பூஜை.

நீங்கள் வைத்திருக்கும் பக்தியையும் உங்களில் உள்ள ஒவ்வொரு சிறு அணுவையும் உங்களிடமுள்ள ஒவ்வொரு சின்னஞ்சிறிய விடயங்களையும் சுட சமர்ப்பித்து விட வேண்டும் என்ற உணர்வு ஏற்படுகின்றது.

எனக்கு பேரண்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை சமர்ப்பிக்கின்றேன். நீங்கள் எனக்கு இந்த உலகத்தை கொடுத்தீர்கள் சமர்ப்பிக்கின்றேன். நான் இறைவனை சேர்ந்தவன். இந்த அதீதமான உணர்வுகளான சமர்ப்பித்தல், ஒன்றாக இணைதல், எல்லாவற்றையும் ஒவ்வொரு அணுவையும் தெய்வத்திற்கு கொடுத்தல் என்பதுதான் பூஜை. பூஜையின் மீது இருக்கும் பரிசுத்தமான ஆழ்ந்த ஈடுபாடு, ஆர்வம், பக்தி என்பன இறைவழிபாட்டின் சிறப்பு அம்சங்களில் ஒன்று.

இவ் ருத்ர பூஜைக்கான மந்திரங்கள் முனிவர்கள், ரிஷிமார்கள் அண்டவெளியில் இருந்து பதிவிறக்கம் செய்தார்கள். அவர்கள் ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்திருந்த போது தாம் கேட்டவற்றை மற்றவர்களுக்கும் கொடுக்க விரும்பினார்கள். மாற்றீடு செய்தார்கள். பூஜையின் போது உச்சரிக்கும் மந்திரங்களின் அர்த்தத்தை விட அதன் அதிர்வலைகளே முக்கியம். மந்திரங்கள் வேலை செய்யும் முறை, ஏற்படுத்தும் மாற்றங்கள் மிக இரகசியமாகவும் புனித மரகவும் இப் படைப்பில் வைக்கப்பட்டுள்ளது.

மந்திரங்களின் அதிர்வலைகள் பேரானந்தம், மகிழ்ச்சி, ஆரோக்கியம் என்பனவற்றை எம்மை நோக்கி வரச் செய்கின்றன. மந்திரங்களின் உச்சரிப்புடன் பூ, பால்,தயிர்,நெய், வாசனைத்திரவியம், நெருப்பு, விழிப்புணர்வு என்பவற்றால் லிங்கத்துக்கு செய்யும் அபிஷேகம் இயற்கையை செழிக்க வைக்கின்றது. சூழலில் அமைதியையும் மகிழ்ச்சியையும் உண்டாக்கின்றது. தனிமனிதன்,சூழலில் உள்ள எதிர் மறை சக்தியை அகற்றி நேர் சக்தியை அதிகரிக்கின்றது.

**எஸ்.திவாகர்,வாழுங்கலை**

எனவே இப்பண்டைய புனிதமான ருத்ர பூஜை சிவராத்திரி காலப்பகுதியில் இலங்கையில் குருதேவின் சீடர்களினால் நடத்தப்படுவது இலங்கை மக்களுக்கு குரு வரப்பிரசாதமே. இலங்கை மக்கள் மீது எப்போதும் அதீத அன்பும் அக்கறையும் கொண்ட குருதேவ் தனது சீடர்களை அனுப்புவது எமக்கு கிடைத்த பாக்கியமே.

# சொற்பொழிவு

சரசாலை நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தில் சரசாலை இந்து மன்றத்தினால் நடத்தப்படும் சைவ சமய அறிவு சொற்பொழிவு இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு ஆலய பரிபாலன சபைத்தலைவர் க.சிவசங்கரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கலந்து கொள்ளும் அனைத்து மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படும் என கூறப்பட்டுள்ளது.

தொடர்ந்து சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நான்கு சாம அபிசேகமும் பூசையும் இடம்பெறவுள்ளது. (அ-5)

# துப்பாக்கி சூட்டில் ஐவர் காயம்

பூப்புனித நீராட்டு விழா இடம்பெற்ற வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஐவர் படுகாயமடைந்துள்ளனர்.

புத்தல ஒக்கம்பிட்டிய பஹகம பிரதேசத்தில் கடந்த 7 ஆம் திகதி இரவு 11.45 மணியளவில் வாய்ச்சண்டை நீண்டதால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

காயமடைந்த ஐவரும் மொனறாகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அதில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக பதுளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிச்சூடு நடத்தியதாகக் கூறப்படும் நபரும் தாக்குதலுக்கு இலக்காகி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)

# கே.பியின் சர்வதேச பிடிவிறாந்து தொடர்ந்து அமுலில் இருக்கும்

## இன்டர்போல் அறிவிப்பு

கே.பி எனப்படும் குமரன் பத்மநாதன் தொடர்ந்தும் தேடப்பட்டு வரும் குற்றவாளியாக சர்வதேச இன்டர்போல் அறிவித்துள்ளது.

குமரன் பத்மநாதனுக்கு எதிரான சர்வதேச பிடிவிறாந்து உத்தரவு தொடர்ந்தும் அமுலில் இருப்பதாகவும் சர்வதேச பொலிசாரினால் தேடப்பட்டு வருவோரின் சிவப்பு பட்டியலில் அவரது பெயர் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பில் இந்தியாவின் நீதிமன்றம் ஒன்றினால் குமரன் பத்மநாதனை கைது செய்யுமாறு சர்வதேச இன்டர்போல் மையத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்தே குமரன் பத்மநாதனை தேடப்பட்டு வரும் குற்றவாளியாக பட்டியலிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# மருந்து கலந்தபானம் வழங்கி உடைமைகள் கொள்ளை

## சந்தேகநபருக்கு விளக்கமறியல்

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கும் பயணிகளுக்கு மயக்க மருந்து கலந்த உணவு பானங்களை வழங்கி அவர்களது உடைமைகளை கொள்ளையிட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் கைதான வாகன சாரதியை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிமன்ற நீதவான் ரஷ்மி சிங்கப்புலி உத்தரவிட்டுள்ளார். அக்கரைப்பற்றை சேர்ந்த மீரா சாஹிபு இமாம்டீன் அஸ்வர் என்ற சாரதியையே இவ்வாறு தடுப்புக்காவலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

ஹெரோயின் போதைப் பொருள் விற்பனை தொடர்பாக வாழைத்தோட்ட பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் இவர் தொடர்பாக விசாரணைகளை செய்தபோதே விமான நிலையத்திலிருந்து வரும் பயணிகளிடம் கொள்ளையிட்ட 9 சம்பவங்கள் தொடர்பாகவும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தேடப் பட்டு வந்த நபர் இவர் என்பதும் தெரிய வந்துள்ளது.

இவர் முன்னர் கைது செய்யப்பட்டு மட்டக்களப்புக்கு அழைத்துச் சென்ற போது தப்பிச் சென்றுள்ளார். (அ-2)

# பட்ஜெட் அமுலுக்கான 21 சட்டமூலங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன

2013 வரவு செலவுத் திட்டத்திலுள்ள யோசனைகளை அமுல்படுத்தும் வகையில் 21 சட்டமூலங்கள் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

இவை அரசியலமைப்பிற்கு உட்பட்டது என சட்டமா அதிபர் அறிவித்துள்ளதாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ சபையில் அறிவித்துள்ளார்.

சுங்க திருத்தச்சட்டமூலம்,ஹலால் திருத்தச் சட்டமூலம், மீள்குடியேற்ற அதிகார சபை திருத்தச் சட்டமூலம், பிறப்பு, இறப்பு பதிவு திருத்தச் சட்டமூலம் மலையக திருமண, விவாகரத்து திருத்தச் சட்டமூலம், அட்டோணி அனுமதி திருத்த சட்டமூலம், விவாகப் பதிவு திருத்தச் சட்டமூலம், முஸ்லிம் திருமண, விவாகரத்து திருத்தச்சட்டமூலம் , தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி திருத்த சட்டமூலம், மூலோபாய அபிவிருத்தித் திருத்தச் சட்டமூலம், பொருளாதார சேவைக்கட்டண திருத்தச்சட்டமூலம், துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி வரி திருத்தச் சட்டமூலம், நிதி முகாமைத்துவ திருத்தச் சட்டமூலம், வற்வரி திருத்தச் சட்டமூலம் அடங்கலாக 21 சட்டமூலங்களையும் திருத்துவதற்கு கடந்தவாரம் அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 21 சட்டமூலங்களில் விவாகப் பதிவு திருத்தச் சட்டமூலம், முஸ்லிம் திருமண, விவாகரத்து திருத்தச்சட்டமூலம், மலையக திருமண, விவாகரத்து சட்டமூலம் என்பவற்றை மாகாண சபைகளுக்கு சமர்ப்பிக்குமாறு சபாநாயகர் அறிவித்தார். (அ-2)

# அப்துல் காதருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை

பிரதிஅமைச்சர் அப்துல் காதரின் கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்துள்ளது. ஒழுக்காற்று விசாரணைகளை தடுத்து நிறுத்தும் நோக்கில் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்கவிற்கு எதிரான குற்றவியல் பிரேரணையில் ஆளும் கட்சிக்கு சார்பாக பிரதி அமைச்சர் அப்துல் காதர் வாக்களித்திருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச்சின்னத்தில் தேர்தலில் வெற்றியீட்டி ஆளும் கட்சிக்கு ஆதரவாக வாக்களித்தமை தொடர்பில் கட்சி ஒழுக்காற்று விசாரணைகளை நடத்தத் திட்டமிட்டிருந்தது.

இந்த விசாரணைகளுக்கு இடைக்கால தடையுத்தரவு விதிக்குமாறு அப்துல் காதர் நீதிமன்றில் கோரியிருந்தார்.

அப்துல் காதரின் மனுவில் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிட்டிருந்தனர். அப்துல் காதருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. (அ-2)





பொருளாதார அபிவிருத்தி அமைச்சின்மீள் எழுச்சித் திட்டத்தினின் அனுசரணையுடன் உறவுப்பாலம் நிகழ்வு அண்மையில் கிளிநொச்சி மாவட்ட கோணாவில் கிராமபொதுமைதானத்தில் நடைபெற்றது. இதன் போது.... (படங்கள்:-சிவநகர் செய்தியாளர்)




# நன்றி மறப்பது நன்றன்று



ஒருஊரில் பழனி, ரவி என்று இரு நண்பர்கள் இருந்தனர். சிறு பருவம் முதலே அவர்கள் நண்பர்களாக இருந்து வந்தனர். பெரியவர்களானதும் பழனி தன் தந்தையின் தொழிலான விவசாயத்தில் ஈடுபட ரவி தன் பரம்பரைத் தொழிலான வியாபாரத்தில் ஈடுபட்டான்.

பழனி இரக்க சிந்தனை உள்ளவன். சுமாரான வசதி படைத்தவன். ஆனாலும் அவன் மனம் விசாலமானது. ஏனையவர்களுக்கு எப்போதும் ஏதாவது உதவி செய்து கொண்டேயிருப்பான். ரவி நல்ல வசதி படைத்தவன். ஆனால் ஏனையவர்களுக்கு எந்த உதவியும் செய்யமாட்டான். பணத்தை எண்ணுவதிலேயே குறியாகியிருந்தான்.

## அம்புலிமாமா கதைகள்

பழனியிடம் அவ்வப்போது உதவி பெற்றுக்கொள்வானே தவிர அதற்கு நன்றிகூட கூற மாட்டான். திருப்பி உதவியும் செய்வதில்லை.

ஒருசமயம் ரவியின் மகள் பிரசவ வலியினால் துடித்த போது அவளை அவசரமாக நகரத்திலுள்ள மருத்துவ விடுதிக்கு எடுத்துச் செல்ல வேண்டி நேரிட்டது. ரவியின் குதிரை வண்டி பழுதடைந்திருந்ததால் அவன் ஓட்டமாக ஓடி பழனியிடம் சென்றான். நண்பனின் அவசரத் தேவையை அறிந்தவுடன் ஏற்றியிருந்த மூட்டைகளை அப்படியே கீழே வீசிவிட்டு ரவியின் வீட்டுக்கு வண்டியுடன் சென்று அவன் மகளை இட்டுக் கொண்டு நகரத்து மருத்துவ விடுதிக்குச் சென்றான். ரவியின் மகளுக்கு சுகப்பிரசவம் ஆயிற்று. ஆனால் ரவி வாய் வார்த்தைக்குக்கூட பழனிக்கு நன்றி சொல்லவில்லை.



மற்றொரு சமயத்தில் ரவியின் மகனுக்கு சிகிச்சையின் பொருட்டு அவசரமாக சில மூலிகைகள் தேவைப்பட்டன. அதனால் ரவி அவசரமாகப் பழனியின் உதவியை நாடினான். பழனி மாட்டு வண்டியைப் பூட்டிக்கொண்டு தன் வேலையை அப்படியே விட்டு விட்டு ரவியின் மகனுக்கு எங்கெங்கோ காட்டில் தேடியலைந்து மூலிகை சேகரித்துக் கொடுத்தான். அவசர சமயத்தில் தனக்கு உதவி செய்த பழனிக்கு மீண்டும் ரவிக்கு நன்றி தெரிவிக்கத் தோன்றவில்லை.

சில மாதங்களுக்குப் பின் பழனியின் மகனுக்கு ஒரு நிதி நிறுவனத்தில் வேலை கிடைத்தது. ஆனால் வேலைக்குச் சேருமுன் நிறுவனத்தினர் பாதுகாப்பு வைப்பு நிதியாக இருபதாயிரம் ரூபாய் கொடுக்கச் சொல்லி அவனைக் கேட்டனர். பழனியிடம் அவ்வளவு ரொக்கம் இல்லை.

உடனே ரவியிடம் சென்று இருபதாயிரம் ரூபாய் கடன் கேட்டான்.

உடனே அடடா! அச்சொச்சோ என்று ஓசை எழுப்பிய ரவி நண்பா நான் என்னவென்று சொல்வேன்! நேற்று வரை நீ என்னிடம் கேட்ட பணம் இருந்தது. இன்றுதான் என் நண்பன் ஒருவனுக்கு இருபதாயிரம் கடன் கொடுத்தேன். என்னிடம் ஒரு பைசா தற்போது கிடையாது. அட, ஹாய் ஒரு யோசனை சொல்லட்டுமா? நீ பேசாமல் உன் வயலை அடகு வைத்து கந்து வட்டிக்குக் கடன் வாங்கலாமே! நான் வேண்டுமானால் மணிலால் சேட்டிடம் சொல்லட்டுமா என்று வெந்த புண்ணில் வேலைப்பாய்ச்சினான்.

ரவியின் பதிலைக்கேட்ட பழனி அப்படியே இடிந்து போனான். இப்படித்தன்னை அவன் கைவிடுவான் என்று



பழனி கற்பனை கூட கண்டதில்லை. எப்படியோ பத்துப் பேரைக் கெஞ்சிக்கூத்தாடி பணம் புரட்டுவதற்குள் அவனுக்கும் பாதி உயிர் போய் விட்டது.

சில நாட்களுக்குப்பின் ரவி, பழனி இருவருக்கும் பழக்கமான அவர்களுடைய பழைய பள்ளித்தோழன் பாலன் ஊருக்கு வந்தான். அவனைச் சந்தித்த பழனி ரவியிடம் தனக்கேற்பட்ட கசப்பான அனுபவத்தைக்கூறினான்.

அவன் எனக்கு தக்க சமயத்தில் உதவி செய்யாமல் காலை வாரி விடுவான் என்று எதிர்பார்க்கவேயில்லை. எத்தனைமுறை நான் அவனுக்கு கேட்டபோது எல்லாம் உதவி செய்தேன் தெரியுமா? அதற்கு நன்றிகூட சொன்னதில்லை என்று பழனி பொருமினான்.

உடனே கடகடவென சிரித்த பாலன் நன்றியை நாய்களிடம் எதிர்பார்க்கலாம். ரவியைப் போன்றவர்களிடம் எதிர்பார்க்கலாமா? நல்ல மனிதனாய் இருப்பவன் தான்பெற்ற உதவிக்கு நன்றிக் கடன் செலுத்தும் வரை நிலை கொள்ளாமல் தவிப்பான். உதவி செய்தவன் நீ ஏன் நன்றியை எதிர்பார்த்து வருத்தப்படுகிறாய். மற்றொன்றுபுரிந்துகொள்! நீ விவசாயி உலகிலுள்ள அனைவரின் வயிற்றுப்பசி போக உழைப்பவன். பிறருக்கு உதவி செய்வது உன் இயல்பு! ஆனால் ரவி ஒரு இதயமற்ற வியாபாரி. அவனுக்கு காசு பணமும் இலாப நட்டமும் தான் தெரியும். நன்றி அன்பு போன்ற மென்மையான உணர்வுகளுக்கு அவன் நெஞ்சில் இடமில்லை என்று விளக்கினான்.

நன்றாகச் சொன்னாய் பாலா என்று தன் வருத்தத்தை மறந்து பழனி சிரித்தான்.



# மூன்றாம் உலகப்போர்

68

## மானுடத்திற்கான திடக்கண்ணீர்!

## 'வேலி காத்த அய்யனாரே...!!'

"எமகாதகப் பயலா இருக்கானே சட்டம் படிச்சுட்டுக் கொள்ளை அடிச்சிருப்பானோ! அத்தன பதட்டத்துலயும் முத்துமணி சொரட்டப் புத்திக்குள்ள ஒரு சூழ்ச்சி ஓடிக்கிட்டேயிருக்கு.

"ரெண்டே ரெண்டு தடயம் இருக்கு. அதுகள மட்டும் நான் அழிச்சுட்டா என்னிய நீங்க ஒண்ணும் பண்ணமுடியாதுடி"

"சார் இதோ... இங்க வந்து பாருங்க" அலமாரியத் திறந்த இன்ஸ்பெக்டரு அலறிட்டாரு.

உள்ள பாத்தா-

ராயல் சல்யூட் ரெண்டு, ரெமி மார்ட்டின் நாலு, ஒட்கா மூணு, பிளாக் லேபிள் நாலு, சிங்கிள் மார்ட் ரெண்டு. அடுக்கி வைச்சிருக்கு வெளிநாட்டுச்சரக்கு ராணுவ அணி வகுப்பு மாதிரி.

பாத்தாலே தலை சுத்துது டிஎஸ்பிக்கு.

தலைமாட்டுல மிச்சம் இருந்தது ப்ளூ லேபிள். அதையும் குறிச்சுக்குங்க. அதுக்கெல்லாம் முத்துமணி அசரவேயில்ல. ஆணியில தொங்குது அவன் சட்டை அதுலயே கண்ணாயிருக்கு அவனுக்கு.

"மிஸ்டர் முத்துமணி உங்க சம்பளம் எவ்வளவு?"

"பிடித்தம் போக பத்தாயிரத்திச் சொச்சம்."

"இந்தச் சம்பளத்துல எப்படி இத்தனை வெளிநாட்டுச்சரக்கு வாங்க முடிஞ்சுது."

"வாங்குனது இல்ல சார்; கொடுத்தது."

"யாரு?"

"வெளிநாட்டு நண்பருக"

"அவங்க பேரு நாடு, முகவரி, உத்தியோகம், வருமானம், தொலைபேசி, இ-மெயில் ஐடி எல்லா விபரமும் எமக்குக் கொடுத்தாகணும். மிஸ்டர் முத்துமணி இன்னொரு முக்கியமான கேள்வி இந்த வீடு மொத்தம் தொள்ளாயிரம் சதுர அடி சதுர அடிக்கு கொறைஞ்சது ரெண்டாயிரம்னு கணக்குப்போட்டாலும் பதினெட்டு லட்சத்துக்கு நீங்க கணக்குக் காட்டியாகணும் எங்கே எடுங்க உங்க ரசீதுகள."

"யாத்தே"ன்னு நெஞ்சப்புடிச்சுக் கத்தி சட்டையிருக்கிற பக்கமா சாய்ஞ்சு விழுந்துட்டான் முத்துமணி. நெஞ்சுவலி... "தண்ணி"ன்னு வேற கதறிட்டான்.

தண்ணி வர்துக்குள்ள சட்டைப் பைக்குள்ள கைவிட்டு என்னத்தையோ ஒண்ண எடுத்து வாயில போட்டு மென்னு முழுங்கிட்டான்.

தண்ணிய வாங்கிக் குடிச்சுப்புட்டு "அடிக்கடி நெஞ்சவலிவரும் சார் அந்தமாத்திரையை மென்னு முழுங்கலேன்னா உசிரு போயிரும்சார்."- மேல்மூச்சு கீழ்முச்சு வாங்குறான் முத்துமணி. நெஞ்சத்தடவிக் கொடுக்கலாமில்லன்னு பெண்போலீசை சைசா ஒரு பார்வை பாக்கிறான். "என்ன மாத்திரை சாப்புடறீங்க?"

"டாக்டரை நம்புவேன் சார் என்ன ஏதுன்னு கேக்கமாட்டேன்."

அவன. ஒரு ஓரமா உக்காரவைச்சிட்டு கழிப்பறை, குளியலறை, சமயலறை, கழிவுத்தொட்டி மொட்டைமாடி, சுவரு எல்லாத்தையும் பங்கு போட்டுச் சோதிக்கப் பறக்குது போலீசு.

"வங்கி லாக்கருக்கு பணம் கட்டுன ரசீத மென்னு விழுங்கிட்டேன். பாதிக்கெணறு தாண்டிட்டேன். மீதிக் கெணறையும் தாண்டவச்சிரு என் வேலி காத்த ஐயனாரே"- குலசாமிய மனசுக்குள்ள கும்புட்டு வேண்டிக் கிட்டான் முத்துமணி.

சோதனை இப்பத் தீவிரமாகுது. துணிமணியெல்லாம் கலச்சு எறியிறாக; பண்ட பாத்திரங்கள உருட்டறாக. ஒரு போலீசு சுவரைத் தட்டிப் பாக்குது; ஒரு போலீசு தரையைத் தட்டிப்பாக்குது. அதுவரைக்கும் இறுக்கமா இருந்துட்டு இப்ப அழுக ஆரம்பிச்சுதுக பிள்ளைக. ரெண்டு மணிநேரம் சோதிச்சும் விவகாரமா ஒண்ணும் சிக்கல. இது அரிச்சந்திரன் வீடுங்கிறதமாதிரி சுத்தமா தொடச்சு வைச்சிருக்கான்.

பிள்ளைக கத்தவும் முத்துமணி எந்திரிச்சுட்டான்.

"சார் எங்களச் சோதிங்க சார். எங்க



புள்ளைக என்னபாவம் பண்ணிச்சுக அதுகளப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பட்டுமா வேணாமா? கொஞ்சம் யோசிச்சுச் சொன்னாரு டிஎஸ்பி.

"ஆட்சேபனை இல்லை அனுப்பலாம்."

"பிள்ளகைளுக்கு மதியச் சாப்பாடு கொடுத்துவிடணும் சார். எனக்குத்தான் தெரியும் என்பிள்ளகைளுக்கு என்ன பக்குவத்துல சோறு கலக்கணுமுன்னு நான் சமயல் ரூமுக்குப் போகலாமா சார்?"

தீவிரமா யோசிச்ச டிஎஸ்பி பிள்ளைக அழுறதப் பாத்துட்டு ஒரு பக்கமாத் தலையாட்டுனாரு. சுவருல சாஞ்சே கெடந்த லச்சுமியைத் தவ்வித் தாண்டிட்டுச் சமயல் ரூமுக்குப் போனான் முத்துமணி. பின்னாலேயே போச்சு ஒரு பெண்போலீசும்.

அடுப்புப் பத்தவச்சான் ஒலை கொதிக்க அரிசியப்போட்டான். பிள்ளைகளுக்கு கோதுமைத் தோசை ஊத்திக் கொடுத்தான்.

"உங்களுக்கும் ஆளுக்கொரு தோசை ஊத்தட்டுமா?" ன்னு போலீசை வேறு கேட்டுக்கிட்டான்.

தயிர்ச்சோறு பண்ணி அது நடுவல உறுகாய வேற சம்மணங்கால் போட்டு உக்காரவைச்சு டிபன் பாக்சை புத்தகப்பையில போட்டு விட்டுப் போங்க நல்லாப்படிங்கன்னு ஆசீர்வாதம் பண்ணி வேற அனுப்புறான் அப்பன் ஸ்தானத்துல.

கண்ணைத் தொடைச்சுக்கிட்டே அழுதுகிட்டுப் போகுதுக அஜய்யும் ரூப்பும். வாசல் படியில ஒரு இன்ஸ்பெக்டரு பையைப் புடிங்கிட்டாரு.

"கொடுங்க சோதிக்கணும்" காச்சு மூச்சுன்னு கத்திட்டான் முத்துமணி.

"இது நல்லதில்ல சார். பிஞ்சு மனசுல நஞ்சு ஊத்திறீக பிள்ளைகளக் கொடுமைப்படுத்துறதா நான் உங்க மேல வழக்குப் போடவேண்டியதிருக்கும்.

அவன் சொன்னது எதையுமே காதுல போட்டுக்கிறாமப் பைய விரிச்சுப் பத்தகங்களைப் புரட்டிப் பாத்து, டிபன் பொக்சை தொறந்து பாத்து ஒண்ணும் இல்ல போகலம்னு அனுப்பிச்சிட்டாரு இன்ஸ்பெக்டரு.

உசிருபோயி உசிரு வந்திருச்சு முத்துமணிக்கு.

பிள்ளைக வாசப்படி கடக்க "நில்லுங்க"ன்னா ஒரு பெண்போலிசு. பையப்புடுங்கனா, டிபன் பாக்சத் தொறந்தா சோத்துக்குள்ள வெரல் விட்டு ஒரு கொட கொடஞ்சு பாத்தா. அதுவரைக்கும் மூச்சுப்பேச்சில்லாமக் கெடந்த லச்சுமி பொங்கி எந்திரிச்சு வந்தா புலிமாதிரி.

"ஏ பிள்ளைகளா? ஒரு சிறுக்கி மக வெரல்விட்ட சோத்தையா திங்கப் போகிறீக? தூக்கி எறிங்க பக்கிகளா..."

ரெண்டு டிபன் பாக்சையும் ஆத்துரத்துல புடுங்கி அடிச்சா சுவத்துல. டிபன் பாக்சு வேற சோறுவேற்னு துண்டா ஒடிவிழுந்து போச்சு. விழுந்த சோத்துக்குள்ளயிருந்து வெளிய எட்டிப்பாத்துருச்சய்யா ஒரு சாவி.

டிஎஸ்பி குனிஞ்சு சாவிய எடுத்து பருக்கையை உதறிட்டுப்பாத்தா கனராபேங்க் -தேனின்னு போட்டிருக்கு அதுல.

"பொழப்புல சாம்பலடிச்சுப் போயிட்டியே ,வேலி காத்த அய்யனாரே..."போயிட்டு வந்த உசுரு மறுபடியும் போயிரச்சு முத்துமணிக்கு.

• • • • •

ஜீப்புல ஏத்துக்கொண்டுபோறாக முத்துமணிய. பெருங்கூட்டம் கூடி நிக்குது வாசல்ல. பெத்த பிள்ளைக்கு என்னாச்சோ ஏதாச்சோன்னு வயித்துல புளிகரைச்சு நிக்கிறாக கருத்தமாயியும் சிட்டம்மாவும்.

• • • • •

தேனி பேங்குல போயி நிக்குது ஜீப்பு. ஒட்டகச்சிவிங்கி தன் நாக்கைக்கொண்டு தன்காதுகளச் சுத்தம் செஞ்சுக்கிருமாம். அந்தமாதிரி நீயே தொறந்து காட்டப்பா உன் லாக்கரன்னு சொல்லிட்டாக.

திறந்துபாத்தா-

- பினாமி சொத்துப் பத்திரங்க அஞ்சாறு
- ஒரு ரிவால்வரு
- வெளிநாட்டுக்கடிகாரம் நாலு
- 96 கிராம்ல தங்கக்கட்டி ஏழு
- குவைத்து தினாரு
- அமெரிக்க டாலரு
- ஆபாச சி.டி அஞ்சு
- நம்ம ஊரு ரூவா ஒரு பதினாறு லட்சம்
- கடைசியா சுழியன் மஞ்சப்பையில வச்சிருந்த ஒருலட்சத்திச் சொச்சம்

ஒண்ணுவிடாம எடுத்து எழுதிக்கிருச்சு போலீசு. இப்ப முத்துமணி பயப்படல. நிமிந்துட்டான்; நெஞ்சக் காமிச்சுட்டான் நீட்டுன எடத்துல கையெழுத்துப் போட்டுட்டான்.

வழக்கு எண் 1/2012 13(1)e பதிவு பண்ணிருச்சு ஊழல் தடுப்புப் போலீசு.

வேல போயிருச்சு முணே மாசத்துல.

பாம்புச் சட்டை உரிஞ்சு போனா பல்லும் விஷமும் இல்லேன்னு போயிருமா? வேலைதான் போச்சு; நான் வேறவேலை காமிக்கிறேன்.

பழிவாங்கற வெறி நுரைகட்டி நிக்குது முத்துமணி ரத்தத்துல.

(தொடரும்)

# கல்வி அதிகாரிகளின் பதவி பறிப்புக்கு ஐக்கிய தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்விப் பணிப்பாளரினாலும் மற்றும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரினாலும் ஒப்பமிட்டு கிளிநொச்சி கல்வி வலய பணிப்பாளருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் ஆசிரிய ஆலோசகர்களையும் ஏனைய வளவாளர்களையம் உதவிக் கல்விப் பணிப்பாளர்களையும் பாடசாலைகளுக்குச் சென்று ஆசிரியர்களாக கடமையாற்றும்படி பணிக்கப்பட்டுள்ளனர்.

இதை அடிப்படை தொழில் உரிமை மற்றும் சுய கௌரவத்தை பாதிக்கின்ற ஒரு செயலாகக் கருதி நாம் இதனை வன்மையாக கண்டிப்பதோடு இதனை நடைமுறைப்படுத்தாது கைவிடுமாறும் கேட்டுக்கொள்கிறோம் என ஐக்கிய தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் எம்.விக்டர் தெரிவித்துள்ளார்.

அதற்கான காரணங்களாக அவர் முன்வைத்த விடயங்கள் வருமாறு,

★ கடிதத்தின் மூலம் பணிக்கப்பட்டுள்ள இவர்கள் சேவைமூப்பு அடிப்படையிலும் பரீட்சைமூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும் தெரிவு செய்யப்பட்டு நியமனக் கடிதம் வழங்கப்பட்டவர்கள்.

ஆசிரிய ஆலோசகர்கள் கல்வியியலாளர் சேவைக்குள் உள்ளீர்க்கப்பட இருக்கின்ற சந்தர்ப்பத்தில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் இவ்வாய்ப்பு இல்லாமல் போகும்.

★ பல வருடங்களாக நிர்வாக கடமைகளில் ஈடுபட்டவர்கள் வகுப்பறைச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றபோது அது மாணவர்களின் எதிர்காலக் கல்வியைப் பாதிக்கும் செயலாக அமையும்

★ இலங்கையில் ஏனைய கல்வி வலயங்களில் இல்லாத நடவடிக்கை கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் ஏன்?

★ பாடசாலை மேற்பார்வை, வழிகாட்டல் ஆலோசனை, நிர்வாக ரீதியான செயற்பாடுகள் போன்றவற்றிற்கு ஆளணி பற்றாக்குறை ஏற்படும் போன்ற காரணங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆசிரியர் பற்றாக் குறையை தீர்ப்பதற்கு வேறுபல வழிவகைகள் இருக்கின்றன. அவற்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இப்பிரச்சினைக்கு தீர்வு காணலாம் என சில பரிந்துரைகளையும் அவர் கூறியுள்ளார்.

அவையாவன,

★ பல வருடங்களாக தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றுபவர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குதல்

★ மாவட்ட ரீதியில் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்களை வழங்குதல்

★ பாடசாலைகளில் மேலதிகமாக உள்ள ஆசிரியர்களை இடமாற்றம் செய்தல் எனக் குறிப்பிட்டுள்ளார். இந்நடவடிக்கை மூலம் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யலாம் எனவும் குறிப்பிட்டார். (அ-2)

## யாழ்.பல்கலையில் பகிடிவதை

யாழ்.பல்கலைக்கழகத்தில் பகிடிவதை முற்றாக தடை செய்யப்பட்டதாக கூறப்பட்டு வந்த நிலையில் புதுமுக மாணவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முகாமைத்துவபீட புதுமுக மாணவர்களுக்கான பதிவு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதற்காக நேற்று கிளிநொச்சியில் இருந்து சில புதுமுக மாணவர்கள் யாழ். பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்திருந்தனர்.

இந்நிலையிலேயே சம்பவதினம் பிற்பகல் 3 மணியளவில் பல்கலைக்கழகத்திற்கு முன்னால் உள்ள குமாரசாமி வீதியில் வைத்து முகாமைத்துவ பீட முதலாம் வருட மாணவர்களால் புதுமுக மாணவர்கள் தாக்கப்பட்டனர்.

இச்சம்பவத்தை அறிந்த யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவபீட சிரேஷ்ட மாணவர்கள் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து அம்மாணவர்களை பாதுகாப்பாக மீட்டு வீட்டிற்கு அனுப்பி வைத்துள்ளனர்.

முகாமைத்துவ பீட முதலாம் வருட மாணவர்களுக்கான பகிடிவதை முற்றாக நீக்கப்பட்டிருந்த நிலையிலேயே இச்சம்பவம் இடம் பெற்றது வருந்தத்தக்க விடயமாகும்.(அ-8-3)

# வலம்புரி செய்தியாளர் மீதான தாக்குதல் ஊடக ஒடுக்குமுறைக்கு எடுத்துக்காட்டு

## ஜனநாயக மக்கள் முன்னணி கண்டனம்

(யாழ்ப்பாணம்)

ஊடகவியலாளர் மீதான தாக்குதலுக்கு ஜனநாயக மக்கள் முன்னணி கண்டனம். யாழிலிருந்து வெளிவரும் வலம்புரி பத்திரிகையின் அலுவலக செய்தியாளர் உதயராசாளின் தாக்கப்பட்டமைக்கு ஜனநாயக மக்கள் முன்னணி கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடக பேச்சாளரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான சி.பாஸ்கரா கருத்து வெளியிடுகையில்,

இலங்கையின் ஊடகத்துறை சார்ந்தவர்கள் தாக்கப்படுவது இன்று நேற்றல்ல அதிலும் வடக்கு ஊடகங்கள் மீதான தாக்குதல்கள் அதிக முனைப்பாகவே அண்மைக்காலங்களில் இருந்து வருகின்றன.

இத்தகைய அடக்குமுறை தாக்குதல்களின் தொடர்ச்சியாகவே வலம்புரி அலுவலக செய்தியாள்ர் தாக்கப்பட்டுள்ளார்.

இவர் மீதான தாக்குதல் சம்பவம் இரண்டாவதாகும். ஏற்கனவே யாழ்.பல்கலைக்கழக ஆர்ப்பாட்டத்தின் போது படையினரால் இவர் மூர்க்கத்தனமாக தாக்கப்பட்டிருந்தார்.

தாம் ஒரு ஊடகவியலாளர் என்பதை அடையாளப்படுத்தியும் இவர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் வடக்கின் ஊடக சுதந்திரம் மிகவும் ஒடுக்கப்பட்ட ,ஒடுக்கப்படுகின்ற நிலையையே காட்டுகிறது.

இலங்கை ஜனநாயக நாடு. வடக்கு மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன என்று அரசு கூறிவருகின்ற நிலையில் ஊடகங்கள் மீதான தாக்குதல் ஜனநாயகம் படுகுழியில் தள்ளப்பட்டு இருப்பதையே காட்டுகின்றது.

இராணுவ ஆக்கிரமிப்புக்கள், ஜனநாயக உரிமைகள் மீறல்கள் என்பவற்றை உலகிற்கு எடுத்துச் சொல்லும் ஊடகங்கள், ஊடகவியலாளர் தாக்கப்படுவது வன்மையாக கண்டிக்கத்தக்கதும் வருத்தத்திற்குரிய விடயமும் ஆகும் என அவர் தெரிவித்துள்ளார்.(அ-8-3)

# பொதுநலவாய மாநாடு நடத்துவது குறித்து பரிசீலனை செய்யவேண்டும்

## த கார்டியன் ஊடகம்

(கொழும்பு)

இலங்கையில் தமது மாநாட்டை நடத்துவது குறித்து பொதுநலவாய நாடுகள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று த கார்டியன் ஊடகம் தெரிவித்துள்ளது.

இந்த பத்திரிகை இன்று வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பொதுநலவாய நாடுகள் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டதில் இருந்த இதன் சிறப்பான செயற்பாடுகளுக்கான நன்மதிப்பை பெற்றுள்ளது.

குறிப்பாக தென்னாபிரிக்காவில் இடம்பெற்ற இனப்பிரச்சினை, நைஜீரியாவில் இடம்பெற்ற நீதிக் கொலைகள், சிம்பாப்வேயின் சர்வாதிகாரம் போன்ற விடயங்களில் பொதுநலவாய நாடுகள் அமைப்பு சிறப்பாக செயற்பட்டது.

இந்த நிலையில் தற்போது கொழும்பில் அதன் மாநாட்டை நடத்த உத்தேசித்துள்ளமை அதன் நற்பெயரை களங்கப்படுத்துவதாக அமையும் என்று கார்டியன் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிலையில் அது தொடர்பில் பொது நலவாய நாடுகள் அமைப்பு மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (அ-2)

# சைவசித்தாந்த வகுப்புக்கள் ஜூன்மாதம் ஆரம்பமாகும்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடாந்த நடத்தப்படும் சைவ சித்தாந்த 10 நாள் வகுப்புக்கள் எதிர்வரும் ஜூன்மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில் இவ்வகுப்பில் கலந்து கொள்ளவிரும்புபவர்கள் தமது பெயர்களை பதிவு செய்து கொள்ளுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் தெரிவித்துள்ளார்.

தமிழ் நாட்டை சேர்ந்த சிந்தாந்த அறிஞர்களின் வழிப்படுத்தலில் இடம்பெறும் இவ்வகுப்புகளில் சைவசிந்தாந்த அடிப்படை உண்மைகளை அறிந்து கொள்ள விரும்பும் பெரியோர், ஆசிரியர்கள் மாணவர்கள் இவ்வகுப்புகளில் கலந்து கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இதில் கலந்து கொள்ள விரும்புவோர் தமது பெயர், முகவரி போன்ற விபரங்களை பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இல. 248 1/1, காலி வீதி; கொழும்பு- 4 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# நல்லிணக்க பணிகளை இலங்கை அரசாங்கம் ஆரம்பிக்க வேண்டும்

## பிளேக் வலியுறுத்து-விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் நல்லிணக்கம் தொடர்பான பணிகளை ஆரம்பிக்க வேண்டும் என்று அமெரிக்காவின் கொழும்புக்கான முன்னாள் தூதுவர் றொபேட் ஓ பிளேக் வலியுறுத்தியிருந்தார் .

2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த பின்னர் அவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து இதனை வலியுறுத்தியதாக விக்கிலீக்ஸ் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் முன்னர் உள்ள அரசாங்கங்களை விட சிறப்பாக செயற்பட்டு விடுதலைப்புலிகளிடம் இருந்து நாட்டை மீட்டுள்ளது.

இந்நிலையில் அரசாங்கம் நல்லிணக்கம் தொடர்பான பணிகளை ஆரம்பிக்க வேண்டும் என்று அமெரிக்காவின் கொழும்புக்கான முன்னாள் தூதுவர் றொபேட் ஓ பிளேக் வலியுறுத்தியிருந்தார்.

2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த பின்னர் அவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து இதனை வலியுறுத்தியதாக விக்கிலீக்ஸ் குறிப்பிட்டுள்ளது.

இதன்போது மனித உரிமைகள் மற்றும் இடம்பெயர்ந்தோரை மீண்டும் சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தல் மற்றும் தமிழர்களுக்கான அதிகாரப் பரவாலாக்கத்துடனான அரசியல் தீர்வு என்பவற்றை இலங்கை முன்னெடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதுவே பயங்கரவாதத்தை தோற்கடித்த தன் நன்மையை நாட்டுக்கு பெற்றுக் கொடுக்கும் என்றும் பிளேக் சுட்டிக்காட்டியதாக விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது.

இதன்போது பதிலளித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கு நாடுகள் சில தம்மை பணிய வைக்க முயற்சிப்பதாக குற்றம் சுமத்தினார்.

எனினும் 13 பிளஸ் என்ற அடிப்படையில் மாகாணங்களுக்கு அதிகாரத்தை வழங்கி அமெரிக்க செனட் சபையை போன்ற அமைப்பை ஏற்படுத்தப் போவதாகவும் அவர் உறுதியளித்ததாக விக்கிலீக்ஸில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# வானொலியில் நேரடி அஞ்சல்

சரித்திர பிரசித்தி பெற்ற நகுலேஸ்வரத்தில் (கீரிமலை சிவன் கோவில்) இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள மகா சிவராத்திரி விழாவையொட்டிய நான்கு சாமப் பூசை வழிபாடுகள் மற்றும் அங்கு நடை பெறவுள்ள சமய நிகழ்வுகள் யாவும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன யாழ்.எவ்.எம். அலைவரிசை 90.1 ஊடாக நேரடியாக அஞ்சல் செய்யப்படவுள்ளது. இந்நேரடி அஞ்சல் நேர்முக வர்ணனையை ஆசிரியர் மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் தொகுத்து வழங்கவுள்ளார். (அ)



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆரம்பக்கல்வி முகிழ் நிலை ஆசிரியர்களினால் சுற்றாடல் சார் செயற்பாடு தொடர்பான கண்காட்சி அண்மையில் நடத்தப்பட்டது. இக்கண்காட்சியினை மேற்படி கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் ஆரம்பித்து வைத்து பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.

# ஊர்காவற்றுறை பி.செ.பிரிவில் கட்டுரை, பட்டிமன்ற போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பட்டிமன்றப் போட்டி மற்றும் கட்டுரைப்போட்டி என்பன இடம் பெறவுள்ளதாக ஊர்காவற்றுறை பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

மேற்படி போட்டிகள் யாவும் தீவக வடக்கு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பாடசாலை மட்டத்திலும் பிரதேச செயலக பிரிவு மட்டத்திலும் நடத்தப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் பிரகாரம் க.பொ.த. உயர்தரத்தில்கல்விபயிலும்மாணவர்களுக்கு பெண்கள் பாதுகாப்பு, பெண்ணை வலுவூட்டல், பெண்ணிற்குரிய சமகாலப் பிரச்சினையைக் குறைத்தல் ஆகிய தலைப்பில் அமையப் பெறவுள்ளன.

பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் நடத்தப்படும் குறித்த போட்டியில் 18 வயதிற்குட்பட்ட இருபாலாரும் பங்கேற்கலாம். 450 தொடக்கம் 500 இற்குட்பட்டதாய் சொற்கள் அமைதல் வேண்டும்.

இதன் தலைப்புகளாக குடும்பத்தை பாதுகாப்பவளை மேம்படுத்துவோம், பெண்கள் மீது ஏற்படும் வன் முறைகளைக் குறைப்பதில் எமது சமூகத்தின் பங்கு, பெண்களை வலுப்படுத்தலில் குடும்பம் மற்றும் சமூகத்தின் பொறுப்பு என அமையப் பெறவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# காணிப்பயன்பாட்டு குழுவில் தவிசாளர்கள் புறக்கணிப்பு

(பூநகரி)

மாவட்ட காணிப்பயன்பாட்டு குழுவில் ஏன் பிரதேசசபை தலைவர்களை இணைக்கவில்லை என கிளிநொச்சி மாவட்ட பிரதேச சபை ...ன் பூநகரி மற்றும் பச்சிலைப்பள்ளி தவிசாளர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் சட்டதிருத்தங்களுக்கு நிலைப் பயன்பாடு தொடர்பாக விளக்கமளிக்கும் நிகழ்வு கடந்த 6 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இதில் நிலப்பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி பி.எம்.சாந்தினி பெர்னாண்டோ கலந்து கொண்ட நிகழ்விலேயே மேற்படி கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. நிலப்பயன்பாட்டுக் குழுவில் பிரதேச செயலர்கள், காணி ஆணையாளர், வன பரிபாலன ...ப உயர் அதிகாரிகள் , நீர்ப்பா...ன திணைக்களப் பணிப்பாளர், பொறியியலாளர்கள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், தெங்குச் சபை பணிப்பாளர் அங்கத்துவம் வகிப்பார் என விளக்கமளிக்கப்பட்டது. இதன்போது கருத்து வெளியிட்ட தவிசாளர்கள் பிரதேசம் பற்றிய அறிவு பிரதேச சபைகளின் தவிசாளர், உப தவிசாளர், உறுப்பினர்களுக்குநன்கு தெரிவித்திருக்கும் இவ்வாறான தவிர்ப்பனவு வேண்டும் என்றே நிகழ்கின்றது.

இதனை உயர் அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டுமாறு நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளை சரியான முறையில் செயற்படுத்தும் படியும் தவிசாளர்கள் கேட்டுக் கொள்கின்றனர்.

பச்சிலைப் பள்ளி தவிசாளர் அன்ரனியும் அங்கத்துவம் பெறாத நாம் இங்கு வருவதில் பயன் என்ன இருக்கின்றது என்றார். உயர் மட்டத்திற்கு தாம் இவ்விடயம் பற்றி எடுத்துக் கூறுவதாக பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார். (அ-2)

# வட்டிக்கு பணம் வழங்கிய நபருக்கு தர்ம அடி வீழ்ந்தது

வட்டிக்குப் பணம் வழங்கியவர் அடிவாங்கிய சம்பவம் ஒன்று கொடிகாமம் கச்சாய் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, புனர்வாழ்வு பெற்ற நபர் ஒருவர் மேற்படி நபரிடம் ஒரு தொகைப் பணத்தினை வட்டிக்குப் பெற்றுள்ளார்.

இந்நிலையில் பணத்தினை பெற்றுக் கொண்டவர் பணத் தினை திரும்பக் கொடுத்திருந்த போதும் அதற்கான வட்டியினை சிறிது காலத்தின் பின் தருவதாக கூறினார்.

இந்நிலையில் கடந்த 6 ஆம் திகதி நள்ளிரவு 10.30 மணியளவில் பணம் கொடுத்தவர் சிறிய ரகவடி வாகனத்தில் பணம் பெற்றவரின் பிரதேசத்திற்கு சென்று அவரை வலுக்கட்டாயமாக தனது வாகனத்தில் ஏற்றியுள்ளார்.

இந்நிலையில் இவற்றை அவதானித்த இளைஞன் ஒருவன் ஆட்கடத்தல் இடம்பெறுகிறது என நினைத்து ஏனைய ஊர்வாசிகளையும் அழைத்து வட்டிக்குப் பணம் கொடுத்தவரை சாரமாரியாக தாக்கியதுடன் அவருடைய வாகனமும் அடித்து உடைக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக கொடிகாமப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய அனைவரையும் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-3-85)

# இந்து ஒளி சஞ்சிகை வெளியீடு இன்று

(கீரிமலை)

அகில இலங்கை இந்துமா மன்றத்தின் காலாண்டு இதழான இந்து ஒளி என்னும் சஞ்சிகையின் மகாசிவராத்திரி சிறப்பு இதழ் இன்று ஞாயிற்றுக்கிழமை சிவராத்திரி தினத்தன்று நாட்டின் பல பாகங்களிலும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளதாக அதன் செயலாளர் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கீரிமலைநகுலேஸ்வரப் பெருமானின் அருளுடன் கீரி மலை சிவபூமி மடத்தில் வணக்கத்திற்குரிய ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளால் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. (அ)




★ 1629-லண்டனின் முதலாம் சார்ள்ஸ் நாடாளுமன்றத்தைக் கலைத்தான். அடுத்த பதினொரு ஆண்டுகளுக்கு நாடாளுமன்றம் இயங்கவில்லை.

★ 1735-ரஷ்யாவின் முதலாம் பவுல் மன்னனுக்கும் ஈரானின் நாதிர் ஷாவுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி ரஷ்யப் படைகள் அசர்பைஜானின் பக்கூ நகரில் இருந்து வெளியேறினர்.

★ 1801-பிரித்தானியாவில் முதலாவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இடம்பெற்றது.

★ 1804-லூசியானா அதிகாரபூர்வமாக பிரான்சிடம் இருந்து ஐக்கிய அமெரிக்காவுக்குக் கையளிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

★ 1814-பிரான்சில் லாவோன் என்ற இடத்தில் நெப்போலியன் பொனபார்ட்டின் படைகள் தோற்கடிக்கப்பட்டன.

★ 1876-அலெக்சாண்டர் கிரகம் பெல் உலகின் முதல் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டார்.

★ 1893-ஐவரி கோஸ்ட் பிரெஞ்சுக் குடியேற்ற நாடாகியது.

★ 1902- போவர் போர்: தென்னாபிரிக்காவின் போவர்கள் பிரித்தானியப் படைகளுடனான கடைசிச் சமரில் வெற்றி பெற்றனர். 200 பிரித்தானியப் படையினர்கள் சிறைப் பிடிக்கப்பட்டனர்.

★ 1902-திரைப்படக் கருவியை தோமஸ் எடிசன் கண்டுபிடிக்கவில்லை என அமெரிக்க நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

★ 1902-துருக்கியின் டோச்சாங்கிரி என்ற நகர் நிலநடுக்கத்தினால் முற்றாக அழிந்தது.

★ 1911-இலங்கையில் ஐந்தாவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டதில் மொத்தத் தொகையான 4 இலட்சத்து 92 ஆயிரத்து 973 இல் யாழ்ப்பாணத்தில் 40 ஆயிரத்து 441 பேர் பதிவாகினர்.

★ 1922- கிளர்ச்சியைத் தூண்டினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மகாத்மா காந்தி ஆறாண்டு கால சிறைத்தண்டனை பெற்றார். ஆனாலும் இரண்டாண்டுகளில் சுகவீனம் காரணமாக விடுதலையானார்.

★ 1952-கியூபாவில் ஃபுல்ஜென்சியோ பட்டீஸ்டா தலைமையில் புரட்சி வெற்றி பெற்றது.

★ 1959-திபெத்தில் பத்தாண்டு கால சீன ஆக்கிரமிப்பை எதிர்த்து லாசா நகரில் நடத்தப்பட்ட போராட்டம் தோல்வியில் முடிந்தது.

★ 1977-யுரேனஸ் கோளைச் சுற்றி வளையங்களை வானியலாளர்கள் கண்டுபிடித்தனர்.

★ 1982-கோள்கள் அனைத்தும் சூரியனின் ஒரு பக்கத்தில் வரிசையில் காணப்பட்டன.

★ 1990-ஹெயிட்டியில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் புரொஸ்பர் அவ்ரில் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.

### பிறப்புக்கள்

1933-பழ.நெடுமாறன், தமிழ்நாட்டு அரசியல்வாதி, தமிழ்த்தேசிய ஆதரவாளர்

1933-பாவலரேறு பெருஞ்சித்திரனார், தமிழறிஞர் (இ.1995)

1957- ஒசாமா பின்லேடன், இஸ்லாமியப் போராளி

### இறப்புக்கள்

1966-ஃபிரிட்ஸ் சேர்னிக்கே, நோபல் பரிசு பெற்றவர் (பி.1888)

2001-சி.ஜே.எலியேசர், பேராசிரியர், பிரபல கணிதவியலாளர், தமிழ் அபிமானி (பி.1918)

2006-சி.புஷ்பராஜா, ஈழத்தில் மாணவர், இளைஞர் பேரவைகளில் முக்கிய பங்காற்றிய போராளி

### பேராசிரியர் சி.ஜே.எலியேசர்



பேராசிரியர் சி.ஜே.எலியேசர் 1918 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதி பிறந்தார். பிரபல கணிதவியலாளரும் தமிழ் ஆர்வலரும் ஆவார்.

1948 இல் இவரால் வெளியிடப்பட்ட எலியேசர் தேற்றம் பௌதிகவியலில் இன்றும் பயன்படுத்தப்படுகின்றது.

எலியேசர் தனது ஆரம்பக் கல்வியை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் உயர் கல்வியை கொழும்பு பல்கலைக்கழகக் கல்லூரிலும் பெற்று, பின்னர் லண்டன் கேம் பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கணிதத்தில் கலாநிதி (PhD) பட்டம் பெற்றார். பின்னர் அங்கேயே 1949 இல் புகழ் பெற்ற அறிவியல் அறிஞர் போல்டிராக் அவர்களின் வழிகாட்டலில் டாக்டர் (DSc) பட்டமும் பெற்றார்.

### பேராசிரியராகப் பணி

கொழும்பு திரும்பிய இவர் பல்கலைக்கழகத்தில் கணிதத்துறையில் பேராசிரியராகவும் அறிவியல் பீடத்தின் (துறையின்) தலைவராகவும் கடமையாற்றினார். தொடர்ந்து ஜெனீவா, வியன்னா, மும்பை நகரங்களில் ஐக்கிய நாடுகளின் சார்பாக அமைதிக்காக அணுசக்தி என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றவும் அழைக்கப்பட்டார். 1959 இல் மலேயா பல்கலைக்கழகத்தில் கணிதப் பேராசிரியரானார். கோலாலம்பூரில் 1966 ஆம் ஆண்டில் நடைபெற்ற முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் சுழியம் என்ற தலைப்பில் ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றை படைத்தார். 1968 இல் அவுஸ்திரேலியா மெல்பேர்னிற்குக் குடியேறி அங்கே அவர் பௌதிகவியல் பீடத்தின் தலைவராகவும் பல்கலைக் கழகத்தின் மேலதிக துணைவேந்தராகவும் இருந்தார்.

அவுஸ்திரேலியாவில் இலங்கைத் தமிழ்ச் சங்கத்தின் தொடக்கத் தலைவராக பதவியேற்று இங்கு குடியேறும் தமிழர்களுக்கு ஆணிவேராக உழைத்தது மட்டுமல்லாமல் 1983 ஆம் ஆண்டில் இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலைக்கு உட்படுத்தப்பட்ட போது முழு மூச்சாக அம்மக்களின் விடிவுக்காக உழைத்தவரும் ஆவார். இவருக்கு அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழ் மக்களுக்காகவும் கணிதத்துறைக்காகவும் ஆற்றிய சேவையைப் பாராட்டி அவுஸ்திரேலிய அரசின் அதி உயர் Order of Australia விருது 1996 இல் வழங்கப்பட்டது.

# ஈழத்தமிழ் பெண்களின் இன்னலும் வலிமையும்

> **ஈழத்துப் பெண்களின் கவிதைப் போக்குகளும் இலக்கியப் போக்குகளும் பண்டைய இலக்கிய மரபிலிருந்து முழுமையாக, பார்வைநிலையிலும் குரல் எழு நிலையிலும் மாறுபட்ட எழுச்சியைக் கொண்டிருந்தன. தேசிய விடுதலைப் போராட்ட காலத்துக்கு முன்பதாக பெரும்பாலும் இலக்கியம் ஆண்களால் படைக்கப்பட்டு ஆண்களுக்கானதாக ஆண் ஆதிக்கத்தில் இருந்தபொழுது பெண்களுக்கான குரல்களையும் ஆண்களே படைத்துக் கொண்டிருந்தனர். ஆனால், ஈழப்பெண்கள் இந்த மரபையும் பாரம்பரியத்தையும் தகர்த்து பெண் அடையாளத்தை இலக்கியத்தில் நிறுவினார்கள்**

கடந்த ஆறாம் திகதி (06.03.2013) அன்று கொழும்பிலும் வவுனியாவிலும் காணாமல் போனவர்களை மீட்டுத் தரக்கோரி ஆர்ப்பாட்டப்பேரணியானது, காணாமற்போனவர்களது உறவுகளால் நிகழ்த்தப்பட்டது.

ஆயினும், வடக்கிலிருந்து கொழும்புக்குச் செல்லவிருந்த காணமற்போனவர்களின் உறவுகள் வவுனியாவில் இராணுவத்தினரால் தடுத்துநிறுத்தப்பட்டதுடன் பல்வேறு துன்பங்களையும் அனுபவிக்க நேர்ந்தது.

அரச பாதுகாப்புப்படையினரின் இத்தகைய செயற்பாடானது, அம்மக்கள் மீதான அப்பட்டமான உரிமைமீறல்; ஜனநாயக மீறல் ஆகும். அதாவது, அவர்கள் தமது உரிமைகளுக்காக குரல்கொடுக்கும், விதத்தில் ஜனநாயக ரீதியான போராட்டத்திற்காக அணிதிரள்கின்ற உரிமையை, மறுத்த செயல்.

08.03.2013- உழைக்கும் பெண்கள் நாள், எழுச்சிநிகழ்வுகள் வடக்கில் பெரியள்வில் இடம்பெறவில்லை. அவர்கள் வீதிக்குவந்து, தமக்கு நிகழும் கொடுமைகளுக்கெதிராக குரல்கொடுக்கும் சந்தர்ப்பங்கள் முன்போல் எழுச்சியாக இடம்பெறவில்லை. கிராம மட்டங்களில் அன்றைய நாள் உழைக்கும் மகளிர் நாள் என்பதற்கான எந்த அடையாளமும் இருக்கவில்லை. வவுனியாநகரிலும் யாழ்நகரிலும் மட்டும் படித்தமட்டங்களிடையே ஒருசில மகளிர் நிகழ்வுகள் நடந்தேறியுள்ளன. மக்கள் குரல், இராணுவ மேலாதிக்கத்தால் அடக்கி ஒடுக்கப்பட்டுவருவதே சகல மட்டங்களிலும் உள்ள பெண்களும் அந்தநாளை அனுசரிப்பதற்கு தடையான காரணமாக அமைந்திருக்கமுடியும்.



கடந்த த்சாப்பதங்களில் உலகப்பெண்கள் எழுச்சி தினத்திற்கு ஈழத்துப்பெண்கள் மிகவும் உன்னதமான பங்காற்றியிருக்கிறார்கள். ஈழப்பெண்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்துள்ள இன்றைய நிலையில் ஈழப்பெண்களின் வரலாறு மற்றும் பங்களிப்பு பற்றிய விடயங்களை மீளப் பார்க்க வேண்டியது அவசியமாகும்.

கடந்த முன்று அல்லது நாலு தசாப்தங்களுக்கு முன்னதாக பன்னாட்டுச் சித்திரங்களாகவும் சமூக அடிமைகளாகவும் பார்க்கப்பட்ட தமிழ்ப்பெண்கள் பிற்காலத்தில் நவீன உலகத்தில் ஆளுமை மிக்க பெண்களாக உருவெடுத்திருக்கிறார்கள். அதிலும் நவீன உலகின் பொருளாதார அரசியல் மோதல்களிலும் உரிமைகளுக்கான போர்க்களங்களிலும் ஈழத்துப் பெண்கள் வகிக்கும் இடமானது ஈழத்துப்பெண்கணை பெரும் கவனத்திற்கும் அர்த்தத்திற்கும் உள்ளாக்கியிருக்கிறது.

ஈழத்து மக்களின் வாழ்க்கைப் போராட்டத்தில் ஈழப்பெண்கள் சரிநிகரான இடத்தை வகிக்றார்கள். பெண் என்ற அடையாளத்தினால் எழும் அடையாளச் சிக்கல்களின் அர்த்தங்கள் மாறிப்போயிருக்கிறது. ஈழத்துப் பெண்கள், இலக்கியத்துறையிலும் போராட்டக் களத்திலும் மனித உரிமைக்காகக் குரல் எழுப்பிய எழுச்சிகளும் தமிழ் மக்களின் வரலாற்றில் தனித்துவமான இடத்தை கொண்டிருக்கிறாழ்கள். ஈழத்தில் கடந்த தசாப்தங்கள், சமூக அமைப்பில் சாதி, சமய மரபுச் சடங்குகளுக்குள் முடங்கிக் கிடந்த பெண்களை அவற்றிலிருந்து பெரியளவில் மீட்டெடுத்திருந்தது.

ஈழத்து மண்ணில் ஈழமக்களின் போராட்டங்களில் இந்தப் பெண்கள் உழைத்த தருணங்களும் அதற்காக அவர்கள் கொல்லப்பட்ட தருணங்களும் மனித உரிமைகளுக்காக வாழ்ந்த தருணங்களும் அதிகமானவை. ஈழப்பெண்கவிஞர் கலா எழுதிய **கோணேஸ்வரிகள்** என்ற கவிதை, மட்டக்களப்பில், வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டு யோனியில் குண்டுவைத்து சிதறடிக்கப்பட்டு கொல்லப்பட்ட கோணேஸ்வரி என்ற குழந்தைகளையுடைய ஒருதாய் பற்றிய கவிதை அது. அக்கவிதையில் கவிஞர் கலா, இலங்கை இராணுவத்தின் ஆணாதிக்கத்தையும் இனவெறியையும் ஆவேசத்துடன் எதிர்த்திருக்கிறார்.

கோணேஸ்வரி, சாரதாம்பாள், கிருஷாந்தி, தர்சினி, இசைப்பிரியா என்று பல பெண்கள் இராணுவ வலயங்களில் இப்படி வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டவர்கள். பேசாலை, அல்லப்பிட்டி போன்ற பல இடங்களில் மக்கள் கொலை செய்யப்பட்டபொழுது பெண்கள் இறப்பதற்கு முன்பும் இறந்த பின்பும் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

1996களில் செம்மணிப் புதைகுழியில் பல பெண்கள் இப்படி கொன்று புதைக்கப்பட்டார்கள். வன்னி யுத்தத்தில் பல பெண்கள் சிறுமிகள் போராளிப் பெண்கள் இப்படி வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டு கொன்றொழிக்கப்பட்டார்கள். ஈழப்பெண்கள் இலங்கை அரசாங்கத்தால், அடக்கியொடுக்கப்படும், கொன்றொழிக்கப்படும் இலக்குகளாக மாறியிருந்தனர்.

பண்டையதமிழ் இலக்கியங்களிலும் வாழ்க்கை முறைகளிலும் பெண்குறித்து மிகவும் பின்தங்கிய கருத்துக்களை விதைத்த ஆணாதிக்க சமுதாயத்தில் ஈழப்பெண்கள் தமிழ் வாழ்க்கைக்கும் இலக்கியத்திற்கும் புதிய அடையாளத்தை கொடுத்திருந்தார்கள். ஈழப்பெண்கள் தேசியவிடுதலைப் போராட்டக்களத்தில் சாதனை நிகழ்த்தியிருந்தார்கள்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். சோபா உட்பட தமிழீழ விடுதலைப்புலிகளின் அங்கையர்க் கன்னி, சோதியா, விதுசா,நளாயினி,துர்க்கா உட்பட பல்லாயிரம் பெண்கள் அக்காலகட்டத்தில் ஆளுமைமிக்க பெண்களாயிருந்தனர்.

பெண்பற்றிய தவறான கருத்து வளர்க்கப்பட்ட தமிழ் சமுதாயத்தில் இப்படியான பெண்களின் எழுச்சிநிலைகள் புதிய அர்த்தத்தையும் நம்பிக்கையையும் வலிமையுடன் சமூகத்திற்கு ஊட்டியிருந்தன. தமிழ் இலக்கியத்தில் கவிதையில் ஈழப்பெண்கள் பெரும் அடையாளத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். தமிழகம் தமிழ் இலக்கியத்தில் முன்னோடி என்ற பொழுதும் ஈழப்பெண்களின் கவிதைகளின் எழுச்சியே முழுத் தமிழுக்கும் நவீன தமிழ்ப்பெண் கவிதைகள் பற்றிய அர்த்தத்தை மெய்ப்பித்திருக்கின்றன.

சங்கரி, ஔவை, சிவரமணி, செல்வி, சன்மார்க்கா, மைத்திரி என்ற தொடங்கும் ஈழப் பெண் கவிதை வரலாறு தமிழகத்து பெண்கவிதைகளில் கடும் தாக்கத்தை செலுத்தியிருந்தன. ஈழப்பெண் கவிதைகள் போர்க்களத்தின் உள்ளிருந்தும் வெளியிருந்தும் வலிய குரல்களாக கிளம்பின. கஸ்தூரி,வானதி,பாரதிபோன்ற போராளிப் பெண் கவிஞர்கள்போர்க்கள அனுபவங்களை வீரச் செறிவுடன் மனிதாபிமானக் குரல்களுடன் எழுதினார்கள்.

செல்வி, சிவரமணி போன்ற பெண் கவிஞர்கள் போர்க்களத்திற்கு வெளியில் இருந்து போர்வாழ்வையும் மனிதாபி மானச் சிதைவுகளையும் மிக வலிய குரல்களில் எழுதினார்கள். மனிதாபிமானமற்ற ஈழ நிலத்தைக் கண்டு சிவரமணி தன்னை தானே எரித்து தற்கொலை செய்து கொண்டார். யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவியான செல்வி மனிதாபிமானத்திற்காக கேள்வி எழுப்பியதனால் கொல்லப் பட்டவர். அதேபோல் ஒரு வைத்திய கலாநிதியாக யாழ் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றிய போதும் 80களின் பிற்பகுதியில் வடக்கில் தோன்றிய அனைத்து அராஜகங்களுக்கும் எதிரான தனது குரலை உயர்த்திய ரஜனி திரணகமவும் கொல்லப்பட்டார். தமிழ்க்கவி,தமிழவள், வெற்றிச்செல்வி, உலகமங்கை, ஆதிலட்சுமி போன்றவர்களும் ஈழத்தின் முக்கியமான பெண் ஆளுமைகளாகத் திகழ்ந்தவர்கள்.

ஈழத்துப் பெண்களின் கவிதைப் போக்குகளும் இலக்கியப் போக்குகளும் பண்டைய இலக்கிய மரபிலிருந்து முழுமையாக, பார்வை நிலையிலும் குரல் எழு நிலையிலும் மாறுபட்ட எழுச்சியைக் கொண்டிருந்தன. தேசிய விடுதலைப் போராட்ட காலத்துக்கு முன்பதாக பெரும்பாலும் இலக்கியம் ஆண்களால் படைக்கப்பட்டு ஆண்களுக்கானதாக ஆண் ஆதிக்கத்தில் இருந்த பொழுது பெண்களுக்கான குரல்களையும் ஆண்களே படைத்துக் கொண்டிருந்தனர். ஆனால், ஈழப் பெண்கள் இந்தமரபையும் பாரம்பரியத்தையும் தகர்த்து பெண் அடையாளத்தை இலக்கியத்தில் நிறுவினார்கள். பின்னைய காலத்தில் தமிழ்நதி, அனார், பஹீமாஜஹான், பிரதீபா, மாதுமை, பானுபாரதி, கற்பகம், யசோதரா, ஆழியாள், றஞ்சனி, நிவேதா,வினோதினி, மலரா, தாட்சாயின் போன்ற பல பெண்கள் எழுத்துலகில் முக்கிய பதிவுகளை நிகழ்த்தினார்கள். இவர்களின் எழுத்துக்களும் பார்வைகளும் பெண் உடல் மொழி, பெண் மனவெளிகள், பாலியல் உலகம், பாலியல் விடுதலை, பெண்பற்றிய ஆணின் அதீதங்கள், அடக்குமுறை வாழ்வு போன்ற பல விடயங்களைக் குறித்து தெளிவாக உரத்துப் பேசியிருக்கின்றன.

போருக்குப் பிந்திய இன்றைய ஈழத்து சூழலில் பெண்கள் மீண்டும் கடுமையாக அடக்கப்படுகிற, ஒடுக்கப்படுகிற,பாலியல் பொருட்களாக பாவிக்கப்படுகிற நிலைகள் அதிகரித்துள்ளன. பாலியல் துன்புறுத்தல்கள் தீவிரமடைந்துள்ளன. குறிப்பாக சிறுமிகள் மீது பாலியல் பலாத்காரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. கடந்த ஆண்டுகளில் யுதக் குழுவைச் சேர்ந்த ஒருவர், சிறுமியொருத்தியை வன்புணர்ந்து கொலை செய்ததும் அண்மையில் பள்ளி அதிபர் ஒருவர் சிறுமியை துஷ்பிரயோகம் செய்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

முழு இராணுவ வலயமாக்கப்பட்டு, ஈழநிலத்தில் சிறுமிகள், பெண்கள் கணவரை இழந்த பெண்கள், முன்னாள் பெண் போராளிகள் என பெண்கள் சமூகம், பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ளும் நிலைமைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். பெண்நிலைச் செயற்பாடுகளும் பெண் எழுத்துக்களும் இன்று ஈழத்தல் தடைப்பட்டுள்ளன.

பல அனுபவங்களும் சாதனைகளும் கண்ட ஈழப்பெண் சூழலில் மீண்டும் ஏற்பட்டிருக்கும் இத்தகைய துயரங்கள்தான் அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றன. வடக்கு கிழக்கில் இலங்கை அரசு பெண்களுக்கு எதிரான பல நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. அவை பெண்களின் வாழ்வையும் தமிழ் சமூகத்தையும் இலக்குவைத்து மேற்கொள்ளப்படுகின்றன. ஈழத்தில் தாயாகவும் யுவதியாகவும் குழந்தையாகவும் பெண்கள் அனுபவிக்கும் இன்னல்கள் மிகவும் கொடுமையானவை.

80களில் ஏற்பட்ட தேசிய விடுதலைப் போராயி;ட எழுச்சியினைத் தொடர்ந்து ஏற்பட்ட பெண்நிலை சார்ந்த எழுச்சிகளும் முனைப்புகளும் உரையாடல்களும் நடவடிக்கைகளும்- தேச வீழ்ச்சியும் சமூக வீழ்ச்சியும் ஏற்பட்டுள்ள இன்றைய ஈழத்து பெண் சூழலில் மீண்டும் அவசியமாகின்றன என்பது சமூகத்தின் எல்லாத் தரப்பினராலும் உணரப்படவேண்டிய முக்கிய விடயமாகும்.

-ஆதிரா-

# கவிதைக் கலசம்



### இலட்சியம்

சிறுவயதுகளில்
சேற்றிலும்
சறுக்கஸ்சிலும்
சறுக்கி விளையாடினோம்...
வயது வந்தவுடன்
புரிந்து கொண்டோம்
நாம் சறுக்கி விளையாடியது
சேற்றிலும் அல்ல
சறுக்கஸ்சிலும் அல்ல
எம் எதிர்கால இலட்சியத்தில்

### இடப்பெயர்வு

வண்ணத்துப்பூச்சிகளுக்கு
அங்கு வாழ விருப்பமில்லை
அதனால்தான்
இங்கு வந்து குடியேறி
வாழ்கின்றனர்
இங்காவது அதுகளை
சுதந்திரமாக வாழ விடுங்கள்

புதுக்கையூர் ஜெயம் ஜெகன்

### கண்ணீராய் மாறிய கனவுகள்...

தூக்கம் இன்றி
துக்கம் உணர்ந்து
வெட்கம் இழந்து
வேதனைக்குள் வெந்து
வெற்றிப்படிகளை நோக்கி
சிலுவைகள் பல சுமந்தோம்
பதினான்கு வருடங்கள் பள்ளியதை
பக்குவமாய் சுவைத்தோம்
அங்கேதான் கனவுகளும்
காணத் தொடங்கினோம்
கனவுகளை நனவாக்க...!!!
பல்கலைக்கழக வாசல் தொட்டோம்
தந்தையின் வியர்வைகளிலும்
தாயின் கண்ணீர்களிலும்
பட்டங்கள் பெறச் சென்றோம்
பட்டமும் பெற்றோம்...!
பெற்று பத்து வருடம்
தந்தையின் வேர்வையையும்
தாயின் கண்ணீரையும்
கப்பரைகளிலே ஏந்தி
காப்பற் வீதியிலே
கற்றதை இட்டு
கண்ணீர் வடிக்கின்றோம்



பி.ஜதீஸ்குமார்
முல்லைத்தீவு

### அவன் அழுகிறான்

ஒரு பெண் அழுகின்றாய்
அதற்கு ஆயிரம் காரணங்கள்
ஆனால்...
ஒரு ஆண் அழுதால்
நிச்சயமாய்
ஒரு பெண்ணால்தான்
அவன் அழுவான்
இதயத்தை திருடி
இடம்மாற்றுவாள்
பின் இடறிச் செல்வாள்
தவிக்கும் அவனின்
தவிர்ப்பு அவளுக்குப் புரியாது
ஒரு பெண் அழுதாள்
அதற்கு ஆயிரம் காரணங்கள்
ஒரு ஆண் அழுகிறானா
அதிலும் திருமணமான ஆண்
அழுகிறானா
நிச்சயமாய்
அவன் மனைவியினாலேயே அழுவான்

மதீசன்
திருநெல்வேலி

### இமயம் தொட...



உன்னை உனக்கு
பிடிக்கிறதா
நீ வெற்றி கொள்வாய்
நேர்மை வழி நடக்கிறாயா
ஆரோக்கியமானவனாகிறாய்
உன் மனச்சாட்சியுடன்
பேசுகிறாயா
நீ மனிதனாகிறாய்
உண்மை உன்னில் வாழ்கிறதா
நீ மாமனிதனாகிறாய்

மாவை. நா. கஜேந்திரன்

### ஒத்திகை

எங்களுக்கென்று ஒருநாடு
கேட்டுப் போராடினோம்
இறுதிக்கணம் வரை கிடைக்கவில்லை
எத்தனையோ இழப்புக்கள்
வலிகள் சுமந்தும்
இன்னும் எம் இலட்சியத்தில்
பூரண பற்றுறுதி
உடையவர்களாகவேயிருக்கிறோம்
அதனால்தான்
எரிந்து போன எங்கள்
இலட்சியக் கனவுக்கு
இங்கிருந்தபடியே
ஒத்திகை பார்க்கத் தொடங்கி விட்டோம்
வானம் வசப்பட்டு விட்டது
மனமார நாம் நேசித்த
வளங்கொழிக்கும் எங்கள் மண்
வசப்படும் நாள் எப்போது?

குறிஞ்சிக்கவி, குப்பிளான்

# மௌனத்தின் தேடல் - 146



### தாய்மை

கன்று தனை இழந்து
மனிதனை வலிக்க
பாலகன் தாயை இழந்து பரிதவிக்க
பசியால் அவனும் துடிக்க
மென்மையான உதட்டினால்
வருடி பால் குடிக்க
பசுவே நீ ஏன் உதைக்கவில்லை
தாய்மையினை நீயும்
உணர்ந்தாயோ...

ஞா.வதனி
குருநகர்

### அழுகிறேன்

ஆறறிவு மனிதரின்
அறிவற்ற செயலால்
அநாதையான பாலகனை
அரவணைக்கும்
ஐந்தறிவு ஜீவனே!!!
உனை எண்ணி
ஆனந்தமடைகிறேன்
மானிடரை எண்ணி
மனதுள்ளே அழுகின்றேன்

ஜெ.லிஷோக்குமார்
அல்வாய்

### கருணை

ஆறறிவு படைத்திட்ட
ஜீவன்களிடம் இல்லாத
கருணை- இந்த
ஐந்தறிவு படைத்திட்ட
ஜீவனிடம் இருப்பது
இதுதான் ஜீவகாருண்யமோ?

ம.சுமதி
வதிரி

### விந்தையிலும் விந்தை

தாயை இழந்த பிள்ளை
பசுவிடம் பால் பருகுவதும்
பசு பிள்ளைக்கு பால் கொடுப்பதும்
எவ்வளவு விந்தையானது
பாலைப்பொழிந்து தரும் பாப்பா
அந்தப் பசுமிக்க நல்லதடி பாப்பா

அ. அன்ரன்
யாழ்ப்பாணம்

### தாய்மையின் தத்துவமே

பசியோடு வந்தாரை- வாசல்
படியோடு அனுப்பும்- இந்த
பாவ உலகில்
பசி கொண்ட பாலகனுக்கு
பாலூட்டும் பசுவே
இதுதான் தாய்மையின்
மகத்துவம்

ஜெ.கீர்த்தனன்
யாழ்.பல்கலைக்கழகம்

### அகிலத்தின் அன்னை நீ

தானம் என்று கேட்டாலே
தள்ளிவைக்கும் இவ்வுலகில்
ஆதரவற்ற அநாதை
பிஞ்சுகளுக்கு எல்லாம்
அன்னையாவது நீதான்

நிரோசியா
யாழ்.பல்கலைக்கழகம்

### கோமாதாவின் புதல்வன்

ஆபுத்திரன் மறுபிறவியா
சிறுவனே கோவதை கூடாதென
கோ எமது குலமாதாவென்று
காலைக்கட்டிக் கொண்டு
பால் குடிக்கின்றாய்

அபர்ணா
வட்டுக்கோட்டை

### நீயும் ஒரு தாய் தான்

உன் தாகம் தீர
தண்ணீர் இல்லையே- என
ஏங்காது
தாயில்லாமல் தவிக்கும்
தனயனுக்கு
தாகம் தீர பால்
கொடுக்கின்றாயே!
உண்மையில் நீயும்
ஒருதாய் தான்

பா.சத்யா
அல்வாய் வடக்கு

### யார் இவன்

பசிக்கு பால் குடிக்க
அன்னை இல்லையென
அறிந்த நீ
உன் பசியை போக்க
பசுவிடம் பால் கிடைக்கும் என
உனக்கு அறிவு புகட்டியது
யாரோ...?

ய.தருண்
மானிப்பாய்

### ஆதரவு

நவீனங்கள் பல நிறைந்த
இவ்வுலகில்
ஆதரவு அற்ற பல பிஞ்சு
உள்ளங்கள்- உனக்கு
ஆதரவான கரங்கள் இறைவனின்
பாதங்களை வணங்கச்
சென்றனவோ

ம.மதுசா
வாடியடி

### தெய்வம்

ஐந்தறிவோடு உணவூட்டும்
நீயோ தெய்வம்
ஆறு அறிவு
இருந்தும் குழந்தையை
நிர்க்கதியாய் வீதியில்
விட்டோரே அரக்கர்

ஜெ.கிது
அல்வாய்

### துன்பத்திற்கு மருந்து

கன்றை இழந்த பசுவும்
தாயை இழந்த பிள்ளையும்
ஒருவரை ஒருவர் இணைத்து
ஒருவருக்கு ஒருவர் உதவும் காட்சி
துன்பத்திற்கு விருந்து தரும்
மருந்து ஆகும்

திருமதி மேரி அல்போன்சா
குருநகர்

### கோமாதாவே

பிற இனத்திற்கும்
மடி சுரக்கும் உன்னை
கோமாதா என்று
அழைப்பதன் அர்த்தம்
இதுதானோ?

பா.துஷ்யந்தி
வவுனியா

### மேலானது

இளம் பாலகனே...
உன் தாயின் பாலைக்
குடிக்கவேண்டிய நீ
இப்பசுவின் பாலைக்
குடிக்கின்றாய்
உன் தாயைப் போலவே
இரக்கத்துடன்
பால்தனை சுரக்கும்
இப்பசுவானது
உன்தாயைவிட
மேலானது என
உணர்வாயாக

த.மோகனரூபன்
சுழிபுரம்

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் -147




### அன்பு வாசகர்களே !

உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகள் மற்றும் வியாசர் பதிலுக்கான கேள்விகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 15.03.2013 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

## ஐ.நா.மனித உரிமை ஆணையகத்தில்

# இலங்கை போர்க்குற்றங்கள் தொடர்பில் பசுமைத்தாயகம் அறிக்கை தாக்கல்

இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் குறித்து ஐ.நா.மனித உரிமை ஆணையகத்தில் பசுமைத்தாயகம் அமைப்பு அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பவை வருமாறு,

இலங்கையில் நடைபெற்ற யுத்தக் குற்றங்களுக்கு ஜனாதிபதி ராஜபக்ஷ மற்றும் அவரது கூட்டாளிகள் மீது போர்க்குற்ற விசாரணை நடத்த ஆணையிட வேண்டும் என்று உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

ஜெனீவாவில் நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமை ஆணையக 22 ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக போர்க்குற்ற விசாரணை நடத்தக் கோரும் தீர்மானத்தை அமெரிக்கா தாக்கல் செய்யும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் அமெரிக்காவும் கடந்த ஆண்டு தாக்கல் செய்ததன் தொடர்ச்சியான நடைமுறை தீர்மானத்தையே தாக்கல் செய்யும் எனத் தெரிகிறது.

இந்நிலையில் ஐ.நா. அமைப்பால் அதிகாரபூர்வ ஆலோசனை அமைப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ள பசுமைத்தாயகம் அறக்கட்டளை சார்பில் இலங்கை மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்தக் கோரும் அறிக்கை ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

ஐ.நாவின் அதிகாரபூர்வ ஆலோசனை அமைப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ள பசுமைத்தாயகத்தின் பிரதிநிதிகளால் ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தில் உரையாற்றவும் அறிக்கைத் தாக்கல் செய்யவும் முடியும்.

அதன்படி பசுமைத்தாயகம் தாக்கல் செய்துள்ள அறிக்கை மனித உரிமை ஆணையகத்தின் அனைத்து உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் ஐ.நா. பொதுச் செயலாளரின் சார்பில் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

பசுமைத்தாயகத்தின் அறிக்கையில் இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் குறித்தும் கடந்த ஆண்டு ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்குப் பின்னர் இலங்கையில் நடைபெற்று வரும் மனித உரிமை மீறல்கள் குறித்தும் பட்டியலிடப்பட்டிருப்பதால் இலங்கைக்கு எதிரான தீர்மானம் மீது எத்தகைய நிலைப்பாட்டை எடுக்கலாம் என்பதிலும் போர்க்குற்ற விசாரணை நடத்துவதற்கான திருத்தத்தை கொண்டு வருவதிலும் மனித உரிமை ஆணையக உறுப்பு நாடுகளிடையே இந்த அறிக்கை தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும்.

தமிழகத்தைச் சேர்ந்த தொண்டு நிறுவனமான பசுமைத்தாயகம் அதனால் முடிந்த அளவுக்கு இதை செய்துள்ளது. ஈழத்தமிழர் நலனில் அக்கறை உள்ளதாக காட்டிக் கொள்ளும் மத்திய அரசும் இதேபோன்ற தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டும் என டாக்டர் ராமதாஸ் கூறியுள்ளார். (அ-2)

## மருந்துப் பொருட்களுக்கு விரைவில் விலைக்கட்டுப்பாடு

(கொழும்பு)

மருந்துப்பொருட்களுக்கு விரைவில் விலைக் கட்டுப்பாடு கொண்டுவர உள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இதன்முதற்கட்டமாக சகல மருந்துப் பெட்டிகளிலும் மருந்தின் விலைகளை பொறிக்குமாறு பணித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வாய்மூல விடைக்காக அகிலவிராஜ் காரியவசம் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது,

ஒவ்வொரு நிறுவனமும் வெவ்வேறு விலைகளில் மருந்துவகைளை விற்பனை செய்கின்றன. இந்த நிலையில் மருந்து விலைக் கட்டுப்பாடொன்றைக் கொண்டுவர திட்டமிட்டுள்ளோம்.

முதலில் அவற்றின் விலைகளை தெளிவாக அச்சிடுமாறு உத்தரவிட்டுள்ளோம். அடுத்த கட்டமாக சகல மருந்துகளுக்கும் விலைக் கட்டுப்பாடு கொண்டுவரவுள்ளோம். இதனூடாக வர்த்தகர்கள் தமக்கு விரும்பிய விலைகளில் மருந்து விற்பது தடுக்கப்படும் என்றார். (அ-2)

# காலநிலையில் திடீர் மாற்றம்; சுழல் காற்று வீசும் அபாயம்

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளில் டொனடோ சுழல் காற்று வீசக்கூடிய நிலை இருப்பதாக வானிலை அவதான நிலையம் எச்சரித்துள்ளது.

தென்கிழக்குப் பருவப் பெயர்ச்சிக் காற்றுடன் பெய்து வரும் இடியுடன் கூடிய மழையின் காரணமாக டொனடா சுழல் காற்று குறிப்பிட்ட சிலமணி நேரங்களுக்கே நீடிக்கும் என்றும் இது பாரிய சூறாவளியாக மாற்றமடையாது என்றும் வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் இடி, மின்னல் தாக்கங்களுக்கும் இலக்காகலாம் என்பதால் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறும் மின் சாதனங்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அந்நிலையம் அறிவித்துள்ளது.

தென்கிழக்குப் பருவப் பெயர்ச்சி காற்றுக் காரணமாக வடக்கு, வடமத்திய, ஊவா ஆகிய மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் அடிக்கடி மழை பெய்யும் என்றும் நாட்டின் ஏனைய பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என்றும் வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. (அ-2)

# மும்மொழி திட்டத்திற்கு இந்திய தொ.நுட்ப உதவி

## ஒப்பந்தமும் கைச்சாத்தானது

இலங்கையில் அமுல்படுத்தப்பட்டுள்ள மும்மொழி இலங்கை எனும் தேசிய வேலைத் திட்டத்திற்கு இந்திய தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக் கொள்ள இலங்கை ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடவுள்ளது.

இந்திய தொழில்நுட்ப உதவிகளை பரிமாறிக் கொள்வதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடுவது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நாட்டின் அனைத்து பிரஜைகளும் மும்மொழி திறன் மற்றும் திறமைகளை பெற்றுக் கொடுக்கும் பொருட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் ஆலோசனைக்கமைய பத்தாண்டு தேசிய திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்கு இந்திய தொழில்நுட்ப உதவிகள், இந்திய பல்கலைக்கழகங்களின் உதவிகளை பெற்றுக் கொள்ளும் பொருட்டே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது என அமைச்சர் சுட்டிக்காட்டினார். (அ-2)

# அங்கவீனர்களுக்கான உரிமைகள் ஏந்கனவே உறுதிப்படுத்தப்பட்டுள்ளன

## ஐ.நாவில் இலங்கை அறிவிப்பு

மாற்றுவலுவுள்ளோரின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கும் அவர்களின் வேலை செய்யும் உரிமையை உறுதிப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் ஏற்கனவே எடுத்திருப்பதாக, ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தெரிவித்துள்ளது.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் 22 ஆவது கூட்டத்தொடரில் நடைபெற்ற அங்கவீனர்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்ட இலங்கைப் பிரதிநிதிகள் குழு இதனை கூறியுள்ளன.

வேலைவாய்ப்பொன்றை பெற்றுக் கொள்வதே மாற்றுவலுவுடையவர்களின் முக்கிய இலக்காக அமைந்துள்ளது. இவ்வாறானவர்களுக்கு சம உரிமை வழங்கி அவர்களுக்கு வேலைவாய்ப்புக்களை உறுதிப்படுத்த அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளது.

அனைத்து மக்களுக்கும் சம உரிமை என்பது அரசியலமைப்பின் கீழ் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்ட ஒன்று. அரசாங்கம் இதனைத் தொடர்ந்தும் முறையாக கடைப்பிடித்து வருவதாக இலங்கைக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

மாற்றுவலுவுடையவர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் மாத்திரமன்றி அவர்களின் கல்வி மற்றும் அவர்களுக்கான ஏனைய தேவைகளை உறுதிப்படுத்தவும் அரசு நடவடிக்கைகளை எடுத்திருப்பதாக இலங்கைக் குழுவினர் சுட்டிக்காட்டியிருந்தனர். (அ-2)

# கொழும்பில் தேசிய நீர் மாநாடுக்கு ஏற்பாடு

(கொழும்பு)

தேசிய நீர் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 20ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை கொழும்பில் தேசிய நீர் மாநாடு ஒன்றை நடத்த நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சு தீர்மானித்துள்ளது.

2013 ஆம் ஆண்டை சர்வதேச நீர் ஒத்துழைப்பு ஆண்டாக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தியுள்ளதை அடுத்தே கொழும்பில் மாநாடு நடத்தப்படவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல் தெரிவித்தார்.

கொழும்பில் மூன்று நாள் மாநாடு நடத்தப்படுவது தொடர்பில் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி மாநாட்டுடன் அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் பங்களிப்புடன் 80 காட்சியாளர்களின் பங்குபற்றலுடன் சர்வதேச கண்காட்சி ஒன்றும் நடத்தப்படவுள்ளது. (அ-2)



பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் கிளி. மாவட்ட வடக்கின் துரித மீள்ச்சித் திட்டத்தால் 112 இலட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட பளை தபாலகம் தபால் திணைக்களத்தினரிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டுள்ளது. இத் தபாலகத்தின் வேலைகள் மந்தகதியில் நடைபெற்று வந்தமையை வலம்புரி பத்திரிகையில் முன்பு சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. தற்போது இத்தபாலகத்தின் வேலைகள் யாவும் முடிவுற்றுள்ளதுடன் இப்பிரதேச மக்களின் நலன் கருதி விரைவில் இதனை திறப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என துரித மீள்ச்சித்திட்ட உதவித் திட்டப் பணிப்பாளர் விஜய கிருஷ்ணன் தெரிவித்துள்ளார். (அ-3-254)

# சைபர் தாக்குதல்கள் குறித்து விசேட கருத்தரங்குகள்

இலங்கை இணயத்தளங்கள் மீதான சைபர் தாக்குதல் குறித்து தெளிவுபடுத்த விசேட கருத்தரங்குகள் நடத்தப்பட்டவுள்ளன. இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவர் நிறுவகத்தின் கீழ் இயங்கி வரும் கணனி அவசரப் பிரிவு இந்த கருத்தரங்குகளை ஒழுங்கு செய்துள்ளது. முதற்கட்டமாக அரசாங்க இணையதளங்களை நடத்துவோருக்கு விசேட தெளிவுபடுத்தல்கள் வழங்கப்படவுள்ளன.

சைபர் தாக்குதல்களிலிருந்து எவ்வாறு இணையத்தளங்களை பாதுகாத்துக் கொள்வ து என்பது குறித்து விளக்கமளிக்கப்படவுள்ளது. தனியார் நிறுவனங்களுக்கும் இந்த கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

இணையத்தளங்களை எவ்வாறு பராமரித்தல், நுழைவுச் சொல் பயன்பாடு, சைபர் தாக்குதலுக்கு இலக்கானால் எடுக்கப்பட வேண்டிய உடனடி நடவடிக்கை போன்றன குறித்து இந்த கருத்தரங்கில் விளக்கமளிக்கப்படவுள்ளன. (அ-2)

### மென்பொருள் பொறியியல் பணியை உதறிவிட்டு

# அக்காவைப் பார்த்து தங்காவும் சினிமாவுக்கு....

மென்பொருள் பொறியியலாளர் டாப்சி அழகிப் போட்டி ஒன்றில் களமிறங்குவதற்காக தெலுங்கு படத்தில் அறிமுகமானார். ஆடுகளத்தில் நடிக்க த்ரிஷா தயங்க வெற்றிமாறன் டாப்ஸியை அழைத்து வந்து வெள்ளாவி தேவதையாக்கினார். இப்போது டாப்ஸி தமிழ், தெலுங்கு, இந்தியில் ரொம்ப பிசி. தமிழில் அஜித்துடன் வலை, ராகவா லாரன்சுடன் முனி3, மறந்தேன் மன்னித்தேன், தெலுங்கில் ஷேடோஸ், ஜாக்பாட், குண்டலா கோதவரி, இந்தியில் சஸ்மே படோர் என பல படங்களில் நடித்து வருகிறார்.

அக்காவின் வளர்ச்சியை பார்த்த தங்கை ஷாகுனுக்கும் நடிக்கும் ஆசை வந்து விட்டது. அவரும் தான் பார்த்து வந்த மென்பொருள் பொறியியல் வேலையை உதறித் தள்ளிவிட்டு அக்காவுடன் பொது நிகழ்ச்சிகளுக்கு கலக்கலாக வருவது, விதவித மான போட்டோக்கள் எடுத்து இணைய தளத்தில் விடுவது என்ற நடிப்புக்கான வேலையில் இறங்கி விட்டார். அக்காவைப் போலவே தங்கையும் விரைவில் தெலுங்கு படம் ஒன்றில் அறிமுகமாகிறார்.

இதுகுறித்து டாப்ஸி கூறும்போது, ஷாகுன் என்னை விட அழகா-னவள். அவளுக்கு சினிமாவில் நடிக்க வேண்டும் என்ற ஆசை வந்து விட்டது. வீட்டிலும் ஓகே சொல்லிவிட்டார்கள். அவள் நடிக்க வந்தாலும் எனக்கு போட்டியாக வந்தாலும் நான் கவலைப்பட மாட்டேன் என்கிறார். கவுதம் மேனன் தான் இயக்கப்போகும் அடுத்த படத்தில் ஷாகுனை நடிக்க வைக்கலாம் என்றும், வெற்றிமாறன் இயக்கும் அடுத்த தனுஷ் படத்தில் ஷாகுன் ஹீரோயின் ஆகலாம் என்றும் சொல்கிறார்கள்.


டாப்ஸி
ஷாகுன்

## பெயரிடப்பட்டது அஜித் படத்துக்கு

பில்லா [illegible]தைத் தொடர்ந்து மீண்டும் வி[illegible]தன் இயக்கத்தில் நடித்து வருகி-றார் அஜித். ஏ.எம்.ரத்னம் தயாரித்துள்ள இந்த படத்தில் அஜித்துடன் ஆர்யா, நயன்தாரா, டாப்சி ஆகியோரும் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். கடந்த 7 மாதங்களாக இப்படத்தின் படப்பிடிப்பு தொடங்கப்பட்டு வேலைகள் துரிதமாக நடந்து வந்தன. என்றாலும், படத்தின் தலைப்பை ரொம்பவே இரகசியமாக வைத்திருந்தார்கள். ஆனால் கடந்த மாதம் வலை என்று அவர்கள் தலைப்பு வைத்திருப்பதாக செய்திகள் கசிந்தன. அந்த தலைப்பை இப்போது உறுதிபடுத்தியுள்ளது அப்படக்குழு. இப்படத்துக்கு வலை என்று தலைப்பு வைத்ததால் மற்றவர்களை விட அஜித்தான் ரொம்பவே குஷியாக இருக்கிறாராம். காரணம், தமிழில் ஆசை என்ற இரண்டெழுத்து படம்தான் அவரை ரசிகர்களுக்கு முழுசாக அடையாளம் காட்டியது. அதையடுத்து வாலி என்ற படம் அவர் படத்துக்கான வியாபாரத்தை அதிகப்படுத்தியது. அதேபோல் ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் அஜீத் நடித்த தீனா படமும் அவருக்கு வெற்றியை கொடுத்தது. அதனால் இந்த வலை படமும் செண்டிமெண்டாக தனக்கு பெரிய வெற்றியை கொடுக்கும் என்று எதிர்பார்க்கிறாராம்.


படம் : வலை

## வாய்ப்பை இழந்த பின் அடக்கி வாசிக்கும் பவர்

கண்ணா லட்டு தின்ன ஆசையா படத்துக்குப்பிறகு பல படங்களில் நகைச்சுவையாகவும், குத்துப்பாட்டுக்கு ஆடுபவராகவும் வளர்ந்து நிற்கிறார் பவர்ஸ்டார். இந்நிலையில் சமீபத்தில் கூட ஒரு இயக்குநர் அவரை அணுகி கதை சொன்னபோது, தான் ரஜினி ரேஞ்சுக்கு பெரிய நடிகன் என்றுபேசினாராம் பவர். இதனால் கடுப்பான அந்த இயக்குநர், சரி அப்புறம் மற்றதை பேசுவோம் என்று சொல்லிவிட்டு வந்து விட்டாராம். ஆனால் அதையடுத்து அவரிடமிருந்து எந்தவித பதிலும் வராததால், அப்புறம் வர்றேன்னு சொன்னீங்களே? எப்ப வருவீங்க? என்று பவரின் முகாமையாளர் ஒருவர் பின்னர் அந்த இயக்குநருடன் தொடர்புகொண்டு கேட்டாராம். அதற்கு, அந்த இயக்குநர் நான் ஒரு சின்ன நகைச்சுவை நடிகர் என்று நினைத்துதான் பவர்ஸ்டாரை புக் பண்ண வந்தேன். ஆனால் அவர் ரஜினி ரேஞ்சுக்கு பெரிய நடிகர் என்று சொல்கிறாரே.

அவரையெல்லாம் புக் பண்ற அளவுக்கு என் படத்தின் பட்ஜெட் தாங்காது என்று சொல்லி போனை கட்பண்ணி விட்டாராம். இதைய டுத்து, தன்னைப் பற்றி அடக்கி வாசிக்கமுடிவெடுத்திருக்கிறாராம் பவர்.


படம் : வானவராயன் வல்லவராயன்

## மீண்டும் வடிவேலு

வடிவேலு ஹீரோவாக நடிக்கும் படத்தை கே.எஸ்.ரவிக்குமார் இயக்கவுள்ளார். இப்படத்திற்கான கதையை ரஜினியின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய டாக்டர் காயத்ரி எழுதியுள்ளார். வடிவேலுவுக்கும், கே.எஸ்.ரவிக்குமாருக்கும் இந்த கதை பிடித்துவிட்டதால் சேர்ந்து பணியாற்ற முடிவு செய்துவிட்டார்களாம்.

இப்படத்திற்கு 'ஆப்பிரிக்காவில் வடி வேலு' என பெயர் வைத்திருக்கின்றனர். ஆப்பிரிக்கா காட்டில் தன்னந்தனியாக மாட்டிக் கொள்ளும் வடிவேலு, அங்கு அனுபவிக்கும் சிக்கல்களையும், சிரமங்களையும் கதையாக உருவாக்கியிருக்கிறார்கள்.



## கோச்சடையான் ஜுலையில்...

ரஜினியின் கோச்சடையான் படம் ஜுலையில் ரிலீஸ் ஆக இருக்கிறது. இதனை படத்தின் தயாரிப்பாளர் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார். நடிகர் ரஜினிகாந்தின் இளையமகள் சவுந்தர்யா இயக்குநராக அவதரித்து இருக்கும் படம் கோச்சடையான். முதல்படத்தையே தனது அப்பா ரஜினியை வைத்து தைரியமாக இயக்கி உள்ளார். இவருக்கு பக்கபலமாக இருந்து படத்தை எடுக்க உதவியுள்ளார் இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமார். ரஜினிக்கு ஜோடியாக பாலிவுட் நடிகை தீபிகா படுகோனே நடித்துள்ளார். இவர்களுடன் சரத்குமார், ஜாக்கி ஷெரப், ஆதி, ஷோபனா, ருக்மணி, நாசர் உள்ளிட்ட ஒரு பெரிய நட்சத்திர பட்டாளமே நடித்துள்ளனர். ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்கிறார். ராஜீவ் மேனன் ஒளிப்பதிவு செய்கிறார்.

முதன்முறையாக ரஜினிகாந்த் 3டி படத்தில் நடித்து உள்ளார். அவதார் படம் போல, 3 டியில் மோஷன் கேப்சரிங் தொழில்நுட்பத்தில் இப்படம் தயாராகி வருகிறது. இந்திய சினிமாவில் இந்த தொழில்நுட்பத்தில் வரும் முதல் படம் இது. 3டி வசதி இல்லாத அரங்குகளுக்காக 2டியிலும் இந்தப் படம் வருகிறது. இப்படத்தின் ஷூட்டிங் எல்லாம் முடிந்து படத்திற்கான 3டி தொழில்நுட்ப வேலைகளும், பிற வேலைகளும் தீவிரமாக நடந்து வருகிறது.

# வடகொரியா மீது பொருளாதாரத்தடை; பாதுகாப்புச்சபையில் நிறைவேறியது தீர்மானம்!



அமெரிக்கா மற்றும் சீனாவால் தயாரிக்கப்பட்ட, வடகொரியா மீதுள்ள பொருளாதார தடைகளை தீவிரப்படுத்தும் தீர்மானம் நேற்று முன்தினம் நடந்த ஐ.நா.பாதுகாப்பு குழு கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

இது ஐ.நா.பாதுகாப்பு குழுவால் வடகொரியாமீதுவிதிக்கப்படும்4ஆவது பொருளாதாரத் தடையாகும்.

வடகொரியா 2006 ஆம் ஆண்டு தொடங்கி இதுவரை 3 அணு ஆயுத சோதனைகளை நடத்தியுள்ளது. மூன்றாவது முறையாக பெப்ரவரி மாதம் அணுகுண்டு சோதனையை நடத்தியது. பாதுகாப்பு குழுவின் தீர்மானங்களை மீறி வடகொரியா நீண்ட தூரம் சென்று தாக்கக்கூடிய ஏவுகணை மற்றும் அணு ஆயுத சோத்தனையில் ஈடுபட்டதற்கு உலக நாடுகள் கடும் கண்டனம் தெரிவிப்பதை உணர்த்தவே இந்த கடுமையான பொருளாதார தடைகளை ஐ.நா. விதித்துள்ளது.

இதன்படி வடகொரியா இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்யும் சந்தேகத்துக்கு இடமான சரக்கு களை உலக நாடுகள் கண்காணிக்க வேண்டும். வடகொரியாவின் தூதரக அதிகாரிகள், சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகளில் ஈடுபடாமல் தடுக்க கண்காணிக்கப்படுவார்கள். விலை உயர்ந்த நகைகள், பந்தயக் கார்கள், ஆடம்பரக்கார்கள், பயண மற்றும் பந்தயப் படகுகள் ஆகியவ ற்றை ஏனைய நாடுகள் கொரியா வுக்கு ஏற்றுமதி செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

வடகொரியாவின் அணு மற்றும் ஏவுகணை திட்டங்களை செயற்படுத்த உதவும் பொருளாதார கொடுக்கல் வாங்கல்களை ஏனைய நாடுகள் நிறுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

வடகொரிய நிறுவனங்களுக்கு வேலை செய்யும் முகவர்கள் பயணம் செய்வதைதடைவிதிக்கஏனைய நாடுகளிடம் கோரியுள்ளது. வடகொரியாவின் விமானங்கள் சட்டத்திற்கு புறம்பான சரக்குகளை ஏற்றிச் செல்வதாக சந்தேகப்பட்டால், தங்கள் வான் எல்லையில் பறக்கவும், தரை இறக்கவும் தடை விதிக்க ஏனைய நாடுகளுக்கு அறிவுறுத்தல் போன்ற தடைகள் இத்தீர்மானத்தில் உள்ளது.

வடகொரியாவின் முக்கிய ஆயுத முகவர் மற்றும் ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள நிறுவனம் மற்றும் ஏவுகணை, அணு சோதனைகளை நடத்த தேவையான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் அமைப்பு ஆகிய இரண்டு நிறுவணங்களையும் அதில் முக்கிய பொறுப்பில் உள்ள 3 நபர்களையும் இந்த தடை தீர்மானத்தில் சேர்க்கவுள்ளனர்.

ஆனால் இதனை சீனா எவ்வாறு நடைமுறைப்படுத்தப் போகிறது என்பதைப் பொறுத்தே இந்த புதிய தடைகளின் வெற்றி உள்ளது. ஏனென்றால் வடகொரியா இணைந்து செயற்படும் பல நிறுவனங்களும் வங்கிகளும் சீனாவில் உள்ளவை.

ஆனால் இந்த தீர்மானம் அமைதியான, இராஜதந்திர மற்றும் அரசியல் தீர்வு காண்பதற்கு பாதுகாப்பு குழு முயற்சிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி உள்ளது. இதற்காக 6 முனை பேச்சுக்களை தொடங்க்வும் வலியுறுத்தி உள்ளது. (அ-2)

# அணுசக்தி இயக்குநராக மீண்டும் யுகியோ தெரிவு

(வியன்னா)



சர்வதேச அணுசக்தி முகாமையின் (ஐ.ஏ.இ.ஏ.) தலைமை இயக்குநராக ஜப்பானைச் சேர்ந்த யுகியோ அமானோ மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.கடந்த முறை போல அல்லாமல் இந்தமுறை வாக்கெடுப்பு இன்றி ஒரு மனதாக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

சர்வதேச அணுசக்தி முகாமையின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் அடுத்த 4 ஆண்டுகளுக்கு அமானோ தலைமை இயக்குநராக தொடர் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு எகிப்தைச் சேர்ந்த முகமது எல்பராதே பதவியிலிருந்து இறங்கிய பின், யுகியோ அமானோ தலைமைப் பதவிக்கு முன்னிறுத்தப்பட்டார்.

அப்போதுஅந்தஅமைப்பில்உறுப்பினர்களாக உள்ள நாடுகளி டையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதையடுத்து வாக்கெடுப்பு நடத் தப்பட்டது

அதில் அமானோவுக்கு 35 வாக்குகளும் அவருக்கு எதிராக 23 வாக்குகளும் பதிவாகின. இதையடுத்து அந்த அமைப்பின் தலைமை இயக்குநராக அமானோ பொறுப்பேற்றார். (அ-2)

# வெனிசுலாவின் ஜனாதிபதியாக துணை ஜனாதிபதி பதவியேற்பு



புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த வெனிசுலா நாட்டின் ஜனாதிபதி ஹுகோ சாவேஸ் கடந்த 5 ஆம் திகதி மரணமடைந்தார்.

தனக்கு பின்னர் ஜனாதிபதி பதவியை யார் ஏற்க வேண்டும்? என்பதை கடந்த டிசெம்பர் மாதமே ஹுகோ சாவேஸ் அறிவித்திருந்தார். அதன்படி வெனிசுலாவின் துணை ஜனாதிபதியாக பதவி வகித்து வந்த நிக்கோலஸ் மடுரோ அந்நாட்டின் புதிய ஜனாதிபதியாக நேற்று முன்தினம் பதவியேற்றார்.

மக்களின் உறுதுணையோடு வெனிசுலா நாட்டின் அரசியலமைப்புக்கு கீழ்படிந்து இறையாண்மையை பாதுகாப்பேன் என்று மறைந்த ஹுகோ சாவேஸ் பெயரால் உறுதி ஏற்கிறேன் எனக் கூறி அவர் பதவி பிரமாணம் ஏற்றார்.

நிக்கோலஸ் மடுராவின் பதவியேற்பு மோசடியானது என்று எதிர்க்கட்சி குற்றம் சாட்டியுள்ளது. அரசியலமைப்பு சட்டத்தின் படி ஜனாதிபதி மரணமடைந்தால் பாராளுமன்ற சபாநாயகர் தான் அடுத்த ஜனாதிபதியாக பதவியேற்க வேண்டும் என்ற மரபு மீறப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் கூறியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டினை நிராகரித்த உச்ச நீதிமன்றம் தற்காலிக ஜனாதிபதியாக நிக்கோலஸ் மடுரோ பதவியேற்கத் தடையேதும் இல்லை என்றும் இன்னும் ஒரு மாத காலத்திற்குள் அவர் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடலாம் எனவும் கருத்து தெரிவித்துள்ளது. எனினும் இந்த பதவி ஏற்பு விழாவை எதிர்க்கட்சிகள் புறக்கணித்தன. (அ-5)

# செவ்வாய்க்கிரகத்தில் வெள்ளம் ஏற்பட்டதற்கான அறிகுறி- நாசா

(ஹிவாஷிங்டன்)



செவ்வாய்க்கிரகத்தில் மிகப் பெரும் வெள்ளம் ஏற்பட்டதற்கான அறிகுறிகள் கண்டறியப்பட்டுள்ளதாக அமெரிக்காவின் நாசா விண்வெளி மையம் தெரிவித்துள்ளது.

பூமியில் இருந்து சுமார் 57 கோடி கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள செவ்வாய்க்கிரகத்தில் உயிரினங்கள் வாழ்வதற்கான ஏற்ற சூழல் இருக்கிறதா என்பது குறித்து ஆய்வு செய்ய அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி மையம் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது.

செவ்வாய்க்கிரகம் தொடர்பான படங்களையும் அவ்வவ்போது வெளியிட்டு வருகிறது. நாசா அனுப்பிய விண்கலங்கள் அண்மையில் வெளியிட்ட புகைப்படங்கள் மூலம் செவ்வாய்க் கிரகத்தில் 50 கோடி ஆண்டுகளுக்கு முன்பு கடும் பனிப்பொழிவு, மழை காரணமாக மிகப் பெரிய வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. அதனால் பல ஆண்டுகளுக்கு செவ்வாய்க்கிரகம் பனிக்கட்டிகள் உறைந்த நிலையில் தோற்றமளித்துள்ளது.

இந்த வெள்ளப்பெருக்கு ஏற்படுத்திய பேரழிவு, நீர் அரிப்பு போன்றவற்றின் தடங்கள் இப்போதும் காணப்படுகின்றன. தற்போது கிடைத்துள்ள புகைப்படங்கள் மூலம் நீரியல் துறையில் நிலவும் சந்தேகங்களுக்கு விடை காண முடியும். செவ்வாய்க்கிரகத்தில் நீரோடைகளும் கடல்களும் இருந்ததற்கான அறிகுறிகளும் தென்படுகின்றன.

பூமியைப் போலவே வளிமண்டலக் கூறுகளைக் கொண்ட ஒரே சூரியக்குடும்ப கிரகம் செவ்வாய். அதன் துருவங்களில் வெண்மையான பகுதி காணப்படுகிறது. கோடைக்காலத்தில் செந்நிறமாகவும் மழைக் காலத்தில் நீலமாகவும் காட்சியளிக்கிறது. அதற்குக் காரணம் செவ்வாய் கிரகத்தில் அடிக்கடி ஏற்படும் புழுதிப் புயல் தான் என நாசா தெரிவித்துள்ளது. (அ-2)

# பிரிட்டனில் சிகரெட் பாவனை குறைவடைந்தது

கடந்த நாற்பது ஆண்டுகளில் புகை பிடித் தல் பாதியாகக் குறைந்து விட்டது என்றும் குடிப்பழக்கம் கணிசமாக குறைந்துள்ளது எனவும் பொது வாழ்க்கை முறை பற்றிய ஆய்வு தெரிவித்துள்ளது.

கடந்த 1947 ஆம் ஆண்டுகளில் ஏறத் தாழ பாதிப்பேர் சிகரெட் புகைத்துள்ளனர். ஆனால் கடந்த 2011 ஆண்டு ஐந்தில் ஒருவர் மட்டுமே புகைபழக்கத்திற்கு ஆளாகியுள்ளார்.

வாரத்துக்கு ஐந்து நாட்கள் மது அருந் தியவர் கடந்த 2005 ஆம் ஆண்டு 22 சத வீதம் ஆக இருந்துள்ளது. கடந்த 2011 ஆம் ஆண்டு 16 சதவீகிதம் ஆகக் குறைந்து விட்டது.

புகைப்பதால் நுரையீரல் புற்று நோயும் இதயநோயும் வர வாய்ப்பிருப்பதாக விழிப்பு ணர்வு பிரசாரங்கள் நடத்தியதற்கு நல்ல பலன் கிடைத்துள்ளது.

இதற்கமைய பணித்தலங்களில் புகைக்கக் கூடாது என்று பிரிட்டன் முழுக்க் தடை விதிக் கப்பட்டதும் சிகரெட் விளம்பரத்துக்கு தடை விதித்ததும் புகைபழக்கத்தைக் குறைத்துள்ளது.

பிரிட்டிஷ் நுரையீரல் அறக்கட்டளையின் தலைமை நிர்வாகியான டாக்டர் பென்னி உட்ஸ் கூறுகையில், கடந்த நாற்பதாண்டுக ளில் விதிக்கப்பட்ட கடுமையான சட்டங்களும் அரசின் விழிப்புணர்வுப் பிரசாரமும் புகைப் பழக்கத்தைக் குறைத்திருப்பதால் ஆபத்தான நோய்களும் அகால மரணமும் தடுக்கப்பட்டு ள்ளன என்று குறிப்பிட்டுள்ளார். (அ-2)




# மாட்டுப்பாலில் புற்றுநோய் கிருமிகள் கண்டறியப்பட்டுள்ளன

ஜேர்மனியில் மேற்கு பகுதியிலுள்ள பால் பண்ணையிலிருந்து பெறப்பட்ட பாலில் புற்றுநோய்க் கிருமிகள் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதற்கு காரணம் சேர்பியாவில் இருந்து வாங்கிய மாட்டுத்தீவனம் தான் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

சேர்பியாவில் இருந்து பெறப்பட்ட பழு தடைந்த சோளக் குருணை கலந்த மாட்டுத் தீவனத்தை இங்கே உள்ள பண்ணைகளின் பசுக்கள் உணவாக உட்கொண்டதால் அவைகளில் இருந்து பெறப்பட்ட பாலில் ஆஃப் லாட்டாக்சின் இரண்டு மடங்கு காணப்படு கிறது.

இது தொடர்பாக லோயர் சேகஸ்சனி மாநிலத்தின் வேளாண் அமைச்சகத்தை சேர் ந்த உடோ பாஸ் செடாக் தெரிவிக்கையில்,

ஒரு கிலோ பாலில் 50 நானோ கிராம் ஆஃப்லாடாக்சினஸ் இருந்தால் ஆபத்தில்லை அதனை விற்கலாம்.

ஆனால்தற்பொழுது வரும்பாலில் நூறு நானோ கிராம் ஆஃப்லாடாக்சினஸ் உள்ள தால் ஆபத்து அதிகம் என்று கூறினார்.

லோயர் சேக்சனியில் பண்ணைகளில் விற்கப்பட்ட பாலில் அனுமதிக்கப்பட்ட அளவை விட ஆஃப்லர்டாக்சினஸின் அளவு முப்பது மட ங்கு அதிகம் இருந்ததால் நூற்றுக்கணக்கான பண்ணைகள் சேக்ஸனியில் இருந்து வாங் கிய பாலை விற்கத்தடை விதிக்கப்பட்டது.(அ-2)

# இலங்கை அரசை நடுங்கச் செய்ய வேலை நிறுத்த போராட்டம்

## கலைஞர் கருணாநிதி அழைப்பு

(சென்னை)

இலங்கை அரசை நடுங்கச் செய்ய நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பொது வேலைநிறுத்தப் போராட்டத்தை வெற்றி பெறச் செய்வோம் என்று கருணாநிதி கூறியுள்ளார்.

தி.மு.க தலைவர் கருணாநிதி நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில்,

தமிழகத்தில் நாளை மறுதினம் பொது வேலைநிறுத்தம். டெசோ அமைப்பின் வேண்டுகோள் இது. இலங்கையில் அரசால் நடத்தப்பட்டதெல்லாம் தமிழினப் படுகொலையே. இலங்கை ஜனாதிபதியை சர்வதேசப் போர்க் குற்றவாளி என்று அறிவிக்க வேண்டும். இவற்றுக்காக கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் ஜனநாயக நெறி பிறழாமல் வேலைநிறுத்தத்தை நடத்துகிறோம்.

டெசோ இயக்கத்தின் சார்பில் அறிவித்த காரணத்தால் ஒரு சிலர் தமிழ் இனப்பற்றை தங்கள் உள்ளத்திலிருந்து எடுத்தெறிந்துவிட்டு ஈழத் தமிழர்களுக்கு தாய்த் தமிழகம் காட்டுகின்ற ஆதரவு என்ற உணர்வோடு அதை வெற்றிகரமாக ஆக்கித் தர வேண்டுகின்றேன்.

பிரபாகரனின் மகனாகப் பிறந்த ஒரே குற்றத்திற்காக பாடசாலைக்குச் சென்று பயில வேண்டிய பச்சிளம் பாலகன் பாலச்சந்திரன் படுகொலை, அப்பாவிப் பெண்கள் நிர்வாண நிலையில் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கும் காட்சி, ஆண்களை நிர்வாணமாக்கி கண்களைக் கட்டி கைகளைப் பின்னால் கட்டி முதுகில் சுட்டுக் கொல்கின்ற காட்சி ஆகிய இதயத்தைக் கசக்கிப் பிழிந்திடும் காட்சிகளை கண்ட பின்னரும் இந்த ஒரு நாள் வேலை நிறுத்தத்தில் நாம் கலந்து கொள்ளாவிட்டால் இலங்கை அரசின் கொடுமைகளை நாம் சிரம் தாழ்த்தி ஏற்றுக் கொண்டவர்களாகி விடமாட்டோமா?

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து எத்தனையோ ஆண்டு காலமாகக் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள்.

இந்த வேலை நிறுத்தம் இலங்கையில் எம்மக்கள் தினந்தினம் செத்துக் கொண்டிருக்கிறார்களே! அவர்களுக்காக நாம் செய்கின்ற எள்ளளவு தியாகம் என்ற உணர்வோடு அதனை ஏற்றுக் கொள்ள முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாளை மறுதினம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணி வரை 12 மணிநேரம் தமிழகமே ஒன்று திரண்டு வேலைநிறுத்தத்தில் அழுத்தமாக நின்றது என்று தெரிந்தால் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடுங்குவார் என்று குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஹெலிகொப்டர் ஊழல் மோசடி விவகாரம் சூடு பிடிக்கின்றது

(புதுடில்லி)

ஹெலிகொப்டர் பேர ஊழல் தொடர்பாக முன்னாள் மத்திய அமைச்சர் சந்தோஷ் பக்ரோடியாவின் சகோதரரும், ஐடிஎஸ் இன்ஃபோடெக் நிறுவன தலைவருமான சதீஷ் பக்ரோடியாவிடம் சிபிஐ அதிகாரிகள் நேற்று முன்தினம் விசாரணை நடத்தினர்.

3 ஆயிரத்து 600 கோடி ரூபா மதிப்பிலான சொகுசு ஹெலிகொப்டர் பேரத்தில் முறைகேடு நிகழ்ந்ததாக புகார் எழுந்தது. இது குறித்து விசாரித்து வரும் சிபிஐ ஏற்கனவே இந்த பேரம் தொடர்பாக ஏரோமேட்ரிக்ஸ் நிறுவனம் மற்றும் இன்ஃபோடெக் நிறுவனங்களின் உயர் பதவியில் இருப்பவர்களிடம் விசாரணை நடத்தியுள்ளது. இலஞ்சப் பணம் மோரீஷஸ் மற்றும் துனிசியா வழியாக வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்தப் பேரம் தொடர்பாக இத்தாலி நீதிமன்றத்தில் அந்நாட்டு அரசு தரப்பு வழக்குரைஞர் தாக்கல் செய்த அறிக்கையில் ஐடிஎஸ் இன்ஃபோடெக் நிறுவனத்தின் பெயர் இடம் பெற்றுள்ளது.

இதனடிப்படையில் சதீஷிடம் விசாரணை நடத்தப்பட்டதாகத் தெரிகிறது. இத்தாலியைச் சேர்ந்த இடைத்தரகர், ஐடிஎஸ்இன்ஃபோடெக நிறுவனத்தின் மூலம் இலஞ்சப் பணத்தை கைமாற்றியது தொடர்பாக சதீஷிடம் விசாரணை நடத்தப்பட்டது என தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-2)




# பலாத்காரத்தில் பலியான மாணவிக்கு வீரப்பெண்மணி விருது வழங்கப்பட்டது

பலாத்காரம் செய்யப்பட்டதில் உயிரிழந்த டில்லி மாணவி நிர்பயாவுக்கு சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, வீரப் பெண்மணி விருதை குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி வழங்கினார்.

சமூக மாற்றத்தில் பங்களிப்பைச் செலுத்திய பெண்களுக்கு மத்திய அரசு ஆண்டுதோறும் சர்வதேச மகளிர் தினத்தில் ஸ்திரீ சக்தி புரஸ்கார் என்ற பெயரில் 6 வீரப் பெண்மணி விருது வழங்கி கௌரவிக்கிறது.

இம்முறை, கடந்த டிசெம்பர் மாதம் டில்லியில் பலாத்காரம் செய்யப்பட்டதில் உயிரிழந்த மாணவி நிர்பயா வீரப்பெண்மணி விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டார்.

அதன்படி அந்த மாணவியின் தாயாரிடம் இவ்விருதை குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி டில்லியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.

அப்போது அவர் கூறுகையில், நிர்பயாவுக்கு ராணி லக்ஷ்மிபாய் விருதை அளிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். நிர்பயா என்று இப்போது அறியப்படும் அந்த மாணவி வீரதீரம் மிகுந்தவராக இருந்தார்.

கடைசி வரை உயிருக்காகவும், தனது கௌரவத்துக்காகவும் போராடினார் என்று புகழாரம் சூட்டினார். (அ-2)



பாகிஸ்தான் பிரமதர் ராஜா பர்வேஷ் அஷ்ரப் இராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூருக்கு நேற்றைய தினம் வருகை தந்தார். அவரை மத்திய வெளியுறவு துறை மந்திரி சல்மான் குர்ஷித் வரவேற்றதைப் படத்தில் காணலாம்.

# கிளிமாஞ்சாரோ சிகரத்தில் ஏறி 7 வயது இந்திய சிறுவன் சாதனை

உலகிலேயே மிகச் சிறிய வயதில் ஆபிரிக்காவின் கிளிமாஞ்சாரோ சிகரத்தைத் தொட்டு இந்திய சிறுவனொருவர் சாதனை படைத்துள்ளார்.

ஆபிரிக்காவின் மிகவும் உயரமான சிகரமான கிளிமாஞ்சாரோ சிகரத்தில் (5895 மீற்றர் / 19343 அடி) தனது ஏழு வயதில் ஏறி குறித்த சிகரத்தை அடைந்து மலையேறும் நபர் என்ற சாதனையைப் படைத்துள்ளார் ஆர்யன் பாலாஜி.

கடந்த பெப்ரவரி 25ஆம் திகதி இந்தச் சாதனையை அவர் படைத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அந்த மலைச் சிகரத்தில் இந்திய நாட்டின் மூவர்ணக் கொடியையும் ஏந்திச் சென்று பறக்கவிட்டு நாட்டுக்குப் பெருமை சேர்த்துள்ளதாக அந்தச் சிறுவனுக்குப் புகழ் மாலை சூட்டி வருகிறார்கள்.

இச் சிறுவனின் தந்தை பாலாஜி இந்தியக் கடற்படை அதிகாரி. சிறுவனின் மலையேறும் சாகசங்களைச் செய்தவர் எவரெஸ்ட் சிகரம், தெற்கு முனை, வடக்கு முனை மற்றும் இந்தியாவின் பிரதான மலைச் சிகரங்களில் ஏறி சாதனை புரிந்தவர் ஆவார். (அ-2)

# போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தி தமிழக மாணவர்கள் உண்ணாவிரதம்

இலங்கை போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தக் கோரி லயோலா கல்லூரி மாணவர்கள், சென்னை கோயம்பேடு பகுதியில் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

ஜெனீவா மாநாட்டில் அமெரிக்கா கொண்டு வரவுள்ள தீர்மானத்தில், இலங்கைக்கு எதிரான அம்சங்கள் இடம் பெற்று எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இலங்கை மீது உலக நாடுகள் பொருளாதார தடை விதிக்க வேண்டும் என உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் வலியுறுத்தினர்.

தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்களை மத்திய அரசு உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் மாணவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

லயோலா கல்லூரி மாணவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு வேறு சில கல்லூரி மாணவர்களும் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளனர்.

இந்நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கல்லூரி மாணவர்களை நேரில் சந்தித்த ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ, மாணவ சமுதாயம் தன்னலமற்றது. அவர்கள் போராட்டத்திற்கு முழு ஆதரவு தெரிவிப்பதாக கூறினார்.

இதேவேளை தி.மு.க தலைவர் கருணாநிதி தெரிவிக்கையில்,

சென்னை லயோலா கல்லூரி மாணவர்கள் தங்களது உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிட்டு வேறு வகையான அறப் போராட்டங்களில் ஈடுபட அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஈழத் தமிழர்களைக் காக்க தாய் தமிழ்நாட்டிலுள்ள இளைஞர்களின் உயிர் முக்கியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## சிரிய உள்நாட்டு யுத்தத்தில் இந்திய ஜிஹாதிகள்

சிரியாவில் ஜனாதிபதி அசாத்துக்கெதிராக நிகழும் சிவில் யுத்தத்தில் இந்தியாவைத் தாயகமாகக் கொண்ட (ஜிஹாதிகள்) போராளிகள் சிலரும் போராடி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இவ்விடயம் குறித்து சிரிய ஜனாதிபதி அசாத்தின் அரசியல் ஆலோசகர் பௌதாயினி ஷபான் கருத்துத் தெரிவிக்கையில், சிரிய அரசுக்கெதிராகப் போராடி வரும் புரட்சியாளர்களில் இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்ட போராளிகளும் இருப்பதனால் தான் நாம் இவ்விடயத்தில் இந்தியா மிகவும் செயற்திறன் மிக்க பங்கினை ஆற்ற வேண்டும் என நினைப்பதாகக் கூறியுள்ளார்.

ஏனெனில் தற்போது பெரிதாகி வரும் இந்த யுத்தம் யாரையும் உயிரோடு மிஞ்ச வைக்கப் போவதில்லை என இவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# பாகிஸ்தான் பிரதமர் இந்தியாவுக்கு வருகை

ஒருநாள் ஆன்மிகப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் பிரதமர் ராஜா பர்வேஷ் அஸ்ரப் ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூர் வந்தடைந்தார்.

40 பேர் கொண்ட குழுவுடன் தனிப்பட்ட பயணமாக இந்தியா வந்துள்ள பாகிஸ்தான் பிரதமர் அஜ்மீர் தர்ஹாவிற்கு சென்று குடும்பத்துடன்வழிபாடு நடத்தினார்.

முன்னதாக ஜெய்ப்பூரில் பாகிஸ்தான் பிரதமருக்கு இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் மதிய விருந்து அளிக்கிற போது இருதரப்பு பிரச்சினைகள் குறித்து பேசப்படமாட்டாது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளையில் அஜ்மீர் தர்ஹாவின் மதகுருக்களில் ஒருவரான ஜெய்னுலாபுதீன் அலிகான், பாகிஸ்தான் பிரதமரைப் புறக்கணிக்கப் போவதாக அறிவித்துள்ளார். (அ-2)





அல்வாய் சின்னத்தம்பி வித்தியால யத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மைதானத்தில் அதிபர் பி.சந்திரபாபு தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமராட்சி வலயக்கல்வி நிர்வாக அபிவிருத்தி பிரதிக்கல்விப்பணிப்பாளர் எஸ்.ஸ்ரீகரன் உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினரின் பாரியார் வெற்றி பெற்ற மாணவி ஒருவருக்கு வெற்றிக் கேடயத்தை வழங்கி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-எஸ்.செல்வதீபன்)

# உலகத் தமிழர்கள் ஒன்றிணைந்து ஈழப் பிரச்சினையை தீர்க்க வேண்டும்

## கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் வலியுறுத்து

இலங்கையில் இக அழிப்புக்கு காரணமானவர்களை சர்வதேச நீதிமன்ற விதி முறைப்படி விசாரணை நடத்த வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் தா. பாண்டியன் தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் நடைப்பெற்ற ஈழத்தமிழர்களின் வாழ்வுரிமைக்கான உலக மகாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய பின்னர் நாடு திரும்பி மன்னார்குடி வருகை தந்த இந்தியா கம்பியூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் தா. பாண்டின், அங்கு பத்திரியாளர்களை சந்தித்து உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த 1,2,3,4 ஆகிய திகதிகளில் ஜெனிவாவில் நடைபெற்ற உலக மகாநாட்டில் உலக அளவிலான மனித உரிமை ஆர்வலர்கள், அரசியல் கட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டு ஈழத்தமிழர்களின் வாழ்வுரிமை குறித்து பேசினோம்.இலங்கையில் 50 ஆண்டுகளாக இன அழிப்பு போர் நடைபெ பற்று வருகிறது. 2008-2009 ஆம் ஆண்டு இறுதி கட்ட போரின் போது பல பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

2009 இல் மே 17 அன்று முள்ளிவாய்க்காலில் போருக்கு பாதுகாப்பு வலயத்தில் கொடுமைகள் நடந்தன. ஈழத்தமிழர் தடா வில் சுடப்பட்டது, சதாம் உசேன் தூக்கிலிட பட்டது. மும்பையில் தீவிரவாதிகள் நுழைந் தது எல்லாவற்றையும் தொலைக்காட்சியில் நுட்பமாக படம் பிடிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டது.

ஆனால் இலங்கையில் நடைபெற்ற படுகொலைகள் உலகத்திற்கு தெரிந்துவிடும் என்பதற்காக ஊடகங்களை அனுமதிக்கவில்லை. ஜனநாயக நெறி முறைகள் அனைத்தும் மீறப்பட்டுள்ளது. உலக நெறி முறைகளை கடைப்பிடிக்கவில்லை.

ஹிட்லர் கூட அப்படி செய்தது கிடையாது. ஒரு சில மனசாட்சி உள்ள ஒரு சில இராணுவ வீரர்கள் எடுத்த படம் தான் இன்று சனல் 4 தொலைக்காட்சியில் ஒளிபரப்படுகிறது. எனவே தான் நீதிவிசாரணை நடத்தி குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமென வலியுறுத்துகிறோம். அதை செய்ய இந்திய அரசு பயப்படுகிறது.

அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தை இலங்கை அமெரிக்காவிடம் பேசி சமாதானம் செய்து கொள்ள வேண்டு மென்று சல்மான் குர்ஜித் ஆலோசனை கூறியுள்ளார்.

இவர்கள் செய்த தவறு உலக அரங்கில் அம்பலப்பட்டுவிடுமோ என்று அஞ்சுகின்றனர். ஜெனிவாவில் நடத்தப்பட்ட மாநாடு, மனித உரிமை மாநாடு நடந்த இடத்திலேயே ஐ.நா. கட்டடத்திலேயே நடத்த அனுமதிக் கப்பட்டது.

சர்வதேச நீதிமன்ற விதிமுறைப்படி விசாரணை நடத்தப்பட வேண்டும். சாட்சிகள், ஆவணங்கள் எல்லாவற்றையும் விசாரிக்க அனுமதிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

தமிழ் நாடு மட்டுமே இப்பிரச்சினை பேசி தீர்க்க முடியாது உலகத்தில் உள்ள அனைவரின் ஆதரவினையும் பெற்ற வேண்டும். வெளிநாட்டோடு பேச வேண்டுமென்றால் மத்திய அரசு தான் முயற்சிக்க வேண்டும். அமெரிக்கா தீர்மானத்தை மத்திய அரசு ஆதரிக்க வேண்டும் என்றார். (அ-2)

# தாச்சிச்சுற்றுப் போட்டிகள்

கைதடி விநாயகர் சனசமூக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு நிறைவையொட்டி வலிகாமம், தென்மராட்சி அணிகளுக்கிடையேயான தாச்சிச் சுற்றுப்போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதேவேளை, நேற்று முன்தினம் இடம் பெறவிருந்த அம்பிகை விளையாட்டுக்கழகம், துர்க்கா விளையாட்டுக்கழகம் ஆகிய அணிகளுக்கிடையே இடம்பெறவிருந்த தாச்சிப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

நடைபெற்று முடிந்த போட்டிகளில் மாவை உதயதாரகையை எதிர்கொண்ட ஆலடி சிந்து விளையாட்டுக்கழகம் 5:12 என்ற புள்ளிகளை பெற்று வெற்றி பெற்றுள்ளது.

கோண்டாவில் மறுமலர்ச்சி விளை யாட்டுக்கழகத்தை எதிர்கொண்டு தாச்சிக்கோடு இறங்கிய சங்குவேலி ஐக்கிய விளையாட்டுக்கழகம் 6:7 என்று புள்ளிகள் பெற்று வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தேர்வாகியுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற தாச்சிப் போட்டியில் நாவற்குழி சரஸ்வதி பி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து தாச்சிக்கோட்டிற்கு களமிறங்கிய மின்னொளி விளையாட் டுக்கழக அணி 12: 8 என்ற 4 புள்ளி வித்தியாசத்தில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு தெரிவாகியுள்ளது.

இதேவேளை, மாவை கணேசா விளையாட்டுக் கழகத்திற்கும் ஆலடி சிந்து விளையாட்டுக்கழகத்திற்கும் இடம்பெறவிருந்த போட்டி யில் மாவை கணேசா விளையாட்டுக்கழக அணி சமுகமளிக்காமையால் போட்டியின்றியே சிந்து விளையாட்டுக்கழகம் அடுத்த சுற்றுக்குத் தெரிவாகியது. (அ-5)

# அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

சுதுமலை தெற்கு மானிப்பாயை சேர்ந்த இராமலிங்கம் தனிநாயகம் என்பவரது 533634109V என்ற இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும். (அ-5)


" கோடு கச்சேரி " என்று அலைய வேண்டிய தேவையில்லை

ஆம். முற்பணமோ பிற்பணமோ கொடுத்தவர் கேட்ட கணத்தில் மீளளிப்பு. ஊரறிய பல இலட்சம் மீளளீத்த முன்மாதிரியான நிகழ்வு இங்கே மட்டும் தான்

பகிரங்கத் தன்மையான நிறுவனம்

கம்பனிப்பதிவுச் சட்டத்தின் கீழ்ப் பதியப்பட்டதுடன் (PV 82703) தங்கள் உள்ளக மாற்றங்கள் பற்றியும் தமது பலம் பலவீனம் பற்றியும் தாம் சார்ந்த சமூகத்திற்கு வெளிப்படையாக சொல்லும் தனித்துவமான பாங்கு உள்ளமை.

படிமுறையான விலாவாரியான நல்லது கெட்டது எல்லாம் சொல்லும் ஆலோசனை

விசா பற்றி மேலெந்தவாரியாக பேசி மொத்தமாக இவ்வளவு முடியும் என்று சொல்லாமல் விசா ஆலோசனையில் நடைமுறையில் உள்ள படிமுறைகள் பற்றியும் அதன் பிரதிகூலமான அம்சங்கள் பற்றியும் பக்குவமாய்ப் பகரும் முன் மாதிரி யானவர்கள்.

எனவே

விசா ஆலோசனை என்றால் அது திசைகாட்டியிடம் இருந்து மட்டும் தான்

எங்களிடம் அவுஸ்திரேலிய, மலேசிய, ஹொட்டல் முகாமைத்துவ கற்கை நெறி மாதாந்த வேதனத்துடன் நியூசிலாந்து குடும்ப விசா, பட்டதாரிகள், டிப்ளோமாதாரிகள், சைப்பிரஸ், கனடா மாணவர்களுக்குரிய விசா Visit Visa மறுக்கப்பட்ட விசா விண்ணப்பங்கள்

இன்னும்......

திசைகாட்டி

பிறைவேட் லிமிட்டெட் முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்

175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 568 9090, 021 221 9016



(சி-2641)

(சி-2641)






Why Choose BCAS for Law?

> இலங்கையில் ஒரு lawyer ஆக தொழில் புரிவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

> 3 வருட LLB (Hons) கற்கை நெறியை யாழ்ப்பாணத்திலேயே பூர்த்தி செய்ய முடியும்.

> இலங்கை சட்டக் கல்லூரி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) இனால் அங்கீகரிக்கப்பட்டது

> இலங்கை சட்டக் கல்லூரிக்கு Law college entrance exam இன்றி அனுமதி பெற்றுக்கொள்ளமுடியும்.

> Attorney படிப்பதற்கு BCAS Campus மேலதிக பயிற்சி வகுப்புக்களை நாடாத்துகின்றது.

> வயதெல்லை இன்றி அனைவரும் கலந்து கொள்ள முடியும்.

(சி-2633)

Macro Ads

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

For further details :
16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
021 2219910 / 0777 102131
www.bcas.lk
Colombo : 077 482 9765 | Kandy : 081 222 4731
Batticaloa : 077 766 6432 | Kurunegala : 077 387 4747

செய்யத்தக்கது இது என்று தெரிந்தும் எவன் அதைச் செய்யாமல் இருக்கின்றானோ அவனே கோழை.

*-கம்பூனியஸ்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வைகை நதியில் விழுந்த அடி போல வலம்புரிக்கு விழுந்த அடி

வைகை நதி பெருக்கெடுத்து ஓடுகின்றது. நதியின் பெருக்கைக் கட்டுப்படுத்த அணை கட்டும்படி பாண்டிய மன்னன் உத்தரவிடுகின்றான்.

மன்னனின் உத்தரவிற்குப் பணிந்து அணை கட்டும் பணியில் பாண்டிய நாட்டு மக்கள் ஈடுபடுகின்றனர்.

அந்த நாட்டில் பிட்டு அவித்து விற்கும் செம்மனச்செல்வி என்ற மூதாட்டி உடல் வலியும் துணை வலியும் இன்றி சொக்கநாதப் பெருமானைத் தொழுகின்றார்.

சிவபிரான் தானே கூலியாளாகச் சென்று செம்மனச்செல்விக்காக அணை கட்ட முன் வருகின்றார்.

தான் அணை கட்டுவதற்கு அவிக்கின்ற பிட்டை கூலியாகக் கேட்கின்ற நிபந்தனையும் நடந்தேறுகின்றது.

ஆனாலும், கூலியாளாக வந்த சிவன் அணை கட்டுவதில் ஆர்வமற்றவராக குந்தியிருக்கிறார்.

நிலைமையைச் சகிக்க முடியாத சேவகர்கள் சம்பவத்தை மன்னனிடம் முறையிட, கசையடி கொடுக்கும்படி உத்தரவிடுகின்றான் பாண்டியன்.

அந்தோ செம்மனச்செல்விக்காக அணை கட்ட வந்த கூலியாளின் முதுகில் மன்னனின் சேவகன் ஒருவன் ஓங்கி அடிக்கின்றான்.

என்னே! அதிசயம். அத்தனை உயிர்கள் மீதும் அந்த அடி விழுகிறது.

ஆ...! ஊ என்ற ரண ஓசைகள்.

ஆம், உலகாளும் பரம்பொருளுக்கு விழுந்த அடி உலகுக்கு விழுந்த அடியாகி விடுகின்றது.

அப்பளுக்கற்ற பரம்பொருளுக்கு விழுந்த அடி அனைவருக்குமானது போன்றதுதான் வலம்புரியின் செய்தியாளருக்கு நேற்று முன்தினம் விழுந்த அடியும்.

வலம்புரி நாளிதழ் நேர்மையுடனும் உண்மையாகவும் நடுவு நிலைமையுடன் செய்திகளை வெளியிடுவதில் ஒருபோதும் பின்நின்றதில்லை.

அத்தகைய ஒரு நாளிதழுக்கு அடி விழுந்ததெனில் அது அத்தனை ஊடகவியலாளர்களுக்கும் விழுந்த அடி என்பது உணரப்பட வேண்டும்.

அடி விழுந்தாலும் என்னுடைய ஆளுக்குத்தான் அடி விழவேண்டும். அதுவே என் பிழைப்புக்கு ஆதாரம் என்ற சின்னத்தனங்கள் இருக்கின்ற இந்த மண்ணில், வலம்புரிச் செய்தியாளர் தாக்கப்பட்டதை வைத்து சுயலாபம் தேடவோ, வீடுவீடாகச் சென்று கண்டனக் கடிதம் வேண்டிப் பிரசுரிக்கவோ வலம்புரி ஒருபோதும் தயார் இல்லை.

ஆனாலும் எங்களில் ஒருவன் அடிபட்டு விட்டான். அவனில் ஏற்பட்ட உடல் காயங்கள்; அதனால் அவனின் குடும்பம் கொண்ட வேதனைகள் தொடர்பில் எங்கள் இதயம் நெக்குருகின்றன.

என்ன செய்வது ஊடகத் துறையிலும் விலை போனவர்கள் இருப்பதால் இத்தனை துன்பங்கள்.

பரவாயில்லை; உள்ளூர் ஊடகவியலாளர் என்று உவமை இட்டவர்கள் எங்கள் முதுகில் குத்தி ஏற்படுத்திய வலியைச் சுமக்கும் நாம் இந்த வேளையில் நடுவுநிலை தவறாத நன்னெறி காப்போம் என்று மீண்டும் சபதம் செய்கிறோம்.

# கருத்து சுதந்திரத்தை ஒடுக்கவே செய்தியாளர் மீது தாக்குதல்

## தமிழரசுக் கட்சி கண்டனம்



(யாழ்ப்பாணம்)

வலம்புரி பத்திரிகையின் அலுவலகச் செய்தியாளர் உதயராசா சாளின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவமானது கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்கும் நடவடிக்கை எனத் தெரிவித்த இலங்கைத் தமிரசுக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் சீ.வீ.கே.சிவஞானம் ஊடகவியலாளர் மீதான தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக தனது கண்டன அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையைப் பொறுத்த வரை கருத்துச் சுதந்திரமும், மனித உரிமைகளும் ஒடுக்கப்படுவது தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.

அத்தோடு கருத்துச் சுதந்திரமும், மனித உரிமையும் இலங்கையில் உள்ளதா என்ற கேள்வி எழுவதும்நியாயமானது.

வலம்புரிபத்திரிகையின்செய்தியாளர் உதயராசா சாளின் மீது இனம்தெரியாத நபுர்கள் எனக் கூறப்படுபவர்கள் 6 பேர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3.45 மணியளவில் வீதியில் வைத்து மூர்க்கத்தனமாக தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த செய்தியாளர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எனவே வலம்புரி செய்தியாளர் சாளின் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுத்து குற்றவாளிகளைக் கண்டறிந்து சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

அப்பாவிச் செய்தியாளர்கள் தாக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும், கருத்துச் சுதந்திரமும் மனித உரிமையும் பேணப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

## விருது பெற்றவருக்கு பாராட்டு விழா

தேசிய ரீதியில் தேசமானி, லங்காபுத்திர, விஸ்வகீர்த்தி ஆகிய பட்டங்களை பெற்ற தெல்லிப்பழை லயன் ச. ஆறுமுகநாதனின் பாராட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் செஞ் சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.எஸ். தங்கராஜா, சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் லயன்சு.முரளிதரன், இலங்கைசெஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்ட துணைத்தலைவர் லயன் வைத்தியர் வை.தியாகராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆசியுரைகளை கீரிமலை நகுலேஸ்வர ஆதீன முதல்வர் ராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள், ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான் பிரதமகுரு சிவஸ்ரீ வா. அகிலேஸ்வரக் குருக்கள், ஆஞ்சநேயர் கோவில் முதல்வர் சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக்குருக்கள், தோதரை அம்மன் ஆலய பிரம்மஸ்ரீ இ.கணேசமூர்த்தி சர்மா ஆகியோர் வழங்கவுள்ளனர். (அ-5)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### இன்பம் எது



சூசுங் கொலைகள வொழித்திட லின்பம்
மாசுடை மதுவகை நீக்கிட லின்பம்
பூசலும் பகைமையும் போக்கிட லின்பம்
தேசத் தொற்றுமை யோம்பிட லின்பமே

நல்லன புரிந்திடல் நவின்றிட லின்பமே
அல்லன வஞ்சி யகற்றிட லின்பம்
புல்லியோர் பிழையெலாம் பொறுத்திட லின்பம்
தொல்லைக ளல்லல்கள் தாங்கிட லின்பமே

## இறைவனிடம் வருந்தி மன்னிப்பு கோருவோம்; பிறரின் மனமாற்றத்தில் மகிழ்வோம்

இன்று நமக்கு தரப்படும் வேதாகமப் பகுதி ஊதாரி மைந்தனின் உவமைக் கதையை சிந்திப்பதற்கு அழைக்கின்றது. ஒருவருக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள். இளையவர் தந்தையை நோக்கி சொத்தில் எனக்கு உரிய பங்கைத் தாரும் எனப் பெற்று தூர நாட்டிற்குப் பயணம் மேற்கொண்டார்.

அங்கு ஊதாரியாக வாழ்ந்து தன்னிடமிருந்த சொத்தையும் பாழாக்கினார். எதுவுமின்றி பின்பு பன்றிகள் தின்னும் நெற்றுக்களால் தம் வயிற்றை நிரப்ப விரும்பினார். ஆனால் அதைக்கூட அவருக்குக் கொடுப்பார் யாருமில்லை. கடவு

### பரமபிதா காட்டிய பாதை

ளுக்கும் தந்தைக்கும் எதிராக நான் பாவம் செய்தேன் என தவறை உணர்ந்து தந்தையிடம் திரும்பி வரும்போது தொலைவில் வந்து கொண்டிருந்தபோதே அவர் தந்தை அவனைக்கண்டு, பரிவு கொண்டு, ஓடிப்போய் அவரைக் கட்டித் தழுவி முத்தமிட்டார்.

தன் தம்பி வந்திருக்கிறார் என்று தந்தை கொழுத்த கன்றை அடித்து விருந்து வைப்பதில் சினமுற்று உள்ளே போக விருப்பம் இல்லாதவராக மூத்தபுதல்வர் வெளியே நிற்கிறார். தந்தை அவரை உள்ளே வருமாறு கெஞ்சிக் கேட்கிறார். அவர் மறுக்கிறார். ஊதாரி மகன் எந்த அளவுக்குத் தன் சொத்துக்களை அழிப்பதில் ஊதாரியாக இருந்தானோ அந்த அளவுக்கு அன்பு காட்டுவதிலும் இரக்கம் அளிப்பதிலும் ஊதாரியாக இருந்தார் தந்தை.

இந்தக் கதையில் வருகிற தந்தை, ஊதாரி மைந்தன், அவனது சகோதரன் மூன்று பேருமே மூன்று மன நிலைகளைச் சித்திரிக்கிறார்கள் என்பது எமக்கு நன்கு புலப்படுகிறது.

தந்தை அன்பின், பரிவின், நிபந்தனையற்ற மன்னிப்பின் மனநிலையைப் பிரதிபலிக்கிறார். ஊதாரி மைந்தன் வறுமையில் வாடி, தன்மானம் இழந்து, மீண்டும் தந்தையைத்தேடி வருவதைப் பார்க்கிறோம். அவன் நேர்மையான மனத்துயரைப் பிரதிபலிக்கிறான். அறிவுத் தெளிவு பெற்றதும் தந்தையிடம் திரும்பி வந்தான். அத்துடன் மகனாக அல்ல வேலையாளாகப் பணி செய்ய முன்வந்தான். அந்த மகன் தந்தைக்கு எதிராகத் திரும்பினாலும் தந்தை நிபந்தனையற்ற அன்பைதன் மகன் மேல் வைத்திருந்தார்.

அவர் தனது அன்பளிப்பாக தன் மகனுக்கு அளவற்ற அன்பைக் கொடுத்தார். மகனோ தனது தந்தைக்குக் கொடுத்த அன்பளிப்பு என்னவென்றால் தந்தையின் அன்பை திறந்த மனதோடு ஏற்றுக்கொள்ளத் தயாராக வந்தது தான். மூத்த மகன் குறைகாணும் மன நிலையை, பொறாமையை, நன்மையை ஏற்றுக்கொள்ளாத மனதை, தீர்ப்பிடும் மனநிலையைப் பிரதிபலிக்கிறான்.

அந்த இளைய மகன் தந்தையின் அன்பு, பாசம், உறவு அனைத்தையும் அலட்சியப்படுத்தினான். வாரிச்சென்ற பொன், பொருளையும் தாறுமாறாக வாழ்ந்து அழித்தான். சொத்தையும் பணத்தையும் பயன்படுத்தி உழைத்ததாகவோ, உழைத்து நட்டமடைந்ததாகவோ கதையில் சொல்லப்படவில்லை.

மாறாக நெடும் பயணம், தாறுமாறான வாழ்க்கை , பாழாக்கும் பழக்கம், கெட்ட நட்பு, சூழல் இவற்றில் அனைத்தையும் செலவழித்துள்ளான். விளைவு பஞ்சம், வறுமை, இழப்பு,தனிமை,மிருகங்களோடு வாழ்க்கை அவனுக்கு மட்டுமா இந்த நிலைமை. அவன் வாழ்ந்த சூழ்நிலையும் பாதிக்கப்படுகிறது. பன்றிகள் தின்னும் நெற்றுக்குக் கூட அங்கு பஞ்சம். அந்த நாடு முழுவதும் வறட்சி, பஞ்சம் வீணாக்கவேண்டாம், விரயம் செய்யவேண்டாம், பஞ்சத்திற்கு நாங்கள் ஒரு சிறிய காரணமாகவும் இருக்க வேண்டாம். ஆண்டவன் தந்த உறவையும் பாசத்தையும் பரவலாக்குவோம். பொன்னையும்பொருளையும் இல்லாரோடு பகிர்வோம்.



**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

இளையமகன் கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாசம் செய்தேன் என்று ஒத்துக்கொள்கிறான். ஆனால், மூத்த மகனோ வெளிப்படையாக எந்தப் பாவமும் செய்யவில்லை. மாறாக தந்தையின் பரிவைக் கண்டு சினமுற்று உள்ள போகவிருப்பம் இல்லாது வெளியே நிற்கிறார்.

நாமும் சிலவேளைகளில் இறைவனின் இரக்கத்தில் எரிச்சல் கொள்கிறோம். மனமாற்றம் அடைவோரைக் கண்டு கேலி செய்து இறைவனையே அவமதிக்கிறோம். இங்கு கடவுளின் நிபந்தனையற்ற மன்னிப்பையும் அளவற்ற அன்பையும் ஏற்றுக்கொள்வதற்கு நாம் தகுதியானவர்களா இத்தவக் காலத்தில் இறைவனிடம் வருந்தி மன்னிப்பு கோருவோம். பிறரின் மனமாற்றத்தில் மகிழ்வோம்.

## கள்ளக் காதலியை கடத்தி கொலைசெய்து உடல் பாகங்களை நாய்க்கு கொடுத்த

# பிரேசில் காற்பந்து வீரருக்கு 22 வருட சிறை



பிரேசில் காற்பந்து வீரர் ப்ரூனோ பெர்னாண்டஸ் டிசோசா தமது கள்ளக் காதலியை கடத்தி கொலை செய்து அவரது உடலை துண்டுகளாக்கி நாய்களுக்கு உணவாகப் போட்ட பயங்கரத்தை ஒப்புக் கொண்டிருக்கிறார்.

பிரேசில் நாட்டின் பிளமிங்கோ கால்பந்து கிளப் அணியில் கோல் காப்பாளராக இருப்பவர் ப்ரூனோ. இவரது கள்ளக் காதலி எலீசா சமுடியோ. இருவருக்கும் இடையேயான உறவில் குழந்தை பிறந்திருக்கிறது.

குழந்தை விடயத்தில் ப்ரூனோ தொடக்கம் முதலே விரும்பவில்லை. ப்ரூனோவின் எதிர்ப்பையும் மீறி எலீசா குழந்தை பெற்றெடுத்தது ப்ரூனோவுக்கு எரிச்சலாகி இருக்கிறது.

இதைத் தொடர்ந்து தமது நண்பரும், பொலிஸ் அதிகாரியுமான சாண்டோஸ் என்பவரை அணுகி எலீசாவை கொலை செய்யக் கூறியிருக்கிறார்.

இதையடுத்து ரியோடிஜெனிரோ நகரிலிருந்து எலீசாவைக் கடத்திய லூயிஸ், பெலோ ஹாரிசான்டே என்ற நகருக்குக் கொண்டு சென்று அங்கு ஒரு வீட்டில் அடைத்து வைத்து சித்திரவதை செய்துள்ளார்.

அதன் பின்னர் ப்ரூனோ முன்னிலையில் எலீசா கொல்லப்பட்டிருக்கிறார். பின்னர் உடலை துண்டு துண்டாக வெட்டியுள்ளனர். எலீசாவின் சில பாகங்களை தமது வீட்டில் வளர்த்து வந்த நாய்க்குப் போட்டுவிட்டு உடல பாகங்களை வீட்டிலேயே கான்கிரீட் வைத்து பூசி புதைத்துவிட்டார் ப்ரூனோ.

இந்தக் கொடூர கொலை தொடர்பாக ப்ரூனோ, அவரது மனைவி உட்பட 8 பேர் மீது குற்றம்சாட்டப்பட்டது. தொடக்கத்தில் தம் மீதான இந்தக் குற்றச்சாட்டுகளை நிராகரித்தே வந்தார் ப்ரூனோ.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற நீதிமன்ற விசாரணையின் போது அவர், எலீசாவை கொலை செய்து உடல் துண்டுகளை நாய்க்குப் போட்டதை ஒப்புக் கொண்டார். ப்ரூனோ குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து அவருக்கு 22 ஆண்டுகால சிறைத் தண்டனை வழங்கப் பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு உலகக் கிண்ண காற்பந்தாட்டப் போட்டியில் விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் ப்ரூனோவின் கனவு தகர்ந்து போன்து.



## காற்பந்துப் போட்டியில் நடுவர் தாக்கப்பட்டார்

காற்பந்து போட்டியில் 'ரெட் காட்' காட்டிய லெபனான் நடுவரை, வீரர்கள் அடித்து உதைத்தனர். லெபனானில் இரண்டாம் பிரிவு காற்பந்து போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இதில் அல்-நாக்டா, அல்-சலாம் அணிகள் மோதின. முரட்டு ஆட்டம் ஆடிய அல்-நாக்டா வீரர் யூசெப ஓமருக்கு, நடுவர் (லெபனான்) முத லில் மஞ்சள் அட்டை காட்டினார்.

இதற்கு அவர் எதிர்ப்பு தெரிவித்து வாக்கு வாதம் செய்ய, நடுவர் உடனடியாக 'ரெட் காட்' காட்டி வெளியேறச் சொன்னார். ஆத்திரம் அடைந்த யூசெப், நடுவரை ஓங்கி அடித்தார். இவரிடம் இருந்து தப்பிக்க, மைதானத்தின் பல பகுதிகளுக்கு ஓடிய அவரை, வேறு சில வீரர்களும் சேர்ந்து விரட்டி விரட்டி சென்று உதைத்தனர். பின் பாதுகாவலர்கள் தலையிட்டு நடுவரை மீட்டனர். உதை வாங்கிய நடுவர், இனி 'நடுவர்' பணியை செய்ய மாட்டேன் என்று அறிவித்துள்ளார்.

## சன்ரைஸர்சுக்கு வக்கார் யூனிஸ்



6ஆவது ஐபிஎல் போட்டியில் விளையாடவுள்ள சன் ரைஸர்ஸ் ஹைதராபாத் அணியின் பந்துவீச்சு பயிற்சியாளராக பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரும் வேகப் பந்து வீச்சாளருமான வக்கார் யூனிஸ் நியமிக்கப்பட்டுள்ளார். மேற்கண்ட தகவலை சன்ரைஸர்ஸ் அணி நிர்வாகம் டுவிட்டர் மூலம் தெரிவித்துள்ளது.

## 3 வீரர்கள் சதம்; வலுவான நிலையில் இலங்கை

பங்களாதேசுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணியின் 3 வீரர்கள் சதமடித்து கைகொடுக்க 4 விக்கெட்டுக்களை இழந்து 570 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

காலியில் இடம்பெற்று வரும் இந்த ஆட்டத்தில் முதல் நாள் 3 விக்கெட்டுக்களை இழந்து 361 ஓட்டங்களைப் பெற்றிருந்த இலங்கை அணி நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் ஆரம்பித்து சிறிது நேரத்தில் அணித் தலைவர் மெத்தியூஸ் 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த சண்டிமால் களத்திலே நின்ற திரிமெனவுடன் இணைந்து சிறப்பான இணைப்பாட்டம் ஒன்றை இலங்கை அணிக்கு கொடுத்தனர். இருவரும் இணைந்து பங்களாதேஸ் பந்து வீச்சுக்களைச் சிதறடித்தனர். இந்த இணைப்பாட்டத்தை உடைக்க பல பந்து வீச்சாளர்களை பயன்படுத்தியபோதிலும் அது கைகூடவில்லை.



ஒருகட்டத்தில் இலங்கை அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 570 ஓட்டங்களைப் பெற்றபோது ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. களத்திலே நின்ற திரிமென-சண்டமால் ஜோடி ஆட்டமிழக்காமல் 272 பந்துகளை சந்தித்து 203 ஓட்டங்களைப் பெற்றது. திரிமென 14 பவுண்டரி உட்பட 155 ஓட்டங்களையும், சண்டிமால் 12 பவுண்டரி, 2 சிக்ஸ் உட்பட 116 ஓட்டங்களையும் பெற்றனர். ஏற்கனவே முதல் நாள் ஆட்டத்தில் சங்கக்கார 142 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிவரும் பங்களாதேஸ் அணி 2 விக்கெட்டுக்களை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. துடுப்பாட்டத்தில் அஸ்றபுல் 65 ஓட்டங்களையும் ஹக் 35 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுள்ளனர். 3 ஆம் நாள் ஆட்டம் இன்றாகும்.

## யுவராஜ் புத்தகம் ஏலத்தில்

இந்தியாவின் அதிரடி சகலதுறை வீரர் யுவராஜ் சிங் பற்றிய 'தி டெஸ்ட் ஆஃப் மை லைஃப்" என்ற புத்தகத்தின் முதல் 20 பிரதிகள் இணையத்தில் ஏலம் விடப்படுகிறது. இந்த ஏலம் ஒரு வாரத்துக்கு நடைபெறுகிறது. இதில் கிடைக்கும் நிதி, யுவராஜ்சிங்கின் ' யு வி கேன்' புற்றுநோய் அறக்கட்டளைக்கு வழங்கப்படவுள்ளது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட யுவராஜ் அவர அனுபவித்த துன்பங்கள், சோதனைகள் மற்றும் அதிலிருந்து மீண்டது குறித்த அனுபவங் களை இந்தப் புத்தகத்தில் பகிர்ந்துள்ளார். இந்தப் புத்தகத்தில் யுவராஜின் கையெழுத்து மற்றும் அவர் தனது கைப்பட எழுதிய கடிதமும் இடம்பெற்றுள்ளது.


விஜேந்தர் சிங்

## இங்கிலாந்து சிறப்பான ஆட்டம்

இங்கிலாந்து அணிக்கும் நியூசிலாந்து அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியின் நான்காம் நாளில் இங்கிலாந்து அணி சிறப்பான பதிலடியை வழங்கியுள்ளது.

7 விக்கெட்டுக்களை இழந்து 402 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய ஆட்டத்தைத் தொடர்ந்த நியூசிலாந்து அணி 460 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுக்களை இழந்து தனது இன்னிங்ஸை நிறுத்திக் கொண்டது.



துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து அணி சார்பாக ஹேமிஸ் றதர்போர்ட் 171 ஓட்டங்களையும், பீற்றர் ஃபுல்ற்றன் 55 ஓட்டங்களை யும், பிரென்டன் மக்கலம் 74 ஓட்டங்களை யும், புரூஸ் மார்ட்டின் 41 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஜேம்ஸ் அன்டர்சன் 4 விக்கெட்டுக்களையும், ஸ்ருவேர்ட் ப்ரோட் 3 விக்கெட்டுக்களையும், மொன்டி பனசர், ஸ்டீவன் ஃபின் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

293 ஓட்டங்கள் பின்னிலையில் காணப்பட்ட நிலையில் தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி நேற்றைய நாள் முடிவில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 234 ஓட்டங்களைக் குவித்துள்ளது. துடுப்பாட் டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக அலஸ்ரெயர் குக் 116 ஓட்டங்களையும், நிக் கொம்ப்டன் ஆட்டமிழக்காமல் 102 ஓட்டங்களையும் பெற்றனர். இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத் தாடியிருந்த இங்கிலாந்து அணி 167 ஓட்டங்க ளுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சர்ச்சையில் சிக்கினார் குத்துச் சண்டை வீரர்

பஞ்சாப் மாநிலம் சண்டிகர் அருகே 600 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் அனுப் சிங் கோலன் என்பவரை பொலிஸார் கைது செய்து விசாரித்தபோது ஜிராக்பூரில் உள்ள அவரது வீட்டிலிருந்து ரூ.130 கோடி மதிப்பிலான ஹெராயின் உள்ளிட்ட போதை மருந்துகள் கைப்பற்றப்பட்டன. அதில் 10 கிலோ அந்த குடியிருப்பிற்கு அருகில் உள்ள கார் தரிப்பிடத்தில் இருந்து கைப்பற்றப்பட்டது. அதன் அருகில் குத்துச்சண்டை வீரர் விஜேந்தர் சிங்கின் மனைவி கார் நிறுத்தப்பட்டிருந்தது. கைது செய்யப்பட்ட நபரிடம் விசாரித்தபோது, ஹெராயின் போதைப் பொருளை குத்துச்சண்டை வீரர் விஜேந்தருக்கு கொண்டு சென்றதாக தெரிவித்தார். இதுதொடர்பாக பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஆனால் இந்த குற்றச்சாட்டை விஜேந்தர் மறுத்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில், 'நிறைய பேரை நான் சந்தித்திருக்கிறேன். அதேபோல், கைது செய்யப்பட்டவரை ஒருவர் மூலம் சந்தித்தேன். ஆனால், அவரை தனிப்பட்ட முறையில் எனக்கு தெரியாது. எனது நண்பர் என் காரை எடுத்துக் கொண்டு போய் அனுப்சிங் வீட்டின் அருகில் நிறுத்தியிருக்கலாம். எனவே, கைது செய்யப்பட்ட நபர், வழக்கில் இருந்து தப்பிக்கும் முயற்சியாக என் பெயரை பயன்படுத்தியிருக்கலாம்" என்றார்.

இந்திய குத்துச்சண்டை விளையாட்டின் நட்சத்திர வீரராக திகழும் விஜேந்தர் சிங், 2008இல் நடந்த ஒலிம்பிக் போட்டியில் வெண்கலம் வென்றார். 2010இல் நடைபெற்ற ஆசிய போட்டியில் தங்கம் வென்றார். இவரது சாதனையைப் பாராட்டி விளை யாட்டின் உயரிய விருதான கேல் ரத்னா விருது வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# அனுஷ்காவுடன் ரெய்னா காதல்




இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடித் துடுப் பாட்ட வீரான சுரேஸ் ரெய்னாவுக்கும் இந்தி நடிகை அனுஷ்கா சர்மாவிற்கும் இடையே காதல் ஏற்பட்டு இருவரும் ஒன்றாக பல்வேறு இடங்களில் ஊர் சுற்றிவந்தனர்.

இந்த இருவரது காதல் கடந்த ஆண்டு பரபரப்பாகப் பேசப்பட்டது.

ஆனால் இருவரும் தங்களுக்குள் காதல் எதுவும் இல்லை என்று கூறி வந்தனர் .

இந்த நிலையில் அனுஷ்கா சர்மாவுடன் காதல் இருப்பதை ரெய்னா ஒப்புக் கொண்டார்.

இது தொடர்பாக அவர் கூறுளகையில், புது நடிகை அனுஷ்கா சர்மாவின் நடிப்பு எனக்கு மிகவும் பிடிக்கும். அவர் எனக்கு பிடித்தமானவர்.

தற்போதைய தலை முறையில் ரன்பீர் கபூர் மிகவும் பிரமாதமாக நடிக்கிறார் என்றும் எனது திருமணம் குறித்து எனது குடும்பத்தினர் ஆலோசனை செய்து வருகின்றார்கள் எனவும் கூறியுள்ளார்.

# ராகுல் காந்தி...

இதனால் உலகத் தமிழர்களும், மனித உரிமை அமைப்புக்களும், அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளும் கொதித்து எழுந்தன. ஆனால் பாலச்சந்திரன் கொல்லப்பட்டது. சரிதான் என்று சுப்பிரமணியம் சுவாமி கருத்து தெரிவித்தார்.

இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு தமிழக தலைவர்களை டெல்லியில் சந்தித்த அக் கட்சியின் துணை தலைவர் ராகுல்காந்தி, பாலச்சந்திரனின் படுகொலை உலகத்தை உலுக்கியது போலவே தனது மனதையும் பாதித்துவிட்டது என உருகிப் போய் சொன்னாராம்.

விரைவில் பாலச்சந்திரன் படுகொலை குறித்து ராகுல் காந்தியிடம் இருந்துஇரங்கல் தகவல் வெளியாகலாம் என டெல்கி அரசியல் வட்டாரம்கள் கூறுகின்றன. (செ-11)

# பொதுநலவாய...

காணிக்கும் நோக்குடன் கூரம் ஷேக்கின் சகோதரரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சைமன் டான்சக் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்.

அத்துடன் பிரித்தானிய பிரஜையின் படுகொலை தொடர்பிலான விசாரணைகளை இலங்கை அரசு விரைந்து மேற்கொள்ளாமை குறித்து அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டை இலங்கையில் நடத்தக் கூடாது என சர்வதேச மனிதவுரிமை அமைப் புகளும், பல்வேறு நாடுகளும் வலியுறுத்தி வரு கின்றன.

இந்நிலையில் கொழும்பில் இடம்பெறவுள்ள பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டில் பிரித்தானிய மகாராணி கலந்து கொள்ளக்கூடாது என சைமன் டான்சக் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைத்...

இலங்கைத்தமிழர்கள் தற்போதுசமாதானத்தை அனுபவித்து வருகின்றனர்.

அண்மையில் சென்னையில் மீனவ சமூகத்தைச் சேர்ந்த தமிழகத் தமிழர் ஒருவர் இலங்கை போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமெனக் கோரி தற்கொலை செய்து கொண்டார்.

தற்கொலை செய்துகொண்டவரின் கடிதம் பாதி தட்ச்சு செய்யப்பட்டுள்ளதுடன், மீதி கையால் எழுதப்பட்டுள்ளது. இது தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அமர்வுகள் நடைபெறும் காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகள் மிகவும் கடுமையான ஊடகப் பிரச்சாரங்களை முடுக்கி விடுகின்றனர்.

இவ்வாறன ஊடகப் பிரசாரங்களால் தமிழ் மக்களை திசை திருப்ப முடியாது எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (செ-11)

# கடும் நிபந்தனைகளுடு...

இலங்கை மீதான அமெரிக்காவின் புதிய பிரேரணையின் நகல் வரைபு ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து இந்தப் பிரேரணை தொடர்பில் விவாதிப்பதற்காக நேற்று முன்தினம் ஜெனிவாவில் கூட்டம் ஒன்றும் இடம் பெற்றது. இக்கூட்டம் ஜெனிவா நேரப்படி நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5.10 மணி வரை இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கை மீதான அமெரிக்காவின் பிரேரணை வலிமையற்றது என்றும், இதனால் கடுமையான நிபந்தனைகளை உள்ளடக்கி இப்பிரேரணை கொண்டு வரப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

அதேவேளை இலங்கை மீதான அமெரிக்காவின் பிரேரணையை ரஷ்யா, பாகிஸ்தான், சீனா மற்றும் கியூபா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் எதிர்த்துள்ளனர். இந்தப் பிரேரணையில் உள்ள சொற்பதங்களில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் எனவும் இந்நாடுகளின் பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

அதேபோன்று சியாராலியோன் மற்றும் அங்கோலா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளும் அமெரிக்காவின் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொற்பதங்களில் மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளனர்.

ஜெனிவாவில் இலங்கை மீதான பிரேரணையின் உள்ளடக்கத்தை அமெரிக்கா நேற்று மீண்டும் சமர்ப்பித்திருந்தது. இந்தப் பிரேரணையின் விபரம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் நல்லிணக்கத்தையும் பொறுப்புக்கூறும் கடப்பாட்டையும் மேம்படுத்துதல் எனும் தலைப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்தப் பிரேணையில், இலங்கையில் இடம்பெற்ற மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை வெளியிட்ட அறிக்கையின் அடிப்படையில், போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என அமெரிக்கா திருத்தம் செய்துள்ளதாகத் தெரிய வருகின்றது. ஆயினும், இறுதி நேரத்தில் இவ்வரைபில் மாற்றங்கள் செய்யப்படவும் வாய்ப்புண்டு எனக் கருதப்படுகின்றது.

அதேவேளை இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டதாக எழுந்த பாரிய குற்றச்சாட்டுகளுக்கு நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையும், தேசிய நடவடிக்கைத் திட்டமும் பதிலளிக்கவில்லை என இவ்வரைபு தெரிவித்துள்ளது.

அத்துடன், இலங்கையில் தொடர்ந்தும் காணாமல்போதல், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் போன்றோர் தொடர்ந்து அச்சுறுத்தலுக்கு உள்ளாவது, நீதித்துறை மீதான அச்சுறுத்தல்கள் ஆகியவை குறித்து இவ்வரைபு கவலை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை வழங்குவது உள்ளிட்ட வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்ற இலங்கை அரசாங்கம் தவறிவிட்டது என்றும் இந்த வரைபு சுட்டிக்காட்டியுள்ளது. (செ-11)



# தேருநர் இடாப்புத் திருத்தம் 2013

**நினைவில் வைத்திருப்போம். உரிமையை பாதுகாப்போம்.**

**இலங்கையில் வருடாந்தம் இடம் பெறும் தேருநர் இடாப்புத் திருத்தம் தொடர்பாக நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியவை**

வருடாந்த தேருநர் இடாப்புத் திருத்தப் பணியானது நாடு முழுவதும் ஒவ்வொரு ஜூன் மாதமும் 1ஆந் திகதியிலிருந்து உத்தியோக பூர்வமாக ஆரம்பமாகிறது.

இதில் உங்கள் பெயரை உள்வாங்கத் தேவையான படிவம் (BC Form) கிராம உத்தியோகத்தரால் அல்லது கணக்கெடுப்பு அலுவலரால் வழங்கப்படும்.

## வாக்காளர் பதிவிற்கான (உத்தேச) கால அட்டவணை

வாக்காளர் பட்டியல் (BC படிவம்) குடும்பத் தலைவரிடம் கையளிக்கப்படல் (ஜூன், ஜூலை)

→ பூர்த்தி செய்யப்பட்ட BC படிவத்தை கிராம அலுவலர் மீளப் பொறுப்பேற்றல் (ஜூன், ஜூலை, ஆகஸ்து)

→ UE படிவத்தை விண்ணப்பித்தல் (ஜூலை 15 - செப்டம்பர்)

→ பட்டியலைக் காட்சிப்படுத்தல், முறையீடு (அக்டோபர், நவம்பர்)

→ கோரிக்கை, ஆட்சேபணை, விசாரணை (நவம்பர், டிசம்பர்)

(தேர்தல் திணைக்களத்தின் திட்டங்களின்படி இத்திகதிகளில் மாற்றம் ஏற்படலாம்)

**நினைவில் கொள்ளுங்கள்!**

தொடர்ந்து இரண்டு வருடங்களுக்கு மேல் தேருநர் இடாப்பில் பெயர் சேர்க்கப்படாதோர் UE படிவத்தை, உரிய கோரிக்கைப்படிவத்தைப் பெற்றுப் பூர்த்தி செய்து விண்ணப்பிக்க முடியும்.

இப்படிவங்களைப் பூர்த்தி செய்யும் போது உங்கள் தேசிய அடையாள அட்டையைப் பின்பற்றுதல் அவசியமாகும்.

2013 ஆம் ஆண்டிற்கான பூரணமான தேர்தல் இடாப்பைத் தயாரிப்பதில் உங்கள் பங்களிப்பைச் செய்யுங்கள்.

எனவே உங்கள் பெறுமதிமிக்க வாக்குரிமையைப் பாதுகாப்பதை நினைவில் கொண்டு தொடர்ந்து செயற்படுங்கள்.

31/AC/ 59204

**மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்**

**077 5757189 | 077 8415543 | 077 6513729 | 075 8086565**

ப.:.வ்ரல், 12/3, றொபற் ரெறஸ், றொபற் குணவர்தன மாவத்தை, கொழும்பு 06.

தொலைபேசி : 011 2514441/2 தொலை நகல் : 011 2514443 இணையத்தளம் : www.paffrel.lk

ப.:.வ்ரல்

Activity supported by the Canada Fund for Local Initiatives

Activité réalisée avec l'appui du Fonds canadien d'initiatives locales

Canada

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் நிர்மலாதேவி



நவாலி களையோடை அம்மன் வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கொண்ட சுப்பிரமணியம் நிர்மலாதேவி 09-03-2013 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் மனைவியும், புலேந்திரன்(புலந்தி) தேவராசா (அப்பன்), புஸ்பவதி, செல்வம், கலாவதி ஆகியோரின் பாசமிகு தாயும், இராஜேஸ்வரி, புவனேஸ்வரி, கலாவதி, மோகனசுந்தரம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நவாலி ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.** (2133)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:
T.P.: 021 321 0815,
021 567 1540
E-mail: valampurii@yahoo.com

ST.ANTONY'S இல்
கணினி மலிவு விற்பனை



Hp Fullset Computer
Free - Head Phone/ 8 GB Pen / WEBCAM மேலும்
Laptop PC, TABLET PC, Desk Top PC
Sony 14" TV - 8900/-
16" LED TV- 19 850/-
24750/= மட்டும்
ஒரு வருட உத்தரவாதம்.
மிகவும் மலிவு விலையில்
187, K.K.S. Road, Jaffna.
021 222 4865, 0750698608

PC MATE SYSTEMS
Computer Sales & Repair
உங்களது கணினியில் ஏற்படும் Software/Hardware/Virus பிரச்சினைகளுக்கு சிறப்பாகவும் மிக விரைவாகவும் தீர்வைப்பெற்றுக்கொள்ள எங்களை நாடுங்கள்.
மலிவு விலையில்
Core 2 duo, Dual Core , LGA HT Branded Computers
478 Mother Board
LGA DDR2 Board
DDR/DDR2 Rams
IDE/SATA HDD
LCD Monitors
Computers
எமது புதிய கிளை
746B பருத்தித்துறை வீதி நல்லூர்
யாழ் மாநகரசபை முன்பாக
0779689043

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
French மொழி கற்பதற்கு French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இவ்அரிய சந்தர்ப்பத்தினை தவறவிடாதீர்கள். மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.
புதிய வகுப்புகள் மிக விரைவில்... T.P.:021 222 8093
61, Kachcheri-Nallur Road, Jaffna
(றக்கா வீதியும் கச்சேரி -நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்) (2088)




## பற்களின் கூர்உணர்ச்சி என்பது நீங்கள் எண்ணுவதை விடவும் பாரதூரமான ஒன்றாக அமையலாம் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்களா?

சூடான, குளிரான, புளிப்பான அல்லது இனிப்பான, ஏதேனும் ஒன்றை நீங்கள் உள்ளெடுக்கும் சமயத்தில் உங்களுடைய பற்களில் சிறிய நேரத்திற்கு ஏற்படுகின்ற கூரிய வலியே பற்களின் கூர் உணர்ச்சி எனப்படுகின்றது. பற்களில் கூர்உணர்ச்சி உள்ள போது கூரிய வலி ஏற்படுவதும், பின்னர் அற்றுப்போவதுமான நிலைமை காணப்படுகின்றது. இதற்கு ஆரம்பத்திலேயே உரிய சிகிச்சையை மேற்கொள்ளாத பட்சத்தில் நிலைமை மோசமாக மாறலாம்.

## உரிய காலத்தில் சிகிச்சையை மேற்கொள்ளாது அலட்சியமாக இருந்து உங்களுடைய வாழ்வில் மோசமான பாதிப்பிற்கு முகங்கொடுக்க வேண்டாம்

பற்களின் கூர்உணர்ச்சிக்கு உரிய சிகிச்சையை மேற்கொள்வது மிக முக்கியமானது. உங்களுடைய பல்வைத்தியரிடம் இது தொடர்பான மேலதிக விபரங்களையும், உரிய ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

ஆரோக்கியத்திற்கான இச்செய்தியை உங்களுக்கு வழங்குவது இலங்கை பல் மருத்துவர்கள் சங்கம்

வர்த்தக சமூக நலன்புரி முன்னெடுப்பு - கிளக்ஸோஸ்மித்கிளைன்

SRI LANKA DENTAL ASSOCIATION

GlaxoSmithKline

GREY

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.